# வைகறை வெளிச்சம்

ஆசிரியர் **மு.குலாம் முஹம்மத்**

Volume-16
Issue-2

பிப்ரவரி-2023 (ரஜப்-1444)

விலை ரூ. **40 /-**




## காவி மயமாகும் நீதித்துறை

- தொடர்கள்
- மருத்துவம்
- மகளிர் மன்றம்
- குழந்தை வளர்ப்பு

# டெல்லி கலவரம்

## வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள்

- 2020 டெல்லி கலவரம் பற்றிய ‘‘குடிமக்கள் குழுமத்தின்’’ அறிக்கை

**குஜராத் மோடி கேள்வி?**
**BBC என்ற ஆவணப்படம் சாதித்தது...**

முஃமின்களே! நியாயத்தை நிலை நாட்டுவதற்காக அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள், எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள்; இதுவே (தக்வாவுக்கு) - பயபக்திக்கு மிக நெருக்கமாகும்; அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை(யெல்லாம் நன்கு) அறிந்தவனாக இருக்கின்றான்.

(5:08)


டெல்லி கலவரம் - வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் - 4

இந்தியாவின் தேசத் துரோகச் சட்டம் எப்படி அரசியல் மற்றும் வகுப்புவாத ஆயுதமாகப் பயன்படுத்தப்படுகிறது? - 16

குஜராத் மோடி கேள்வி? BBC என்ற ஆவணப்படம் சாதித்தது... - 24

இந்தியாவில் முஸ்லிம்கள் தொடர் - 28

வரலாற்றில் இந்த நாள்- மால்கம்-X (எ) மாலிக் அல் ஷாபாஸ் ஷஹீத் நாள் - 33

சிலுவைப் போர் 2.0 - 36

மசூதிக்குள் குடிபோதையில் அத்துமீறி நுழைந்து இமாமை தாக்கிய இராணுவ வீரர்.! - 40

காவி மயமாகும் நீதித்துறை -43

பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் - 46

குழந்தை வளர்ப்பு - 50

கண்ணியமிகு காயிதே மில்லத் விருது - 55

மகளிர் மன்றம் - 58

மருத்துவம் - 61



# வைகறை வெளிச்சம்

பிப்ரவரி-2023 (ரஜப்-1444)

ஆசிரியர்

மு.குலாம் முஹம்மது,M.A.,
Journalism & Communication

துணை ஆசிரியர்

கே.எம்.இல்யாஸ் ரியாஜி,M.A.,



All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts Only



http:/www.facebook.com/vaigaraivelicham

தனி இதழ்: ரூ.40/-

ஆண்டுச் சந்தா

உள் நாடு: ரூ.480/-

வெளி நாடு: ரூ.5000/-

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர் DARUL ISLAM FOUNDATION TRUST என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

VAIGARAI VELICHAM
52/1, Mannady Street, Room# 07, Mannady,
Chennai - 600001.
+91 81481 29887 | Email: darultrust@yahoo.com |
Web: www.darultrust.in

# டெல்லி கலவரம் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள்




## 2020 டெல்லி கலவரம் பற்றிய "குடிமக்கள் குழுமத்தின்" அறிக்கை.

**பாகம் - 01**

*பிப்ரவரி 2020ல், டெல்லியின் வடகிழக்கு மாவட்டத்தில் பரவலான வகுப்புவாத வன்முறை வெடித்தது. இந்த வன்முறையில் 53 பேர் இறந்தனர். 200க்கும் மேற்பட்டோர் காய மடைந்தனர். வீடுகள், பள்ளிகள், வணிக நிறுவனங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் என அனைத்தும் அழிக்கப்பட்டன. சேதப்படுத் தப்பட்டன.*

*இந்த வகுப்புவாத வன்முறையில் மக்களுக்கு ஏற்பட்ட சமூக பாதிப்புகளுக்கு அப்பால் பார்க்கும் பொழுது சட்டம் ஒழுங்கு சீர்குலைவு மற்றும் அதற்கான அரசின் பதில்களே சிக்கலான கேள்வியை பொதுதளத்தில் எழுப்புகின்றன. வன்முறை நாட்டின் தலைநகர் முழுவதும் பரவுவதை தடுப்பதில் அரசு இயந்திரங்கள் தோல்வியையே தழுவியுள்ளது. இதற்கிடையில் நிவாரணப் பணிகளும் ஒரு தொகுப்பான கவலைகளாகவே இருந்துள்ளது. ஒருபக்க சார்பான விவரிப்புகளுக்கே சில ஊடகங்கள் முன்னிலை அளித்தன.*

*டெல்லி காவல்துறை IPCஇன் கீழ் தொகுக் கப்பட்ட குற்றங்கள் வரிசையாக கொலை, தாக்குதல், தீ வைப்பு, கலவரம் மற்றும் இதுபோன்ற பிற குற்றங்களின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட 75 FIRகளின் அடிப்படை யின் விசாரணையைத் தொடங்கியது.*

## அறிமுகம்

பாசிஸ்ட்டுகளின் கைகளில் பாரதம் சிக்கிக் கொண்டது! 200 ஆண்டுகளுக்குமேல், முஸ்லிம்கள் மற்றும் சிறுமையினர் மேல் வெறுப்பு என்ற ஒற்றைத் திட்டத்தோடு செயல்பட்டு வந்தவர்கள் இவர்கள்.

முஸ்லிம்களைப் பூண்டோடு ஒழிப்பதே இவர்களின் திட்டம்!

இதற்கு கடந்த 200 ஆண்டுகளாக இவர்கள் நடத்திக் காட்டிய "குஜராத்கள்" மும்பைகள், முஸாபர் நகர்கள் ஏராளம்!

கொன்று குவித்த முஸ்லிம்கள் பலகோடி! அப்படி இவர்கள் திட்டமிட்டு நடத்திய ஒரு பெரும் படுகொலை - இன சுத்திகரிப்பு. மனித இனத்திற்கு எதிரான குற்றம், 2020 டெல்லி கலவரம். இந்தப் படுகொலைகள் பிப்ரவரி 23-26 வரை இரவு பகலாக நடந்தன.

இது இந்த பாசிஸ்ட்டுகள், மிகவும் திட்டமிட்டு நடத்தியவை.

### டெல்லி கலவரங்கள்

இவர்கள் கொண்டுவந்த குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிராக எழுந்த மக்கள் எழுச்சியை கட்டுப்படுத்தட இயலாமல் கட்டவீழ்த்துவிட்ட இனப்படுகொலை.

படுகொலைகளைபகிரங்கமாகநடத்தி,முஸ்லிம் களைப் பிணங்களாகக் குவித்தார்கள்.



vaigarai velicham official

குற்றுயிரும், குலையுருமாய்த் தப்பி உயிர் பிழைத்த முஸ்லிம்களையே குற்றவாளிகள் என குற்றம் பிடித்தார்கள். சித்திரவதைகளுக்குப் பின் சிறையில் அடைத்தார்கள்.

கேள்விக் கணக்கில்லாமல், விசாரணை இல்லாமல் சிறையில் வைத்திட ஊபா (UAPA) என்ற கொடிய சட்டத்தைப் பாய்ச்சினார்கள்.

அத்தோடு நில்லாமல், முஸ்லிம்களின் உயிரைக் காப்பாற்றிய முஸ்லிமல்லாத, மனித உரிமை ஆர்வலர்கள், சமுதாய சேவகர்கள் ஆகியோரையும் சிறைபிடித்தார்கள். பலரை குற்றப் பத்திரிகையில் சேர்த்தார்கள். (அவ்வாறு குற்றப் பத்திரிகையில் இணைக்கப்பட்டவர்தான் ஹர்ஷ் மந்தர் அவர்கள். (அவர்களுடன் இதுபற்றி நாம் கண்டபேட்டி, காயிதே மில்லத் விருது பகுதியில் இடம்பெற்றுள்ளது)

உடனேயே கொலைகளைத் திட்டமிட்டு உடனேயே கொலைகளைத் திட்டமிட்டு நடத்திய கலவரத்தின் உண்மைகளை மறைத்திட ஓர் விசாரணையை நடத்தி முடித்தார்கள். ஒன்றிய அரசை கையில் வைத்துக்கொண்டு இந்தியாவை ஒன்றுமில்லாமல் ஆக்கிக்கொண்டிருக்கும் பாசிஸ்ட்டுகள்.

உடனேயே ஒரு நூலையும் எழுதி வெளியிட்டார்கள். அதிகாரத்தையும், அதிகமான பணத்தையும் அள்ளிக் கொட்டி உண்மைகளை மண்மூடிப்போகச் செய்திடலாம் என எல்லாத் திசையிலும் உழைத்தார்கள்.

இனி உண்மைகள் வெளியே வந்திடவே இயலாது என்று அனைத்தையும் மறைத்தார்கள்.

இந்நிலையில்தான், நம் நாட்டின்மேல் உண்மையான பாசமும் அக்கறையும் கொண்ட நீதிபதிகள் சிலர்,

அவர்கள் இந்த டெல்லி கலவரம் பற்றிய ஆய்வு ஒன்றை நடத்தி அதனை அறிக்கையாக வெளியிட்டார்கள். அந்த ஆய்வறிக்கையை இங்கே தருகின்றோம்.

## ஆய்வை மேற்கொண்டவர்கள்

ஆய்வுக்குழு தலைவர் மதன். பி. லோக்கூர் (மேனாள் உச்சநீதிமன்ற நீதிபதி), நீதிபதி ஏ.பி.ஷா (மேனாள் தலைமை நீதிபதி சென்னை மற்றும் டெல்லி உயர்நீதி மன்றங்கள், மேனாள் தலைவர், சட்ட ஆணையம்), நீதிபதி ஆர்.எஸ்.ஜோதி (மேனாள் நீதிபதி டெல்லி உயர்நீதி மன்றம்), நீதிபதி அஞ்சனா பிரகாஷ் (மேனாள் நீதிபதி பாட்னா உயர்நீதிமன்றம்) மற்றும் ஜி.கே.பிள்ளை (ஓய்வுபெற்ற இந்திய ஆட்சிப் பணி – மேனாள் இந்திய அரசின் உள்துறை செயலாளர்) இவர்களுக்கு எமது நன்றிகள். **- MGM**

அந்த அறிக்கையின் முதல் பகுதி இது.

*மார்ச் 2020இல், டெல்லி காவல்துறையின் சிறப்புப் பிரிவு, ஒரு FIRஐ பதிவு செய்து வட கிழக்கு டெல்லியில் நடந்த கலவரம் "முன்கூட்டியே திட்டமிடப்பட்ட சதி" என்று கூறினர்.*

*முதலில் IPC பிரிவுகள் மற்றும் பிற தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டங்களின் கீழ் பதிவு செய்யப்பட்ட இந்த வழக்குகளில், பின்னர் ஏப்ரல் 2020இல் பயங்கரவாத குற்றங்கள் என UAPA என்ற கொடுஞ்சட்டமானது FIRஇல் சேர்க்கப்பட்டது. விசாரணை நடந்து கொண்டிருக்கும் போதே, வழக்கறிஞர்கள் மற்றும் சட்ட வல்லுநர்கள் இது தொடர்பான தொடர்ச்சியான குறைபாடுகளையும், தவறுகளையும் சுட்டிக் காட்டினர். அவற்றில் சில காலப்போக்கில் நீதிமன்றங்களால் உறுதியும் செய்யப்பட்டன.*

*இந்தப் பின்னணியில்தான் அரசியலமைப்பு நடத்தைக் குழு (பொதுநலனில் ஆர்வமுள்ள முன்னாள் அரசு ஊழியர்களின் குழு - A Public - Spirited Group of Former Civil Servants)) டெல்லி வன்முறை மற்றும் அதன் பின்விளைவுகளைச் சுற்றியுள்ள நிகழ்வுகள், புறக்கணிக்கப்பட்டவைகள் குறித்து ஒரு சமகால பதிவின் மூலம் இந்த கலவரம் குறித்தான மதிப்பீட்டை வழங்க ஓய்வு பெற்ற அதிகாரிகளின் குழுவை அழைத்தனர்.*

*இதனடிப்படையில் அக்டோபர் 2020இல் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட குழு உருவாக்கப்பட்டது.*

*நீதிபதி மதன் பி. லோகூர் (இந்திய உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி (தலைவர்)*

*நீதிபதி ஏ.பி.ஷா (சென்னை மற்றும் டெல்லி உயர் நீதிமன்றங்களின் முன்னாள் தலைமை நீதிபதி மற்றும் இந்திய சட்ட ஆணையத்தின் முன்னாள் தலைவர்.)*

*நீதிபதி ஆர்.எஸ்.சோதி (டெல்லி உயர்நீதி மன்ற முன்னாள் நீதிபதி)*

*நீதிபதி அஞ்சனா பிரகாஷ் (பாட்னா உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி)*

*ஜி.கே.பிள்ளை, ஐஏஎஸ் (ஓய்வு) (முன்னாள் உள்துறை செயலாளர், இந்திய அரசு)*

*டாக்டர். மீரான் சாதா போர்வான்கர், IPS (ஓய்வு) (முன்னாள் இயக்குநர் ஜெனரல், போலீஸ் ஆராய்ச்சி பணியகம் மற்றும் வளர்ச்சி, இந்திய அரசு.)*



டாக்டர் மீரான் சாதா போர்வாங்கர் பணியின் இறுதி கட்டத்தில் குழுவிலிருந்து விலகினார். குழுவின் மீதமுள்ள ஐந்து உறுப்பினர்களால் அறிக்கை முழுமைப்படுத்தப்பட்டது.

**இந்த குழுவின் விதிமுறைகள் பின்வருமாறு:**

கலவரத்திற்கு முன்பும், கலவரத்தின் போதும் நடந்த நிகழ்வுகள் அதனோடு வன்முறையைக் கையாள்வதில் அரசு இயந்திரத்தின் செயல்பாடு, சட்டம் ஒழுங்கை மீட்டெடுத்தல் மற்றும் அது தொடர்புடைய விஷயங்களையும் விசாரிப்பது.

கலவரத்தைப் பற்றி விசாரிப்பதில் காவல் துறையின் பதில்களை பகுப்பாய்வு செய்து மதிப்பிடுதல்.

கலவரத்திற்கு முன், கலவரத்தின்போது மற்றும் கலவரத்திற்குப்பின் உண்மையான மற்றும் போலியான தகவல்களை பரப்புவதில் முக்கிய காட்சி ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களின் பங்கு மற்றும் நிகழ்வுகளில் அதன் தாக்கத்தை ஆய்வு செய்வது.

கலவரங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குதல் மற்றும் இழப்பீடுகளை விரிவுபடுத்துவதில் நிர்வாகத்தின் முயற்சிகளை மதிப்பிடுதல்.

**அறிக்கை**

இந்த கலவரமானது இரண்டு வருடங்களுக்கு முன் நிகழ்ந்திருந்தாலும், இதன் உடனடியான மற்றும் மிகப்பெரிய அளவிலான பிரச்சனைகள் எப்படி வன்முறையானது, எப்படி ஒட்டுமொத்த மாவட்டத்தையும் இதற்குள் மூழ்கடித்தது என்பதற்கான ஒரு ஆய்வு இன்றும் தேவைப் படுகிறது. இந்த அறிக்கையானது வன்முறையைப் பற்றியும் அதற்குப் பின்பான விளைவுகளைப் பற்றியும் புரிந்துகொள்வதில் பங்களிக்க முயல் கிறது. இந்த முயற்சியானது முன்னரே பின்பற்றப் பட்டதால், மற்ற பிரச்சனைகளான வன்முறை யைப் பற்றிய ஊடகங்களின் பங்கு மற்றும் காவல்துறை விசாரணையின் தரத்தை நம்மால் குறிப்பிட முடிகிறது. இந்த அறிக்கையானது இந்த விஷயங்களைப் பற்றிய விவாதத்தைத் மீண்டும் தூண்டும் எனவும் நம்புகிறோம்.

விசாரணையின் பகுப்பாய்வு FIRகள், குற்றப் பத்திரிகைகள், நீதிமன்ற உத்தரவுகள் உள்ளிட்ட முதன்மை சட்ட ஆவணங்களை அடிப்படை யாகக் கொண்டது. சட்டரீதியான தீர்மானங்கள் இன்னும் தீர்க்கப்பட வேண்டும் என்பதையும், வழக்கு விசாரணைகள் மற்றும் மேல்முறையீடுகள் இன்னும் முடிக்கப்படவில்லை என்பதையும் குழுவானது அங்கீகரிக்கிறது.

இந்த குழுவின் அறிக்கையானது மூன்று பிரிவுகளாக ஒழுங்கமைக்கப்பட்டு, கலவரத்தின் பல்வேறு அம்சங்களையும் அதன் துவக்கம் முதலே, அதன் இயல்பு மற்றும் பின்விளைவுகள் என அனைத்தையும் ஆய்வுக்குள்ளாக்குகிறது.

**முதல் பிரிவு**

CAA நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட நிகழ்வுகளை பகுப்பாய்வு செய்கிறது. வன்முறையை கட்டியெழுப்புதல், வன்முறையின் உண்மையான காரணம் மற்றும் அரசின் பதில்கள் போன்றவற்றை இந்தப் பிரிவு உள்ளடக்கியது.

**இரண்டாவது பிரிவு**

வன்முறைக்கு முன்பும் பின்பும் வகுப்பு வாதத்தை தூண்டக்கூடிய கதைகளை பரப்புவதில் காட்சி ஊடகங்கள் மற்றும் சமூக வலைதளங் களில் பங்கை மதிப்பிடல் பற்றியது.

**மூன்றாவது பிரிவு**

டெல்லி காவல்துறையின், வன்முறையைப் பற்றிய விசாரணை மற்றும் UAPA பயன்படுத் தப்பட்டதன் மிகப்பெரிய தாக்கங்களைப் பற்றியது.

**இந்த அறிக்கை 10 அத்தியாயங்களைக் கொண்டுள்ளது.**

**அத்தியாயம் 1**

**(களநிலவரம்: குடியுரிமையை மறுசீரமைத்தல்)**

CAA இயற்றப்பட்டதன் மாற்றங்களை ஆராய்கிறது. இந்த சட்டத்திற்கு எதிராக நாடு தழுவிய போராட்டங்கள் எழுந்தன. இதில் காவல்துறை, அரசு மற்றும் நீதிமன்றங்களின் பதில்களும் கருத்தில் கொள்ளப்படுகிறது.

**அத்தியாயம் 2**

**(தீவிரமடைந்த பிரிவுகள் : வடகிழக்கு டெல்லியில் வன்முறையை உருவாக்குதல்)**

டெல்லியில் நடந்த வகுப்புவாத வன்முறைக்கு, அந்த வன்முறை வெடித்ததற்கு முந்தைய மாதங்களின் வன்முறைக்கான முக்கிய காரணிகளைப் பற்றி விவாதிக்கிறது. CAAவிற்கு எதிரான நகரம் முழுவதும் நடந்த போராட்டத்தில் அரசு சார்ந்த மற்றும் சாராதவர்களின் பதில்களையும், 2020 டெல்லி சட்டப்பேரவை தேர்தல் பிரச்சாரத்தின் இயல்புகளையும் உள்ளடக்கியது.

**அத்தியாயம் 3**

**(வன்முறையின் பாதை)**

வன்முறையின் நான்கு நாட்களின் கால வரிசையை ஆராய்கிறது. வன்முறையின் இயக்கம் மற்றும் குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் நடந்த கால அளவை குறிப்பிடுகிறது. அரசு நிறுவனங்களின் பதில்களை சுருக்கமாகவும் மேலும் உடனடியான பின்விளைவுகளில் கவலைக்குரிய பிரச்சினைகளையும் பேசுகிறது.

**அத்தியாயம் 4**

**(நிவாரணம் மற்றும் இழப்பீடு : அமலாக்கத்தில் உள்ள இடைவெளிகள்)**

வன்முறையின்போது உயிர் மற்றும் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு நிவாரணம் மற்றும் இழப்பீடு வழங்குவதில் உள்ள இடைவெளிகள் பற்றி விவரிக்கிறது.

**அத்தியாயம் 5**

**(சிக்கலான இருமைதன்மை : செய்தி ஊடகம் உண்மையின் நடுவரா அல்லது வெறுப்பின் மேடையா?)**

காட்சி ஊடகங்கள் செய்தி தருவதில், மக்கள் அதிகமாக பார்க்கும் வேளைகளில் (Prime -Time) CAA பற்றிய விவாதங்களையும், நாடு தழுவிய போராட்டங்கள் மற்றும் டெல்லி வன்முறை பற்றிய செய்திகளை ஒளிபரப்புவது பற்றி ஆராய்கிறது.

**அத்தியாயம் 6**

**(சமூக ஊடகம் - வெறுக்கத்தக்க பேச்சுக்கான ஒரு வாகனம்)**

டெல்லி வன்முறையின் களநிகழ்வுகளை பற்றி வெறுப்புப் பேச்சுகளை பரப்புவதில் சமூக ஊடக தளங்களின் பயன்பாடு பற்றிய பகுப்பாய்வை வழங்குகிறது.

**அத்தியாயம் 7**

**(IPC குற்றங்கள் மீதான விசாரணைகள் பற்றிய கருத்து)**



காவல்துறையின் வன்முறை தொடர்பான IPC வழக்குகளின் விசாரணைகளை விமர்சன ரீதியாக ஆராய்கிறது.

**அத்தியாயம் 8**

**(பயங்கரவாத சதி பற்றிய விசாரணையின் ஒரு பகுப்பாய்வு)**

எஃப்ஐஆர் 59/2020ன் அடிப்படையில் வன்முறைக்குப் பின்னால் சதி இருப்பதாகக் கூறப்படும் விசாரணையின்மீது கவனம் செலுத்துகிறது. இந்த எஃப்ஐஆர் மீதான விசாரணையில் சிறப்புப் பிரிவு தாக்கல் செய்த முதல் குற்றப்பத்திரிகையின் பகுப்பாய்வையும் இந்த அத்தியாயம் வழங்குகிறது.

**அத்தியாயம் 9**

**(யுஏபிஏ வின் பயன்பாடு மற்றும் நியாயமான விசாரணைகள்)**

வழக்குகளில் UAPA பயன்படுத்தப்பட்டதன் நியாயமான விசாரணை உத்தரவாதங்களின் மீதான தாக்கங்களின் பரந்த அளவிலான பகுப் பாய்வை வழங்குகிறது. இந்த அத்தியாயத்தில் எஃப்ஐஆர் 59இல் UAPA வழக்கின் அம்சங்கள் குறித்தும் கருத்துரைக்கப்பட்டுள்ளது.

**அத்தியாயம் 10**

**(முடிவுகள்)**

வன்முறையை கட்டியெழுப்புவது, முக்கிய அம்சங்கள், பொறுப்புக்கூறல், குறைபாடுகள் மற்றும் பிரதிபலிப்புகளின் பரந்த தாக்கங்கள் குறித்த குழுவின் முக்கிய முடிவுகளை சுருக்க மாகக் கூறுகிறது.

**இந்த ஆய்வின் செயல்முறை**

வழக்கறிஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் குழுவானது இந்த ஆராய்ச்சியை மேற்கொள்ளு தல் மற்றும் அதனை எழுதுதல் போன்ற குழுவின் அறிக்கையை உருவாக்குதலில் ஆதரவளித்தனர்.

எப்.ஐ.ஆர்.கள், குற்றப்பத்திரிகைகள், நீதிமன்ற உத்தரவுகள், ஆடியோவிஷுவல் மற்றும் ஆவணப்படப் பொருள்கள் மற்றும் அது தொடர்புடைய ஊடக அறிக்கைகள் உள்ளிட்ட முதன்மையான விஷயங்களைக் குழுவானது சேகரித்து ஆய்வு செய்தது. பின்னணி ஆராய்ச்சி யாக ஏற்கனவே பொது களத்தில் உள்ள அறிக்கை கள் மற்றும் ஆய்வுகள் உட்பட இரண்டாம் தர தகவல்களையும் மதிப்பாய்வு செய்தோம்.

பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் வழக்கறி ஞர்கள், சமூக ஆர்வலர்கள், பத்திரிகையாளர்கள் போன்ற தனிநபர்களின் சாட்சியங்களைப் பதிவு செய்தும் குழுவானது தகவல்களை சேகரித்தது. இந்த சாட்சியங்கள் நுண்ணறிவுகளை வழங்கிய தோடு இதனால் கிடைத்த விஷயங்களில் இருக்கக் கூடிய இடைவெளிகளைக் கண்டறிய ஆராய்ச்சி யாளர்களுக்கு உதவியது.

**பின்னணி ஆராய்ச்சி**

குழுவானது அதன் பின்னணி ஆராய்ச்சியின் ஒரு பகுதியாக பின்வரும் அறிக்கைகளையும் மதிப்பாய்வு செய்துள்ளது.

"பயம்மற்றும்தண்டனையின்மை"-இளைஞர் களுக்கான மனித உரிமைகள் ஆவணங்கள்.

அம்னெஸ்டி இன்டர்நேஷனல் இந்தியா (ஆகஸ்ட் 2020) வழங்கிய ஒரு விசாரணை சுருக்கம்;

**பிப்ரவரி 2020 டெல்லி கலவரங்கள்:** குடிமக்கள் மற்றும் வழக்கறிஞர்கள் முயற்சியின் காரணங்கள், வீழ்ச்சி மற்றும் பின்விளைவுகள் (செப்டம்பர் 2020);

**டெல்லி கலவரங்கள் 2020:** அறிவுஜீவிகள் மற்றும் கல்வியாளர்கள் குழுவின் கிரவுண்ட் ஜீரோவின் அறிக்கை;

டெல்லி சிறுபான்மையினர் ஆணையத்தால் (ஜூலை 2020) பிப்ரவரி 2020 இல் நடந்த வட கிழக்கு டெல்லி கலவரங்கள் குறித்த உண்மை கண்டறியும் குழுவின் ஆய்வு;

**உற்பத்திச் சான்றுகள்:** பொலிஸ் திட்டம் (Police Project) (ஆகஸ்ட் 2020) மூலம் இந்தியா வில் அரசியலமைப்பு உரிமைகளைப் பாதுகாப் பவர்களை காவல்துறை எவ்வாறு சித்தரித்து கைது செய்கிறது;

23.02.2020 முதல் 26.02.2020 வரை வட கிழக்கு டெல்லியில் நடந்த கலவரங்கள் குறித்த உண்மை கண்டறியும் குழுவின் அறிக்கை நீதிபதி அம்பாதாஸ் ஜோஷி தலைமையிலான குழு;

**துரோகிகளை சுடவும் :** இந்தியாவின் புதிய குடியுரிமைக் கொள்கையின் கீழ் முஸ்லிம்களுக்கு


vaigarai velicham official

எதிரான பாகுபாடு - Human Rights Watch (ஏப்ரல் 2020).

**பொது அறிவிப்பு மற்றும் சாட்சியங்கள்**

அக்டோபர் 25, 2020 தேதியிட்ட பொது அறிவிப்பை கமிட்டி வெளியிட்டது, டெல்லி வன்முறை தொடர்பான தகவல்கள் உள்ள எவரையும் முடிந்தவரை விரிவாக தங்களுடன் பகிர்ந்துகொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளது. இந்தத் தகவல்களின் ஆய்வுகளின் அடிப்படையில், குழு மேலும் தொடர்புகளுக்கு நபர்களை அழைத்தது. குழுவின் முன் பதிவு செய்யப்பட்ட சாட்சியங்கள் முழு ரகசியத்தன்மையுடன் பேணப்படும் என்றும் கூறினர்.

**பகுதி-I**

CAA நிறைவேற்றப்பட்டதன் மூலம் அதற்கு எதிராக நாடு தழுவிய போராட்டங்கள் வெடித்தது உட்பட சூழலை விவரிக்கிறது. இதைத் தொடர்ந்து, வன்முறையின் உருவாக்கம், வன்முறையின் காலம் மற்றும் அதன்பின் உடனடி நிவாரணம் மற்றும் இழப்பீடு ஆகிய நிகழ்வுகளை விளக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இது ஒரு முழுமையான கணக்காக இருக்க முடியாது என்பதை உணர்ந்து, இந்த பகுதியில் வழங்கப்பட்ட நிகழ்வுகள் மற்றும் முன்னேற்றங்கள் பெரும்பாலும் சமகால செய்தி அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டவை. சாத்தியமான இடங்களில், பல செய்தி ஆதாரங்கள் உறுதிப்படுத்துவதற்காக மேற்கோள் காட்டப்படுகின்றன. இதில் வீடியோக்கள், ட்வீட்கள் (ட்விட்டர் பதிவுகள்) மற்றும் தொடர்புடைய சமூக ஊடக பதிவுகளும் அடங்கும். இவை அனைத்தையும், கால வரிசை ஒழுங்குடன் ஆய்வு செய்து தொகுத்து உண்மைகளை வழங்குவதே நோக்கம்.

**சூழல் : குடியுரிமையை மறுசீரமைத்தல்**

**குடியுரிமை திருத்த சட்டம் எனும் புதிரின் பாகங்கள்**

2019 இந்தியக் குடியுரிமை (திருத்தச்) சட்டம் (Citizenship (Amendment) Act 2019), பாகிஸ்தான், வங்காளதேசம், ஆப்கானித்தான் ஆகிய நாடுகளில் இருந்து டிசம்பர் 31, 2014ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்தியாவிற்குள் புலம்பெயர்ந்து குடியேறிய இந்துக்கள், சீக்கியர்கள், சமணர்கள், பௌத்தர்கள், பார்சிகள் மற்றும் கிறித்தவர்கள் ஆகியோருக்கு இந்தியக் குடியுரிமை வழங்குவதற்கு வழிவகை செய்யும் 1955 இந்தியக் குடியுரிமைச் சட்டத்தில் சட்டத் திருத்த மசோதா, இந்திய நாடாளுமன்றத்தின் மக்களவையில், இந்தியாவின் உள்துறை அமைச்சர் அமித் ஷாவால் 09 திசம்பர் 2019 அன்று பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. மேலே குறிப்பிடப்பட்ட நாடுகளிலிருந்து இந்தியாவிற்குள் குடியேறிய இஸ்லாமியர்களுக்கு இத்தகுதி இச்சட்டத்தில் தரப்படவில்லை. இந்தியச் சட்டத்தின்படி குடியுரிமை பெறுவதற்குத் தேவையான ஒரு காரணியாக சமயம் வெளிப்படையாகக் குறிப்பிடப்பட்டது முதன்முறையாக இச்சட்டத் திருத்தத்தில்தான்.

இந்த CAA சட்டம் பாராளுமன்றத்தில் திருத்தப்பட்டதின் விளைவாக, இந்தியாவிற்குள், CAA சட்டத்தோடு தொடர்புடைய தேசிய குடிமக்கள் பதிவேடு (NRC) மற்றும் தேசிய மக்கள்தொகை பதிவேடு (NPR) போன்றவற்றைத் தூண்டியது. NRC என்பது, 1955ம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்தின் 2003 திருத்தத்தின்மூலம் இந்தியாவில் அல்லது வெளியில் வாழும் இந்திய குடிமக்களின் பதிவேடு ஆகும். NRCல் பட்டியலிடப்படுவதற்கு, ஒவ்வொரு இந்திய குடிமகனும் அதில் பரிந்துரைக்கப்பட்ட அதிகாரப்பூர்வ ஆவணங்களைத் கொண்டிருப்பதின் மூலம் தங்கள் குடியுரிமையை நிரூபிக்க வேண்டும். NRCஐ போலவே, NPR ஆனது வெளிநாட்டினர் உட்பட இந்தியாவில் வசிப்பவர்கள் அனைவரின் விரிவான பதிவை (மக்கள்தொகை வரைபடம் மற்றும் பயோமெட்ரிக் தகவல்) தயாரிக்கும் அதிகாரப்பூர்வ செயலை உள்ளடக்கியது.

என்.ஆர்.சியை அமல்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட குடியுரிமை விதிகள், 2003 படி (Citizenship Rules, 2003), இந்தியாவில் வசிக்கும் இந்திய குடிமக்களின் பதிவேடு என்பது என்.பி.ஆர் மூலம் சரியான சரிபார்ப்புக்குப் பிறகு தயாரிக்கப்பட வேண்டும். முதலில் இந்தியாவில் வசிக்க கூடிய குடிமக்களின் பட்டியலை தயாரித்துவிட்டு, பின்னர் அதிலிருந்து "சந்தேகத்திற்குரிய குடிமக்களின் பட்டியலை" சரிபார்த்த பின் NRCக்கான இறுதிப் பட்டியலை அதிகாரப்பூர்வமாக உருவாக்க முடியும்.

அசாமில் நடந்த NRC, குடியுரிமையை "நிரூபிப்பதற்கான" தேவையின் மூலம், எவ்வாறு பெரிய எண்ணிக்கையிலான குடிமக்களின், குடியுரிமையை நீக்குகிறது என்பதைக் காட்டு கிறது. 1997ம் ஆண்டில், இந்தியத் தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி, அசாமில் வாக்காளர் பட்டியல்கள் 1997ம் ஆண்டு ஜனவரி 1ம் தேதியை குடியுரிமைக்கான தகுதித் தேதியாகக் கொண்டு குறிப்பிடத்தக்க திருத்தங் களைச் செய்தன. இந்த நிகழ்வின் ஒரு பகுதியாக, தங்கள் குடியுரிமைக்கான போதுமான ஆதாரத்தை வழங்கத் தவறிய வாக்காளர்கள் "D" வாக்காளர்கள், அதாவது "சந்தேகத்திற்குரிய வாக்காளர்கள்" எனக் குறிக்கப்பட்டனர்.

இந்த வழக்குகள் வெளிநாட்டினர் தீர்ப்பாயத் திற்கு அனுப்பப்பட்டன. D வாக்காளர்களாகக் கருதப்படுபவர்கள் அன்று முதல் நடைபெற்ற தேர்தல்களில் வாக்களிக்க அனுமதிக்கப்பட வில்லை. குடியுரிமை விதிகள் 2003ன் விதி 4(4), NRC தயாரிப்பதற்கான செயல்முறையை பரிந்துரைப்பதில், உள்ளூர்களில் குடியுரிமை சரிபார்ப்புச் செயல்பாட்டின்போது, குடியுரிமை சந்தேகத்திற்குரியதாகக் கருதப்படும் நபர்கள் மக்கள்தொகைப் பதிவேட்டில் மேலும் விசார ணைக்கு உட்படுத்தப்படுவதை குறிக்கிறது. D வாக்காளர்கள், (FT)-Foreiners Tribunal)லிருந்து சாதகமான உத்தரவைப் பெற்ற பின்னரே, மற்றும் வாக்காளர் பட்டியலில் இருந்து D வாக்காளர் என்று தங்கள் பெயர்கள் நீக்கப் பட்ட பின்னர்தான் புதுப்பிக்கப்பட்ட NRCல் தங்கள் பெயர்களைச் சேர்க்க விண்ணப்பிக்க முடியும்.

CAAன் நோக்கத்தின் கீழ், NRCல் பட்டிய லிடப்படுவதற்கு தங்கள் குடியுரிமையை நிரூபிக்க தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்க முடியாத முஸ்லிம் அல்லாதவர்கள், அகதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு குடியுரிமை வழங்கப்பட லாம். இந்த தர்க்கத்தின்படி சென்றால், தாங்கள் இந்திய குடிமக்கள் என்பதை நிரூபிக்கும் பாரிய சுமை முஸ்லிம்களுக்கு மட்டுமே மிஞ்சும். ஏழ்மை, கல்வியறிவின்மை அல்லது தொழில் முறை உதவி கிடைக்காததால் பாதிக்கப்படும் பல இந்திய குடிமக்கள், தேவையான ஆவணங் களைத் தயாரிக்கப் போராடும் அதே வேளையில், இந்த ஆவணங்கள் இல்லாத முஸ்லீம்கள் தடுப்புக் காவலை எதிர்கொள்ள நேரிடலாம் அல்லது குடியுரிமை உரிமைகள் அனைத்தும் மறுக்கப் படலாம். CAA-NRCன் ஒருங்கிணைந்த பயன்பாடு இந்தியாவில் உள்ள முஸ்லீம்களை பாதிக்கும் திறனைக் கொண்டுள்ளது.




**அசாமில் NRC அனுபவங்கள்**

CAA என்பது சில துன்புறுத்தப்பட்ட சமூகங்



களுக்கு கூடுதல் பாதுகாப்பை வழங்கும் ஒரு மனிதாபிமானச் சட்டம் என்றும் ஏற்கனவே இந்தியக் குடிமகனாக உள்ள எவரையும் பாதிக் காது என்றும் அரசாங்கத்தில் குரல்கள் எழுப்பப் பட்டாலும், இந்தியாவில் உள்ள முஸ்லிம்கள் கடும் அச்சத்தை வெளிப்படுத்தியுள்ளனர்; அசாமில் மாநில அளவிலான என்.ஆர்.சி வரைவுகளின் அனுபவமே இதற்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

ஆகஸ்ட் 2019ல், 19 லட்சம் தனிநபர்கள் குடிமக்கள் பட்டியலிலிருந்து விலக்கப்பட்டனர் மேலும் முஸ்லிம்கள் கணிசமான எண்ணிக்கை யில் பாதிக்கப்பட்டுள்ளனர். NRCல் இருந்து விலக்கப்பட்டவர்கள், விலக்குக்கு எதிராக மேல் முறையீடு செய்ய FT-ஐ அணுகலாம். ஆனால் பல சந்தர்ப்பங்களில், ஒரு நாளுக்குள் தங்கள் ஆவணங்களை "மறு சரிபார்ப்பு"க்கு ஆஜராகு மாறு மக்களுக்கு திடீர் அறிவிப்புகள் வழங்கப் பட்டன, மேலும் இந்த உத்தரவுகளுக்கு பதில் அளிக்க 300 கிமீ அல்லது அதற்கும் அதிகமாக இவர்கள் பயணிக்க வேண்டியிருந்தது.

சமூக - பொருளாதார ரீதியாக பாதிக்கப்படக் கூடியவர்கள் அல்லது பிற்படுத்தப்பட்டவர்கள், தங்கள் குடியுரிமையை நிரூபிக்க தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்க போராடினர். இதில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள ஏழைகள் மற்றும் நிலமற்றவர்கள், ஒற்றைப் பெண்கள் அல்லது சொத்து ஆவணங்கள் அல்லது பிறப்புப் பதிவுச் சான்றிதழ்கள் இல்லாதவர்களும் உள்ளனர். பட்டியலிலிருந்து விலக்கப்பட்ட பிறகு குடியுரிமை மற்றும் தடுப்புக்காவல் மூலம் வாழ்க்கையை இழக்க நேரிடும் என்ற அச்சத்தில் மக்கள் தங்கள் வாழ்க்கையை முடித்துக் கொண்டதாக அசாமில் இருந்து ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டன.

FTகள் தற்போது எல்லைக் காவல்துறை (அஸ்ஸாம் காவல்துறையின் ஒரு பிரிவு), தேர்தல் ஆணையம் அல்லது மாநில அரசாங்கத்திடம் இருந்து பரிந்துரை அடிப்படையில், அவர்கள் குறிப்பிடும் நபர்கள் வெளிநாட்டவரா இல்லையா என்பதைத் தீர்மானிக்கிறார்கள். வெளிநாட்டினர் என்று அறிவிக்கப்பட்டவர்கள் அடிப்படையில் நாடற்றவர்கள். 2020ம் ஆண்டில், 2019-2020க்கு இடையில் 10 அகதிகள் இறந்த நிலையில், மோசமான நிலைமைகளின் கீழ் அசாமின் ஆறு தடுப்பு மையங்களில் கிட்டத்தட்ட 1,000 பேர் ஆவணமற்ற புலம்பெயர்ந்தோர் என மதிப்பிடப் பட்டுள்ளது. தடுப்புக்காவலை நிர்வகிக்கும் கொள்கை எதுவும் இல்லாத நிலையில், இந்த அமைப்பு தன்னிச்சையானது மற்றும் சர்வதேச சட்ட தரங்களை மீறுவதாக வகைப்படுத்தப் பட்டுள்ளது.

**ஆரம்பகால சொல்லாட்சி**

CAA நிறைவேற்றப்படுவதற்கு முன்னதாக, குடியுரிமை எனும் வார்த்தையை ஆளும் கட்சியின் பேச்சுக்கள் பிளவுபடுத்தும் மற்றும் எரிச்சலூட்டும் வகையில் இருந்தது. "ஊடுருவு பவர்களை" அடையாளம் காணும் ஒரு கட்ட மைப்பாக என்ஆர்சியை பிஜேபி வெளிப்படை யாகவே காட்டி, இறுதியாக அவர்களை நாட்டி லிருந்து வெளியேற்றியது.

ஏப்ரல் 2019ல், பொதுத் தேர்தலுக்கான பிரச்சாரத்தின்போது, மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, "அரசாங்கம் முதலில் CAAஐக் கொண்டுவரும் என்று கூறினார். இதன் மூலம் அகதிகளுக்கு குடியுரிமை வழங்கப்படும். அதைத் தொடர்ந்து நாடு தழுவிய NRC நடைபெறும்" என்று தெரிவித்தார்.

டிசம்பர் 2, 2019 அன்று, ஜார்க்கண்டில் நடந்த தேர்தல் பேரணியில் உள்துறை அமைச்சர் மீண்டும் ஒருமுறை கூறினார், "என்ஆர்சி நாடு முழுவதும் செயல்படுத்தப்படும், மேலும் அனைத்து ஊடுருவல் காரரர்களும் 2024 தேர்த லுக்கு முன் அடையாளம் காணப்பட்டு வெளி யேற்றப்படுவார்கள்."

**நாடு முழுவதும் நடந்த**
**CAA எதிர்ப்புப் போராட்டங்கள்**

டிசம்பர் 2019ல், CAAக்கு எதிராக நாடு தழுவிய போராட்டங்கள் வெடித்தன. டிசம்பர் 4, 2019 அன்று பாராளுமன்றத்தில் திருத்த மசோதாவை மத்திய அமைச்சரவை அறிமுகப்படுத்திய உடனேயே முதலில் அஸ்ஸாம் முழுவதும் போராட்டங்கள் தொடங்கின. கௌஹாத்தியில் ஊரடங்கு உத்தரவை மீறிய போராட்டக்காரர்கள் மீது காவல்துறை துப்பாக்கிச் சூடு நடத்தியது.

டிசம்பர் 15, 2019 அன்று டெல்லியில் உள்ள ஜாமியா மில்லியா இஸ்லாமியா பல்கலைக்கழகம் மற்றும் உத்தரபிரதேசத்தில் உள்ள அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகம் (UP) ஆகியவற்றில் CAA-க்கு எதிர்ப்பு தெரிவித்த மாணவர்கள் மீதான வன்முறை அறிக்கைகளுக்குப் பிறகு, நாடு முழுவதும் பரவலான போராட்டங்கள் தொடங்கியது. டிசம்பர் 19, 2019 அன்று, CAAக்கு எதிராக அரசியல் கட்சிகளால் நாடு தழுவிய பந்த் அழைப்பு விடுக்கப்பட்டது. நாடு முழுவதும் 600க்கும் மேற்பட்ட ஆவணப்படுத்தப்பட்ட CAA எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. இதில் பலதரப்பட்ட தனிநபர்கள், குறிப்பாக முஸ்லீம் பெண்கள் தீவிரமாக பங்கு பெற்றனர்.

டெல்லி ஷாஹீன் பாக் போராட்டங்கள் ஒரு பிரபலமான அடையாளமாக மாறியது மற்றும் பலரை ஊக்கப்படுத்தியது. ஆரம்ப நாட்களில், CAA எதிர்ப்புப் போராட்டங்கள் பெரும்பாலும் அமைதியாக நடந்தன.

**போராட்டக் களங்களில் காவல்துறையின் பலத்தைப் பயன்படுத்துதல்**

உ.பி., கர்நாடகா மற்றும் டெல்லியில் சி.ஏ.ஏ-க்கு எதிரான போராட்டக்காரர்கள் மீது போலீஸ் மிருகத்தனமாக செயல்பட்டதாக பல அறிக்கைகள் உள்ளன. உ.பி.யில் மட்டும், இரண்டு நாட்களுக்குள் போராட்டங்களில் 22 பேர் கொல்லப்பட்டனர். கிராமப்புறங்களிலும் நகரங்களிலும் கைது செய்தல், வீடுகளில் சோதனை செய்தல் மற்றும் மக்களைச் சுட்டுக் கொல்வதில் காவல்துறையின் அத்துமீறல்கள் பற்றிய செய்திகள் வந்தன. டிசம்பர் மாதத்தின் தொடக்கத்தில், அசாமில் போராட்டங்கள் நடந்தன. 17 வயதுடைய ஒரு சிறுவன் உட்பட ஐந்து பேர் காவல்துறையின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர். கர்நாடகாவின் மங்களூரில், குற்றவியல் நடைமுறைச்சட்டம், 1973 (CrPC) பிரிவு 144 இன் கீழ் தடை உத்தரவு செயல்படுத்தப்பட்டிருந்த நிலையில், இந்த தடை உத்தரவை மீறியதாக கூறி, காவல்துறையின் துப்பாக்கிச் சூட்டில் இரண்டு பேர் கொல்லப்பட்டனர்.

பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட பல CAA எதிர்ப்பு போராட்டக்காரர்கள் மீது தேசத்துரோக வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. குஜராத், கர்நாடகா, உ.பி., ஆந்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், உத்தரகாண்ட், ஹரியானா, மேற்கு வங்கம், மற்றும் டெல்லி போன்ற மாநிலங்களில் 144 தடை உத்தரவு பரவலாக விதிக்கப்பட்டது.

CAA எதிர்ப்பு போராட்டக்காரர்களுக்கு எதிராக காவல்துறையின் பலத்தைப் பயன்படுத்துவதற்கும் பிற நடவடிக்கைகளுக்கும் எதிராக சில உயர் நீதிமன்றங்கள் உத்தரவுகளை பிறப்பித்தன. கர்நாடகா உயர்நீதிமன்றம் 144, CrPC (டிசம்பர் 19 முதல் 21, 2019 வரை) விதித்ததை "சட்டவிரோதம்" என்று ரத்து செய்தது. மகாராஷ்டிராவின் பீட்-ஐ சேர்ந்த ஒரு முஸ்லீம் மனுதாரர் மும்பை உயர்நீதிமன்றத்தின் அவுரங்காபாத் பெஞ்சை அணுகி உள்ளிருப்பு போராட்டத்திற்கான அனுமதி கோரினார். ஆனால் இந்த கோரிக்கையானது, மாவட்ட மாஜிஸ்டிரேட்டினால் மறுக்கப்பட்டது.

இரண்டு நீதிபதிகள் கொண்ட பெஞ்ச், போராட்டத்தை தடை செய்த மாவட்ட மாஜிஸ்திரேட் மற்றும் காவல்துறையின் உத்தரவு சட்டவிரோதமானது என்றும், ஒரு சட்டத்திற்கு எதிராக அமைதியாக போராட்டம் நடத்துபவர்களை தேசத்துரோகிகள் அல்லது தேச விரோதிகள் என்று அழைக்க முடியாது என்றும் தீர்ப்பளித்தது. உ.பி.யில் சி.ஏ.ஏ-வுக்கு எதிரான போராட்டங்களுக்கு பதிலடி கொடுப்பதில் போலீசார் அத்துமீறியதை அலகாபாத் உயர்நீதிமன்றம் தானாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துக்கொண்டது. மேலும் லக்னோ மாவட்ட நிர்வாகத்திற்கு ஒரு உத்தரவிட்டது, "போராட்டத்தின் போது கைது செய்யப்பட்டவர்களை தேசத்துரோகி போன்ற அவமானப்படுத்தும் சர்ச்சைக்குரிய பெயர்களை பயன்படுத்தக் கூடாது என்றும், அரசியலமைப்பின் சரத்து 21ன் கீழ் பாதுகாக்கப்பட்ட தனியுரிமைக்கான மக்களின் உரிமையை இவை மீறுவதாகக் கூறியது.

## CAA மீதான அரசியல் வேறுபாடு

CAA எதிர்க்கட்சிகளால் கடுமையாக விமர்சிக்கப்பட்டது. ஜனவரி 13, 2020 அன்று CAAக்கு எதிரான தீர்மானத்தை வெளியிட 20 அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்தன. ஏழு மாநில அரசுகள் - சத்தீஸ்கர், கேரளா, மத்தியப் பிரதேசம், பஞ்சாப், ராஜஸ்தான், தெலங்கானா மற்றும் மேற்கு வங்கம் - ஜனவரி-பிப்ரவரி 2020ல் CAAக்கு எதிராக தீர்மானங்களை நிறைவேற்றியது. மார்ச் 2020ல், டெல்லி சட்டமன்றம் NPR மற்றும் NRC ஐ திரும்பப் பெற வலியுறுத்தி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.

## மாநில அரசுகளின் தீர்மானங்கள் சொல்வதென்ன?

“குடியுரிமை திருத்தச் சட்டம் அரசியலமைப்பின் மதச்சார்பற்ற பார்வைக்கு எதிரானது என்பதால், அரசியலமைப்பின் அடிப்படை கட்டமைப்பை மீறுகிறது” என்று கேரள சட்டமன்றத்தின் தீர்மானம் கூறியது.

பஞ்சாப் சட்டப் பேரவையின் தீர்மானம், அது பிரிவினையை ஏற்படுத்துவதாகவும், அனைவருக்கும் சமத்துவத்தை அளிக்கும் சுதந்திரமான மற்றும் நியாயமான ஜனநாயகத்திற்கு எதிரானது என்றும் கூறியது. குடியுரிமை வழங்குவதில் மத அடிப்படையிலான பாகுபாடுகளுடன், CAA ஆனது நமது மக்களின் சில பிரிவினரின் மத மற்றும் கலாச்சார அடையாளத்தையும் ஆபத்தில் ஆழ்த்தக்கூடும் என்றும் கூறியது.

ராஜஸ்தான் சட்டசபையில் தீர்மானத்தை முன்வைத்த நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி தரிவால், “சிஏஏ என்பது அரசியலமைப்பின் மதச்சார்பற்ற கட்டமைப்பின் மீதான தாக்குதல்” என்று கூறினார்.

இதேபோல், தெலுங்கானா சட்டமன்றத்தின் தீர்மானத்தின்படி, “குடியுரிமை திருத்தச் சட்டம், 2019, தேசிய மக்கள்தொகைப் பதிவேடு மற்றும் தேசிய குடிமக்கள் பதிவேடு ஆகியவற்றின் மூலம் இந்தியக் குடியுரிமையை உள்ளடக்கிய மற்றும் மதச்சார்பற்ற தன்மையைக் குழப்புவதற்கான ஒருங்கிணைந்த முயற்சிகள் நடந்துள்ளன. சமத்துவம், பாகுபாடு இல்லாமை, மதச்சார்பின்மை போன்ற கொள்கைகளை மீறுவது மட்டுமின்றி, இந்த ஒருங்கிணைந்த முயற்சி, குடியுரிமைக்கான போதுமான ஆவணச் சான்றுகள் இல்லாத, பாதிக்கப்படக்கூடிய குழுக்களின் உயிருக்கும் ஆபத்தை ஏற்படுத்தும்.” என்று கூறியது.

மேற்கு வங்க சட்டப் பேரவையின் தீர்மானம், “சிஏஏவில் இந்தியக் குடியுரிமைக்கு விண்ணப்பிக்கும் தகுதியை அளவிடுவதற்கு மதம் ஒரு அளவுகோலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது... மத்தியில் ஆளும் கட்சி மதத்தைப் பயன்படுத்தி மக்களுக்கு “ஆப்பு” வைத்து வருகிறது. மனித உரிமைகளை சேதப்படுத்துகிறது.”

ஆந்திரப் பிரதேசம், பீகார், மகாராஷ்டிரா மற்றும் ஒடிசா உள்ளிட்ட பிற மாநில அரசுகளும் CAA-NRC-ஐ அமல்படுத்துவதில் தயக்கத்தை காட்டின.

தமிழ்நாடு சட்டமன்றமும் சிஏஏ-ஐ ரத்து செய்வதற்கான ஒரு தீர்மானத்தை இயற்றியது. அதில், “இந்தச் சட்டம் இலங்கை தமிழ் அகதிகளுக்கு துரோகத்தை இழைப்பதாக இருக்கும் என்பதால் ஒன்றிய அரசை கேட்டுக்கொண்டது.

இலங்கையைச் சேர்ந்த சிறுபான்மைத் தமிழர்கள், பூடானை சேர்ந்த நேபாள இனத்தவர்கள், மியான்மரில் இருந்து வந்த ரோஹிங்கியா முஸ்லிம்கள், ஆப்கானிஸ்தானின் ஹசாராக்கள், பாகிஸ்தானின் ஷியாக்கள் மற்றும் அஹ்மதியாக்கள் போன்றவர்களையும் இந்த சட்டம் விலக்குகிறது.

சிஏஏ அரசியலமைப்பின் அடிப்படைகளுக்கு உட்பட்டதுதானா? என்ற கேள்வியை கேரள அரசு உச்சநீதிமன்றத்தில் எழுப்பியது. மேலும் இது ஒருதலைபட்சமாக உள்ளது என்றும், “Colorable Legislation - பொய்மை தோற்ற விதி” படி அரசியலமைப்பில் எதையெல்லாம் நேரடியாக செய்யக்கூடாது என்று உள்ளதோ, அதையெல்லாம் மறைமுகமாகவும் செய்ய கூடாது என்றும், மதசார்பற்ற தன்மையை மீறும் வகையில் இந்த சட்டத்தை உருவாக்குவது அரசியலமைப்பின் அடிப்படையை மீறுவது என்றும் வாதிட்டது.

இவைகளுக்கு மத்தியில் குஜராத் சட்டசபையில், ஜனவரி 2020 அன்று சிஏஏ-க்கு ஆதரவான தீர்மானத்தை இயற்றியது.

## நாடு தழுவிய எதிர்வினைகள்

சமூகத்தில் உள்ள பல்வேறு குழுக்களும், தங்கள் எழுத்துகள், உரைகள் மற்றும் தெருமுனை போராட்டங்களின் மூலம் CAA பற்றிய தங்கள் அச்சங்களை வெளிப்படுத்தினர். குடியுரிமை (திருத்த) மசோதா, 2019 ஆரம்பத்தில் தாக்கல் செய்யப்பட்டபோது, 625 சிவில் சமூக உறுப்பினர்கள் அதை திரும்பப் பெறக் கோரி ஒரு கடிதம் எழுதினர், அதில் "ஒரு சமூகத்தை அப்பட்டமாக விலக்குவது என்பது மக்களை பிளவுபடுத்தும் என்றும், அது "சீர்படுத்த முடியாத வகையில், இந்திய குடியரசின் தன்மையை சேதப்படுத்தும் என்றும் எச்சரித்தனர். CAA என்பது மதத்தின் அடிப்படையில் பாகுபாடு காட்டுவதால் அரசியலமைப்பிற்கு எதிரானது என்றும், மத அடிப்படையில் சில குழுக்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கும் மற்றவர்களைத் தவிர்ப்பதற்கும் அரசியலமைப்பில் எந்த முகாந்திரமும் இல்லை. இந்திய மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களில் பணிபுரியும் சுமார் 2000 விஞ்ஞானிகள் மற்றும் அறிஞர்கள் கையெழுத்திட்ட எதிர்ப்பு மற்றும் கண்டனக் கடிதங்கள் சமூக ஆர்வலர்களால் வெளியிடப்பட்டன.

CAA நிறைவேற்றப்பட்டதற்கு சர்வதேச சமூகமும் எதிர்வினையாற்றியது. ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான அலுவலகம், இந்த புதிய சட்டம் "அடிப்படையில் பாரபட்சமானது மற்றும் இந்தியாவின் சர்வதேச மனித உரிமைக் கடமைகளுடன் பொருந்தாதது" என்று ஒரு பொது அறிக்கையை வெளியிட்டது. இந்த கருத்து சிஏஏ சம்மந்தமான உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களில் இணைக்கப்பட்டது. இஸ்லாமிய கூட்டமைப்பு - The Organization of Islamic Cooperation "சிஏஏ மீது அதிக அக்கறை செலுத்துவது, இந்திய முஸ்லிம்களுக்கு எதிராக இருப்பதாக" அறிவித்தது.

சர்வதேச மத சுதந்திரத்திற்கான அமெரிக்க ஆணையம் "மத பன்மைத்துவத்தின்" அடிப்படைக் கோட்பாட்டிற்கு எதிராக, குடியுரிமைக்கான ஆதாரமாக மதத்தைப் பயன்படுத்துவதைப் பற்றிய கவலைகளை எழுப்பியது. மேலும் இது "தவறான திசையில் ஆபத்தான திருப்பம்" என்று விவரித்தது. ஐரோப்பிய பாராளுமன்றத்தின் 54 சட்டமியற்றுபவர்கள் CAA இன் பாரபட்ச



மான தன்மையை விமர்சிக்கும் தீர்மானத்தை தாக்கல் செய்தனர். இறுதியாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. மறுபுறம், முன்னாள் சாலிசிட்டர் ஜெனரல் ஹரிஷ் சால்வே CAA பாரபட்சமானது இல்லை என்று வாதிட்டு ஒரு கட்டுரையை வெளியிட்டார். 154 முக்கியமான குடிமக்கள் CAA, NRC மற்றும் NPR ஆகியவற்றை ஆதரித்து ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளனர். ஆகஸ்ட் 2022 கணக்கு படி, ஜனவரி 22, 2020 முதல் உச்ச நீதிமன்றத்தில் CAAன் அரசியலமைப்பு செல்லுபடியை எதிர்த்து 160க்கும் மேற்பட்ட மனுக்கள் நிலுவையில் இருந்தன.

## மத்திய அரசின் பதில்

CAA நிறைவேற்றப்பட்ட சில வாரங்களில், CAA, NRC மற்றும் NPR ஆகியவற்றுக்கு இடையேயான உறவில் மத்திய அரசுக்கு தெளிவு இல்லை என்று தோன்றியது. CAA செயல்முறைக்கு NPR தரவு எவ்வாறு பயன்படுத்தப்படும் என்பதில் குழப்பம் நிலவியது. சட்ட அமைச்சர் உள்துறை அமைச்சருடன் முரண்படுகிறார். NPR தரவு "NRCக்கு பயன்படுத்தப்படலாம் அல்லது பயன்படுத்தப்படாமல் போகலாம் என்றும் கூறுகிறார். பரவலான CAA எதிர்ப்பு போராட்டங்களை எதிர்கொண்டு, அரசியல் தலைமையின் உயர் மட்டங்களில் சிலர் கலவையான பதில்களை வெளிப்படுத்தினர். டிசம்பர் 23, 2019 அன்று, பிரதமர் நரேந்திர மோடி தனது அரசாங்கத்தை இந்தியா முழுவதும் என்ஆர்சி நடைமுறைப்படுத்துவதில் ஆர்வம் காட்டவில்லை, இந்த விஷயத்தில் இதுவரை எந்த விவாதமும் நடைபெறவில்லை என்று, புதுடெல்லியில் நடந்த பேரணியில் பேசினார். இந்தியாவில் உள்ள முஸ்லிம் சமூகம் சிஏஏ அல்லது என்ஆர்சி பற்றி பயப்பட ஒன்றுமில்லை என்று அவர் உறுதியளித்தார். மத்திய அரசின் மற்ற முக்கிய பிரமுகர்கள், CAAக்கு எதிரான போராட்டத்தை கிரிமினல் அல்லது தேச விரோதச் செயலுடன் ஒப்பிட்டு பதிலளித்தனர்.

2020 ஜனவரியில் நடந்த பேரணியில், உள்துறை அமைச்சர், "அரசு CAA சட்டத்தை திரும்பப் பெறப்போவதில்லை என்பதை நான் மீண்டும் கூற விரும்புகிறேன். எதிர்ப்பு தெரிவிக்க விரும்புவோர் அதைத் தொடரலாம்... நீங்கள் பாரத மாதாவுக்கு எதிராக முழக்கமிட்டால், நான் உங்களைக் கம்பிகளுக்குப் பின்னால் நிறுத்துவேன்," என்று கூறினார். "தேர்ந்தெடுக் கப்பட்ட அரசாங்கத்தை குறைமதிப்பிற்கு உட் படுத்தும்" மற்றும் "நாட்டின் உறுதிப்பாட்டை சீர்குலைக்கும்" நோக்கத்துடன் இந்த போராட் டங்கள் நடந்ததாக நிதி அமைச்சர் குற்றம் சாட்டினார்.

ஜனவரி 12 2020 அன்று மேற்கு வங்கத்தில் பாஜக தலைவர் ஒருவரின் அறிக்கைகள் மூலம், CAAக்கு எதிராக போராடுபவர்களை அவதூறாகப் பேசினர். அதில் அவர் எதிர்ப்பாளர்களை "ஒட்டுண்ணிகள்" மற்றும் பிசாசுகள்" என்று அழைத்தார். மேலும் "சிஏஏ எதிர்ப்பு போராட் டக்காரர்கள் பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் நாய்களைப்போல சுட்டுக் கொல்லுங்கள் (காவல்துறையால்) என்றும் கூறினார். இவரு டைய இந்த கூற்றிலிருந்து மற்ற தலைவர்கள் விலகிக்கொண்டார்கள். மறைந்த மத்திய ரயில்வே துறை அமைச்சர் சுரேஷ் அங்காடி, "யாராவது பொது சொத்துக்களை அழித்திருந்தால், அவர்களை பார்க்கும் இடங்களில் சுடுங்கள் என்று சம்பந்தப்பட்ட மாவட்ட நிர்வாகம் மற்றும் ரயில்வே அதிகாரிகளிடம் கூறினார்." ஏப்ரல் 2022 நிலவரப்படி, CAAக்கு விதிகளை உருவாக்குவதில் உள்துறை அமைச்சகம் இன்னும் செயல்பாட்டில் உள்ளது.

**முடிவுரை**

CAAன் நிறைவேற்றம் நாடு முழுவதும் சமூக-அரசியல் நிலையற்ற தன்மைக்கு வழிவகுத்தது. பொதுமக்களிடம் பலத்த எதிர்ப்பும், சட்டத் திற்கு எதிரான உணர்வுகளும் கிளம்பியது. அரசியல் கட்சிகளும் சில மாநில அரசுகளும் நடவடிக்கை எடுத்தன. இந்த சட்டத்திற்கு தங்கள் எதிர்ப்பை தெரிவிக்க வேண்டும் என. CAA முஸ்லிம் சமூகம் மற்றும் மற்ற சமூக மக்களால் மத அடையாளத்தின் அடிப்படையில் குடியுரிமையை வழங்கும் கருவியாக, சமூகத்தில் பிரிவுகளை ஏற்படுத்தும் கருவியாக பார்க்கப் பட்டது. பெரிய எண்ணிக்கையிலான மக்கள் தங்களுடைய எதிர்காலம் என்னவாக இருக்கும் என்று கவலையில் இருந்தனர். சட்டம் இயற்றும் செயல்முறை எதுவும் பின்பற்றப்படவில்லை. இந்த சட்டம் முன்பில்லாத எதிர்ப்புகளை சந்தித் துள்ளது. சிஏஏவின் சட்டப்பூர்வமான தன்மை குறித்த கேள்வியை உச்ச நீதிமன்றம் நிலுவையில் வைத்துள்ள நிலையில், அந்த கேள்வியே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இன்ஷா அல்லாஹ் அடுத்த தொடரில், டெல்லியில் நடந்த வகுப்புவாத வன்முறைக்கு, அந்த வன்முறை வெடித்ததற்கு முந்தைய மாதங் களின் வன்முறைக்கான முக்கிய காரணிகளைப் பற்றியும், CAAவிற்கு எதிரான நகரம் முழுவதும் நடந்த போராட்டத்தில் அரசு சார்ந்த மற்றும் சாரதாவர்களின் பதில்களையும், 2020 டெல்லி சட்டப்பேரவை தேர்தல் பிரச்சாரத்தின் இயல்பு களையும் பற்றி பார்ப்போம்.


## ஹாஜி முஹம்மது ஜக்கரிய்யா பாய்

**அவர்களுக்கு**

**வாழ்நாள் சாதனையாளர் விருது**

**இடம் - கும்பகோணம், நாள் 12-02-2023**

- ஜாதிய அடக்குமுறைகளுக்கும், அடுக்குமுறைகளையும் எதிர்த்து நிற்பதில் வாழ்நாள் தொடக்கந்தொட்டே களம் கண்டவர்.
- ஜாதியக் கொடுமைகளுக்கு எதிரானப் போரில் தன் உயிரைத் தந்திடவும் தயாராக இருந்தார் ஹாஜி ஜகரிய்யா பாய். அப்போது சின்னையா. களங்களை மட்டுமல்ல, சிறைகளையும் கண்டவர்.
- ஆதிக்க ஜாதி வெறி பிடித்தோர் அவரைக் கொலை செய்யவும் திட்டமிட்டார்கள், வீட்டுக்கும் வந்துவிட்டார்கள். கட்டிலில் அவர் இல்லை. ஏமாந்து சென்றார்கள். இப்படி அடர்ந்து வந்த அத்தனை இடர்களையும் எதிர்கொண்டவர்.
- ஜாதியை ஒழிப்போம் என வந்த எல்லா இயக்கங்களிலும் இணைந்தார், உழைத்தார். பலனின்றி பாதையை மாற்றினார்.
- 1982ஆம் ஆண்டு நீடூரில் நடந்த எமது தாஃவா நிகழ்ச்சியில் இஸ்லாத்தை ஏற்றார். தன்னையும், தன் குடும்பத்தை ஒற்றிக்கொண்டிருந்த ஜாதியை ஒழித்தார்.
- தொடர்ந்து, இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்தார். அதன்வழி ஏராளமானவர்களின் ஜாதியை ஒழித்தார்.
- ஹஜ்ஜு, உம்ரா கடமைகளையும் நிறைவேற்றினார். எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே.
- இன்றளவும், எம்மோடு அதே களத்தில் கிஞ்சிற்றும் தடுமாறாமல் உறுதியாக நிற்கின்றார். அவருடைய உழைப் பிற்கும் உறுதிக்கும் நன்றி சொல்லிடவே இந்த விருது! அங்கீகாரம்!!

அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அல்லாஹ் அவர்களைப் பொருந்திக்கொள்வானாக.

தொடர்புக்கு : **81481 29887**

# இந்தியாவின் தேசத் துரோகச் சட்டம் எப்படி அரசியல் மற்றும் வகுப்புவாத ஆயுதமாகப் பயன்படுத்தப்படுகிறது?



சமீப ஆண்டுகளில் கர்நாடகாவின் பரபரப் பான தேசத்துரோக வழக்குகள் பற்றிய மூன்று ஆய்வுத் தொடரின் இரண்டாவது தொடர் இது. இந்த தொடர் தேசத்துரோகச் சட்டத்தை ஒரு அரசியல் கருவியாகவும், வன்முறையைத் தூண்டும் ஆயுதமாகவும் எப்படி பயன்படுத்தப் படுகிறது என்பதை ஆராய்கிறது.

வடக்கு கர்நாடகாவின் ஒரு அமைதியான கிராமம். ஒரு சில நிமிடங்களில் அது அமைதி யற்ற கிராமமமாக மாறியது. பிப்ரவரி 15, 2019 அன்று, கஷ்மீரின் புல்வாமாவில் நடந்த பயங்கர வாத தாக்குதலில் 40 (CRPF) ஜவான்கள் கொல் லப்பட்ட ஒரு நாளுக்குப் பிறகு, இந்த கிராமத் தைச் சேர்ந்த ஆறு முஸ்லிம் ஆண்கள் மசூதியில் “கொண்டாட்டம்” செய்ததாக குற்றம் சாட்டப் பட்டனர். 40 வயது முதல் 65 வயது வரை உள்ளவர்கள் அனைவரும் இனிப்புகளை வழங்கி பாகிஸ்தானுக்கு ஆதரவாக கோஷம் எழுப்பி “தங்கள் மீது பச்சை நிறத்தை பூசிக் கொண்டு” கொண்டாடியதாக உள்ளூர் பாஜக தலைவரான விவசாயி ஒருவர் காவல்துறையில் புகார் அளித்துள்ளார்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, இந்திய தண்டனைச் சட்டம் (IPC), 1860 இன் பிரிவு 124A (தேசத்துரோகம்) மற்றும் பிரிவு 153 (கலவரத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் தூண்டுதல்) ஆகிய வற்றின் கீழ், ஆறு பேரும் கைது செய்யப்பட்டு, குற்றம் சாட்டப்பட்டனர். சட்டவிரோதமாக ஒன்றுகூடுவது தொடர்பான IPC இன் பிற பிரிவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

முதல் தகவல் அறிக்கையில் (எஃப்ஐஆர்) கர்நாடகாவின் ஏழ்மையான பிராந்தியங்களில் ஒன்றான இந்த கிராமத்தில் கொண்டாடப்பட்ட தாகக் கூறப்படும் “காட்சிகள்” - மசூதியாக இருந்த ஒரு சிறிய கட்டிடத்துடன் கூடிய மேடையில் இனிப்புகள் மற்றும் தூள் பொடிகள் கிடப்பதைக் காட்டும் ஒரு வீடியோ - தேசத் துரோகச் செயலுக்கு ஆதாரமாக உள்ளூர் செய்தி சேனல்களில் ஒளிபரப்பப்பட்டதாக கூறப்பட்டி ருந்தது.

குற்றம் சாட்டப்பட்ட ஆறு பேரும், வேறுசில கிராம மக்களும், “இந்த காட்சிகள் கிராமத்தில் அதிக எண்ணிக்கையில் இருக்கும் லம்பானி சமூகத்தால் பிப்ரவரி 15 அன்று கொண்டாடப் பட்ட செவலால் ஜெயந்தி விழாவின் காட்சிகள்” என்று கூறினர்.

அடுத்த நாள், மசூதிக்கு செல்லும் வழியை கேட்டபடி ஏறக்குறைய 50 பேர் கூடினர்.. கடுமையான விரோத சிந்தனையுடன் “நீ இந்துவா அல்லது முஸ்லிமா?” என்று கேட்டுக்கொண்டிருந் தனர். ஒரு கும்பல் கிராமத்தைச் சுற்றி போக்கு வரத்தைத் தடுத்தது. மதியத் தொழுகையின் போது மக்கள் மசூதிக்குள் நுழையும்போது, ‘பாரத் மாதா கி ஜெய்’ என்று கோஷமிட்டனர். தொழுகையாளிகளை வெளியேற்றினர்.



vaigarai velicham official

மசூதியில் இருந்த பாய்கள், சுவரொட்டிகள் மற்றும் கொடிகளை தீ வைத்து எரித்தனர். மசூதி சேதப்படுத்தப்பட்டது. 18 முஸ்லீம் வீடுகள் உட்பட சுமார் 1,500 மக்கள் வசிக்கும் அந்த கிராமத்தில் காவி கொடிகள் பறக்க விடப்பட்டன.

குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவரான 60 வயது முஸ்லீம் ஒருவர், “நாங்கள் அந்த நாள் முழுவதும் தங்கள் வயல்களில் இருந்த தாகவும், புல்வாமா தாக்குதலைக் கூட நாங்கள் அறிந்திருக்கவில்லை என்றும், எங்களிடம் மொபைல் போன்களோ அல்லது தொலைக் காட்சிப் பெட்டிகளோ இல்லை” என்றும் கூறினர். “அன்றிரவு நாங்கள் மஸ்ஜிதில் கூட சந்திக்கவில்லை,” என்று அவர் கூறுகிறார்.

மேற்குறிப்பிட்ட அந்த மசூதி புதர்களால் சூழப்பட்ட ஓர் இடத்தில் உள்ளது. அந்த இடம் அரசாங்கத்திற்குச் சொந்தமான ஒரு சொத்தாகும். அங்கு கிராமத்தின் முஸ்லிம்கள் கிட்டத்தட்ட 15 ஆண்டுகளுக்கு முன்பு இங்கு தொழுகையை தொடங்கினர். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, மசூதியின் பச்சை சுவர்கள் மட்டுமே அங்கு எஞ் சியிருக்கின்றன.

“பீர் பாபா தர்கா மற்றும் சில மத கலைப் பொருட்கள் போன்ற சில விஷயங்களை நாங்கள் அங்கு உருவாக்கினோம். இதில் யாருக்கும் எந்த ஆட்சேபனையும் இல்லை.” என்று குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவர் கூறினார்.

தங்கள் பாதுகாப்பு குறித்து பயந்து போயிருந்த சில ஆண்கள் கிராமத்திற்கு வெளியே Article 14 இணையதளத்தை சந்தித்தனர்.

“கடந்த மூன்று முதல் நான்கு ஆண்டுகளாக, இந்த கிராமத்தில் வகுப்புவாத வன்முறைக்கான அச்சுறுத்தல் இருந்து வருகின்றது. பொய்யான தேசத்துரோக வழக்கைப் பதிவு செய்ததன் மூலம் அவர்கள் (வன்முறையாளர்கள்) விரும்பியதைப் பெற்றார்கள். மசூதியும் அழிக்கப்பட்டது.” என்று அந்த நபர்கள் கூறுகிறார்கள்.”


### தேசத்துரோக வழக்கு : வகுப்புவாத பதட்டங்களைத் தூண்டுவதற்கான ஒரு கருவி

மேற்குறிப்பிட்ட கிராமவாசிகளின் அனுபவம் இந்தியா முழுவதும் பல நிகழ்வுகளில் பிரதிபலிக்கிறது. தேசத்துரோக குற்றச்சாட்டு அரசியல் அல்லது வகுப்புவாத நோக்கங்களுக் கான ஒரு கருவியாக பயன்படுத்தப்படுகிறது. பெரும்பாலும், பழிவாங்க அல்லது அரசியல் செயல்பாடுகளை சமன் செய்வதற்கான எளிதான வழியாக பயன்படுத்தப்படுகிறது.

இந்தியாவின் தேசத்துரோக சட்டம் பிரிட்டிஷ் ஆட்சிகாலத்தில், இந்திய சுதந்திரத்திற்கு ஆதரவாக போராடுபவர்களை ஒடுக்குவதற்காக உருவாக்கப்பட்ட ஒரு சட்டமாகும்.

இப்போதைய சுதந்திர இந்தியாவும் இந்த சட்டத்தை அடக்குமுறையின் கருவியாகத்தான் பயன்படுத்தி வருகிறது. கடந்த சில ஆண்டு களாக அது அதிகரித்து வருகிறது. Article 14 இணையதளத்தின் தரவுகளை உற்று நோக்கும் போது, 2009 மற்றும் 2020க்கு இடைப்பட்ட தேசத்துரோக வழக்குகளில் அரசியல்வாதிகள் மற்றும் அரசாங்கங்களை விமர்சித்ததற்காக 405 இந்தியர்கள் மீது இச்சட்டம் பயன்படுத்தப் பட்டுள்ளது. இதில் 96% வழக்குகள் 2014க்குப் பிறகு பதிவு செய்யப்பட்டவை என்பதைக் காட்டுகிறது.






இந்தியா முழுவதும், 149 நபர்கள் மோடிக்கு எதிராக "விமர்சனமான அல்லது இழிவான" கருத்துகளை கொண்டு பேசியதற்காக தேசத்துரோக குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ளனர். 144 பேர் உத்தரபிரதேச (உ.பி.) முதல்வர் யோகி ஆதித்யநாத்துக்கு எதிராக பேசியவர்கள். குற்றம் சாட்டப்பட்டவர்களில் மாணவர்கள், ஊடகவியலாளர்கள், எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் மற்றும் சமூக ஆர்வலர்களும் அடங்குவர்.

2010 முதல் கர்நாடகா மாநிலத்தில் 53 தேசத்துரோக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவைகளில் 29 (56%) வழக்குகள், பேரணிகள் அல்லது சமூக ஊடகங்களில் வெளிப்படுத்தப்பட்ட அரசியல் கருத்துடன் தொடர்புடையவை.

Article 14 தரவுத்தளம் 32 வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மற்றும் அவர்களது வழக்கறிஞர்களுடன் மேற்கொண்ட நேர்காணல்களின் படி பார்த்தோமேயானால், குடியுரிமை (திருத்த) சட்டம் (CAA), 2019 மற்றும் காஷ்மீர் நிலைமைக்கு எதிராக பேசிய ஆண்களும் பெண்களும் இதில் அதிகமாக இடம்பெற்றுள்ளனர்.

CAA எதிர்ப்புப் போராட்டங்களின்போது, 3,700 பேர் சம்பந்தப்பட்ட 25 தேசத்துரோக வழக்குகளில் பாஜக ஆளும் மாநிலங்களில் 22 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் கர்நாடகாவின் 6 வழக்குகளும் அடங்கும்.

**அரசியல் போராட்டங்களும் - தேசத்துரோக குற்றச்சாட்டுகளும்**

2019 நவம்பரில் வருமான வரித்துறைக்கு எதிரான போராட்டத்தை ஏற்பாடு செய்ததற்காக முன்னாள் முதல்வர்கள் உட்பட கர்நாடகாவில் காங்கிரஸ் மற்றும் ஜனதா தளம் (எஸ்) தலைவர்கள் தேசத்துரோக வழக்குகளை எதிர்கொண்டனர்.

CAA எதிர்ப்பு போராட்டங்களில் தொடர்ந்து பேசி வந்த காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் U.T. காதர் மீது தேசத்துரோக வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. "ஆட்சேபனைக்குரியதாக சட்டம் இயற்றப்பட்டதால் நாடு அமைதியின்மையைக் கண்டுள்ளது." என்று அவர் கூறியிருந்தார்.

மாநிலத்தின் வடகிழக்கு விளிம்பில் உள்ள பிதார் எனும் கிராமத்தில் உள்ள ஒரு ஆரம்பப் பள்ளி நிர்வாகம் CAAக்கு எதிராக ஒரு நாடகத்தை ஏற்பாடு செய்ததற்காக குற்றம் சாட்டப்பட்டது.

ஒரு பேரணியில் 'பாகிஸ்தான் ஜிந்தாபாத்' என்று முழக்கமிட்டதாக 22 வயது பெண் மீது குற்றம் சாட்டப்பட்டது. தெற்காசிய அண்டை நாடுகளுக்கிடையேயான ஒற்றுமையைப் பற்றி அவர் அந்த பேரணியில் பேச முயன்றார்.

மங்களூரில், SDPI அமைப்பைச் சார்ந்த மூன்று நபர்கள் மீது தேசத்துரோக வழக்கு பதிவு செய்யப்பட்டது. காரணம், அவர்கள் போராட்டக்காரர்களை, மொபைல் கேமாரா மூலம் வீடியோக்களை எடுக்க தூண்டி, காவல்துறையின் அட்டூழியங்களை சமூகவலைதளங்களில் வெளியிட வைத்தனர். CAA போராட்ட களத்தில் காவல் துறையின் துப்பாக்கிச்சூட்டால் 2 நபர்கள் இறந்த அதே இடத்தில் இந்த சம்பவம் நடந்துள்ளது.

"தேசத்துரோக சட்டம் ஒரு பயனற்ற சட்டமாக இருக்கிறது. ஆனால் எதிர்கட்சியாக இருந்தாலும் சரி, எழுத்தாளர்கள், சிந்தனையாளர்களாக இருந்தாலும் சரி அவர்களின் எதிர்

கருத்துகளையும், கருத்து வேறுபாடுகளையும் அடக்குவதற்கான ஒரு கருவியாகத்தான் பயன்படுத்தப்படுகிறது. அரசுக்கு எதிரான தங்கள் நிலைப்பாட்டை விவரிக்கும் போராட்டங்கள் தேசத்துரோகமாக ஆகிவிடாது. அப்படியாகுமேயானால் ஒரு எதிர்க்கட்சியின் பங்குதான் என்ன?. அரசியலமைப்புச் சட்டங்களால் வரையறுக்கப்பட்டிருந்தாலும், அரசாங்கத்தை கேள்வி கேட்கவும், தவறுகளை சுட்டிக்காட்டுவதும் தானே எதிர்கட்சியின் வேலை?" என்று கர்நாடக காங்கிரஸ் கட்சியின் செய்தி தொடர்பாளர் ஏ.எஸ்.பொன்னண்ணா Article 14 இணைய தளத்திடம் தெரிவித்திருந்தார்.

**தேசத்துரோக புகார்களில் எதிரொலிக்கும் காவி நிறம்**

குற்றம் சாட்டப்பட்டவர்களின் நேர்காணல்கள் மற்றும் ஊடக அறிக்கைகளின் அடிப்படையில், கர்நாடகாவில் குறைந்தது 13 தேசத்துரோக வழக்குகளில் புகார்தாரர் பிஜேபி அல்லது பஜ்ரங் தள், அகில பாரதிய வித்யார்த்தி பரிஷத் (ஏபிவிபி), இந்து யுவா மோர்ச்சா போன்ற பிற வலதுசாரி இந்துத்துவா குழுக்களுடன் தொடர்புடையவர். இந்த வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் அரசியல் குழுக்களை சேர்ந்தவர்கள் மற்றும் முஸ்லிம்கள்.

ஜனவரி 2021ல், கடலோர கர்நாடகாவில் உள்ள உள்ளூர் கிராம பஞ்சாயத்து தேர்தல்களில் தங்கள் வேட்பாளர்களின் வெற்றியைக் கொண்டாடும் போது 'பாகிஸ்தான் ஜிந்தாபாத்' என்று கோஷமிட்டதற்காக மூன்று SDPI தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர். உள்ளூர் விஷ்வ ஹிந்து பரிஷத் தலைவரின் புகாரின் பேரிலும், 'பாகிஸ்தான் ஜிந்தாபாத்' கோஷத்தின் ஆடியோவுடன் SDPI ஆதரவாளர்களின் வைரல் வீடியோவின் அடிப்படையிலும் போலீசார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நான்கு மாதங்களுக்குப் பிறகு, மே 2020ல் மூவரும் ஜாமீனில் விடுவிக்கப்பட்டனர். ஆடியோ அசல் பதிவா அல்லது உருவாக்கப்பட்டதா? அல்லது அவர்கள் உண்மையில் அந்த வார்த்தைகளைப் சொல்கிறார்களா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

SDPI தலைவர்களின் கூற்றுப்படி, "முடிவுகள் வந்தவுடன் கட்சியினர் 'SDPI ஜிந்தாபாத்' என்று கூச்சலிட்டனர். அதே நேரத்தில், எங்கள் வெற்றி பாகிஸ்தானின் வெற்றி என்று சொல்வது போல் சில பாஜகவினர் 'பாகிஸ்தான் முர்தாபாத்' என்று கூச்சலிட்டனர்" என்று உள்ளூர் SDPI தலைவர் அப்கார் பெல்தங்கடி, கூறுகிறார்.

"வைரல் கிளிப்பின் ஆடியோ உண்மையில் 'SDPI ஜிந்தாபாத்' மற்றும் 'பாகிஸ்தான் முர்தாபாத்' ஆகிய இரண்டு கோஷங்களின் கலவையாக இருப்பதால் யாராலும் உறுதியாகச் சொல்ல முடியாது. இந்த வீடியோவை மட்டும் ஆதாரமாக வைத்து கைது செய்வது அரசியல் இல்லையா?" என்று அவர் கூறுகிறார்.

மார்ச் 2016ல், ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழக (JNU) மாணவர் சங்கத் தலைவர் கன்னையா குமாருக்கு ஆதரவாக துண்டுப் பிரசுரங்களை விநியோகித்த இரண்டு இடதுசாரி மாணவர் சங்க உறுப்பினர்கள் மீது ஏபிவிபியின் கர்நாடக பிரிவு தேசத்துரோகக் குற்றம் சாட்டியது. பெங்களூருவின் புறநகரில் உள்ள பரபரப்பான இடத்தில் மாணவர்கள் 'பாகிஸ்தான் ஜிந்தாபாத்' என்று முழக்கமிட்டதாக புகார் கூறப்பட்டது. "இந்தப் பொய்யான புகாரின் அடிப்படையில் எங்கள் மீது போலீஸார் தேசத்துரோக வழக்குப் பதிவு செய்துள்ளனர். வேறு எந்த ஆதாரமும் இதில் இல்லை" என்று அந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவர் கூறுகிறார். அதன் பின் SP தலையிட்டு விசாரித்ததால் அந்த வழக்கு கைவிடப்பட்டது.

**தேசத்துரோக குற்றச்சாட்டுகள் குறித்த பா.ஜ.க. தலைவர்களின் இரட்டைப் பேச்சு**

2017 நவம்பரில், இந்திய அரசியலமைப்பு "புனிதமானது அல்ல" என்று கூறியதற்காக கர்நாடகாவின் சட்டப் பேரவையின் பாஜக உறுப்பினரும் செய்தித் தொடர்பாளருமான ஜி.மதுசூதன் தேச துரோக குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டார். காங்கிரஸ் தலைமையிலான மாநில அரசு திப்பு ஜெயந்தியை கொண்டாடும் சூழலில், தொலைக்காட்சி விவாதத்தின் போது அவர் இந்த கருத்தை தெரிவித்தார்.

இந்த விவாதத்தை டிவியில் பார்த்த ஒருவரின் புகாரின் அடிப்படையில் மதுசூதனன் மீது தொலைதூரத்தில் உள்ள வடக்கு கர்நாடக நகரத்தில் போலீசார் தேசத்துரோக வழக்கு பதிவு செய்தனர். "இந்த புகார் அரசியல் உள்

நோக்கத்துடன் கொடுக்கப்பட்ட புகார்" என்று கூறியிருந்தார்.

இதுநடந்த இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, மைசூருவில் CAA எதிர்ப்புப் போராட்டத்தில் 'ஃப்ரீ காஷ்மீர்' போஸ்டர் ஒட்டியதற்காக இரண்டு கல்லூரி மாணவர்கள் மீது தேசத்துரோக வழக்கு பதிவு செய்யப்பட்டபோது, அவர்களுக்கு எதிராக பேசியவர்களில் மதுசூதனும் ஒருவர். "நாட்டின் ஒற்றுமையை குலைக்க நினைப்பவர்கள் மீது தேச துரோக வழக்கு பதிவு செய்ய வேண்டும். அரசியல்வாதிகளுக்கு எதிராகவோ அல்லது அரசியல் ஆதாயத்திற்காகவோ அல்ல," என்று அவர் தனது வெளிப்படையான இரட்டைப் பேச்சை தெரிவித்திருந்தார்.

2010ம் ஆண்டில், பிஜேபி அரசாங்கத்தால், மக்கள் யூனியன் ஃபார் சிவில் லிபர்ட்டிஸ் (PUCL) குறிவைக்கப்பட்டது. அவர்களின் பத்திரிகையில் வெளிவந்த ஒரு தலையங்கம், தெற்கு கர்நாடகாவில் நக்சல்கள் என்று கூறப்படும் ஐந்து பழங்குடியினரின் மரணத்திற்கு அரசாங்கத்தை குற்றம் சாட்டியது. மேலும் கர்நாடகாவின் கடலோர பகுதிகளில் அதிகரித்து வரும் கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறைகளையும் சுட்டிக்காட்டியது.

காங்கிரஸ் தலைமையில் இருந்த அரசின் போது, Amnesty International அமைப்பின் மீது, ABVPவினர் கொடுத்த புகாரின் அடிப்படையில் தேசத்துரோக வழக்கு பதியப்பட்டது.

இந்த அமைப்பு ஆகஸ்டு 13, 2016ம் ஆண்டு, பெங்களூரில் உள்ள ஒரு மைதானத்தில், "கஷ்மீரில் சிதைந்த குடும்பங்கள்" என்ற தலைப்பில் ஒரு நிகழ்ச்சியை நடத்தியது. அதில் பெரிய எண்ணிக்கையில் போலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். கஷ்மீரின் பிரபலமான ராப் பாடகர் ஒருவர் மேடை ஏறும்போது போலீசார் மைக்ரோஃபோன் சிஸ்டத்தை அணைத்தனர். இதனால் கிளர்ச்சியடைந்த பார்வையாளர்களில் சிலர், "ஆசாதி, ஆசாதி (சுதந்திரம், சுதந்திரம்)" என்று கோஷமிடத் தொடங்கினர். அமைப்பாளர்கள் கூட்டத்தை அமைதிப்படுத்தியபோதும், அரங்கிற்கு வெளியே ஏபிவிபி செயற்பாட்டாளர்கள் அம்னெஸ்டி இன்டர்நேஷனல் மீது புகார் அளித்தனர்.

அம்னெஸ்டி இன்டர்நேஷனல் இந்தியாவின் இயக்குனர் ஆகர் படேல் இதுகுறித்து தெரிவிக்கும் போது,



"அவர்கள் எங்களை துன்புறுத்துவதற்காகத் தான் தேசத்துரோக வழக்கை போட்டுள்ளார்கள். பெங்களூரில் உள்ள எங்கள் அலுவலகங்களுக்கு வெளியே பி.எஸ்.எடியூரப்பாவும், முன்னாள் மந்திரி ஆனந்த் குமாரும் வன்முறையாளர்களை ஏவிவிட்டுள்ளனர். எங்கள் ஊழியர்கள் அலுவலகத்திற்குள் இரண்டு நாட்கள் முற்றுகையிடப் பட்டனர். எவ்வளவு முயன்றும் போலிஸாரால் அந்த கும்பலை அகற்ற முடியவில்லை."

"மூன்று ஆண்டுகள் கழித்து இந்த வழக்கில் தேசத்துரோக குற்றச்சாட்டிற்கான எந்த ஆதாரமும் இல்லை" என்று காவல்துறையின் 80 பக்க அறிக்கை கூறியதன் அடிப்படையில் 2019ல் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. இந்த மூன்று ஆண்டுகளில் சேதாரங்களுடன் சேர்த்து நாங்கள் ரூ.1 கோடி வருவாயை இழந்துள்ளோம்" என்று ஆகர் படேல் கூறுகின்றார்.

### காந்தியை ஆங்கிலேயர்கள் நடத்தியதுபோல் அவர்கள் என்னை நடத்துகிறார்கள்

1987ல் கான்ஸ்டபிளாக இருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்ட 62 வயதான வி.சசிதர் மீது தேசத்துரோக வழக்குகளை கர்நாடக போலீசார் பதிவு செய்தார்கள்.

சசிதர் இரண்டு தேசத்துரோக வழக்குகளை எதிர்கொண்டார். ஒன்று 2016ல், காவலர்களின் மோசமான பணி நிலைமைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், கீழ்மட்ட காவல்துறையினரை வெகுஜன விடுப்புக்கு (Mass leave) அழைப்பு விடுத்தபோது.

இன்னொன்று மீண்டும் 2019ல் மற்றொரு வேலைநிறுத்த அழைப்புக்கு அவர் அழைப்பு விடுத்ததாக பதியப்பட்டது.

"நான் அரசாங்கத்திற்கு எதிரான வன்முறையற்ற போராட்டத்தில் காவல்துறையினரை வழிநடத்துகிறேன். ஆனால் காந்தியை ஆங்கிலேயர்கள் நடத்தியதுபோல் அவர்கள் என்னை


vaigarai velicham official

நடத்துகிறார்கள்." என்று சசிதர் கூறுகிறார். இந்த போராட்டம் மூலம் 2016ல் மேலும் இரண்டு காவல்துறை அதிகாரிகள் தேசத்துரோக வழக்கில் குற்றம் சாட்டப்பட்டனர்.

2016ல் 86 நாட்கள் சிறையில் இருந்தார். 2019ல் அவர் மேலும் 22 நாட்கள் சிறையில் கழித்தார். இரண்டு முறையும் அவருக்கு ஜாமீன் கிடைத்ததால் வழக்கு நீதிமன்றங்களால் நிறுத்தப் பட்டது. "கடந்த நான்கு வருடங்கள் தாங்க முடியாத வேதனையானவையாக எனக்கு அமைந்துவிட்டது. போலீஸ்காரர்கள் நள்ளிரவில் தனது வீட்டிற்கு தேடுதல் வாரண்டுகளுடன் வருகை தந்தனர். எந்தக் கட்சி ஆட்சியில் இருந் தாலும், காவல்துறை சீர்திருத்தம் என்பது அரசுக்கு முள்ளாகவே உள்ளது" என்கிறார்.

2016ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் காங்கிரஸ் தலைமையிலான அரசு நீதிமன்றத்தில் அவரது செயல்கள் அரசாங்கத்திற்கு எதிராக தூண்டு தலாக இருப்பதாக தெரிவித்தது.

இந்த வழக்குடன் தொடர்புடைய வழக் கறிஞர், பேசுகையில், "ஆட்சிக்கு எதிரான போராட்டத்தை ஒடுக்குவதற்கான ஒரு கருவியாக தேசத்துரோகக் குற்றச்சாட்டு இந்த வழக்கில் பயன்படுத்தப்பட்டுள்ளது" என்று தெரிவிக்கிறார்.

### தேசத்துரோக குற்றச்சாட்டுகளில் தனிப்பட்ட புகார்கள் அதிகரிக்கிறது

Article 14 தரவுத்தளமானது, தேசத்துரோக சட்டம் பயன்படுத்தப்பட்ட நிகழ்வுகளில் ஒரு உண்மையை வெளிப்படுத்துகிறது. அது, "யார் வேண்டுமானாலும் தேசத்துரோக சட்டத்தில் குற்றம் சாட்டலாம். காவல்துறையும் ஆர்வமாக IPCன் இந்த பிரிவை பயன்படுத்துகிறது" என்பதேயாகும்.

டெல்லியில் உள்ள அம்பேத்கர் பல்கலைக் கழகத்தின் உதவிப் பேராசிரியரும், Sedition in Liberal Democrocies (Oxford University Press, 2018) என்ற நூலின் ஆசிரியருமான அனுஷ்கா சிங்,

"இந்தியாவில் ஒடுக்கப்பட்டவர்களைக் குறி வைக்க தேசத் துரோக சட்டம் பயன்படுத்தப் படுவதைத் தொடர்ந்து சாமானிய குடிமக்களி டையே இந்த சட்டம் குறித்த முன்னெப்போதும் இல்லாத விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. மேலும் இதை "பிரபலமான" சட்டமாகவும் ஆக்கியுள்ளது. 1980கள் மற்றும் 1990களில் காலிஸ்தானி அல்லது காஷ்மீரிய இயக்கங்களுக்கு சவால் விடும் வகையில் தேசத்துரோக வழக்குகள் பதிவு செய்யப்பட்டது. அந்த நிகழ்வுகளில், ஒரு அடையாளம் அல்லது அடையாள அடிப்படை யிலான இயக்கத்தை எதிர்கொள்ள ஒரு அரசியல் கருவியாக தேசத்துரோக குற்றச்சாட்டு இருந்தது. இப்போது, சட்டம் பிரபலமடைந் துள்ளது. மேலும் அதிகமான நபர்கள் தேசத் துரோக புகார்களை பதிவு செய்கிறார்கள். இரண்டு தசாப்தங்களுக்கு முன்பு கூட தேசத் துரோகத்திற்கான இந்த வகையான தனிப்பட்ட புகார்கள் இல்லை." என்று கூறுகிறார்.

22 பிப்ரவரி 2019 அன்று இரவு பெங்களூரில் உள்ள ஒரு பப்பில் (Pub) நடந்த உடல் ரீதியான



தகராறில் தேசத்துரோக புகார்கள் எழுப்பப்பட்ட திலிருந்து இதன் விளக்கத்தை நாம் புரிந்துக் கொள்ளலாம்.

குற்றம் சாட்டப்பட்டவரின் கூற்றுப்படி, உணவு விநியோகம் செய்பவர், ஒரு மாணவர் குழுவில் இருந்த ஒரு பெண்ணை நோக்கி சில கருத்துக்களை கூறியுள்ளார். இதனால் வாக்கு வாதம் ஏற்பட்டு, கைகலப்பும் ஏற்பட்டுள்ளது. காவல்நிலையத்தில் ஒவ்வொரு குழுவும் ஒருவர் மீது ஒருவர் வழக்குப் பதிவு செய்கிறார்கள். மாண வர்கள் கொடுத்த புகாரின் அடிப்படையில், ஐந்து அல்லது ஆறு ஆண்கள் மீது தாக்குதல், சட்ட விரோதமாக கூடுதல் மற்றும் தவறான தடுப்பு (wrongful restraint) போன்ற பிரிவுகளில் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

மாணவர்களுக்கு எதிரான புகாரில் அவர்கள்,

‘பாகிஸ்தான் ஜிந்தாபாத்’ மற்றும் அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பியதாக குறிப்பிட்டனர். இந்த சண்டை நடப்பதற்கு சற்று நேரத்திற்கு முன்பு வரை மாணவர்கள் புல்வாமா தாக்குதல் குறித்து பேசிக்கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மாணவர்கள் மீது தேசத்துரோக வழக்கு பதியப்பட்டது. அந்த Pub-ல் நடந்த முழு சம்பவத்தையும் விளக்கி, தாங்கள் பேசிய எந்த வார்த்தையும் இந்த நாட்டிற்கு எதிரானதாக இல்லை என்பதை குற்றம் சாட்டப்பட்டிருந்த மாணவர்களில் ஒருவர் விளக்கினார். அதன் பின் உள்ளூர் துணை போலிஸ் கமிஷனர் இந்த விவகாரத்தில் தலையிட்டு இந்த வழக்கை முடிவுக்கு கொண்டுவந்தார்.

**கிரிக்கெட் மற்றும் வகுப்புவாத வெறிக்கான தேசத்துரோகம்**

Article 14 இணையதளம் மேற்கொண்ட இந்த ஆய்வில் மற்றொரு உண்மை வெளிப்படுகிறது. அது என்னவென்றால், புல்வாமாவுக்குப் பிந்தைய வாரங்கள் மற்றும் ரம்ஜான் அல்லது பிற முஸ்லிம் பண்டிகைகள் உட்பட, சில குறிப்பிட்ட நேரங்களில்தான் தேசத்துரோக வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. 2010 முதல், கர்நாடகாவில் 62% தேசத்துரோக வழக்குகள் மாநிலத்தின் மக்கள்தொகையில் 13% இருக்கும் முஸ்லிம்களுக்கு எதிராகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு குற்றம் சாட்டப்பட்ட முஸ்லிம்களில் பெரும்பான்மையானவர்கள் அரசியல் அமைப்புகளுடன் தொடர்பு இல்லாதவர்கள் மற்றும் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்.

மத்திய கர்நாடகாவில் உள்ள ஒரு சிறிய நகரத்தில், 2015 டிசம்பரில் ஆயிரக்கணக்கான இஸ்லாமியர்கள் மிலாது நபியைக் கொண்டாட ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தபோது, உள்ளூர் இந்து சமூகத் தலைவரின் வீட்டிற்கு ஒரு துண்டுப் பிரசுரம் வந்தது. கன்னடத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ் தலைப்புடன் இருந்த அந்தத் துண்டுப் பிரசுரம், இந்துத் தலைவரின் சாதியை விவரிக்க இழிவான சொற்களைப் பயன்படுத்தியது. மேலும் முஸ்லீம்களுக்கு எதிரான அட்டூழியங்கள் தொடர்ந்தால், “அனைத்து இந்துக்களையும் வேட்டையாடி கொன்றுவிடுவோம்“ என்றும் அச்சுறுத்தியது. அந்த துண்டு பிரசுரத்தில் உள்ளூர் புகைப்பட கலைஞர் ஒருவரின் கையொப்பமும் இருந்தது. மேலும் அவரது கடையின் பெயரும், அதன் முகவரியும் அதில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருந்தது.

மேற்கண்ட சம்பவத்தின் விளைவாக துண்டுப் பிரசுரத்தின் படங்கள் பரப்பப்பட்டதால், நகரின் பெரும் பகுதிகள் மூடப்பட்டன. ஆயிரக்கணக்கான இந்து வலதுசாரி குழு உறுப்பினர்கள் முஸ்லிம்கள் ஆதிக்கம் செலுத்தும் பகுதிகள் வழியாக அணிவகுத்துச் சென்றனர். புகைப்படக் கலைஞரின் ஸ்டுடியோ டிசம்பர் 27 அன்று எரிக்கப்பட்டது.

அவர் ஆறு வருட சம்பாத்தியத்தை ஸ்டுடியோவில் முதலீடு செய்திருந்தார். அதே சமயம் அவரது குடும்பம் பூ விற்பவரான அவரது தந்தையின் வருமானத்தில் வாழ்ந்து வந்தது. 4 லட்சம் மதிப்பிலான உபகரணங்களும், வாடிக்கையாளர்கள் எதிர்பார்த்து காத்திருந்த நூற்றுக்கணக்கான புகைப்படங்களும் மாயமானது.

“எனது ஸ்டுடியோவுக்கு என்ன நடந்தது என்று கேள்விப்பட்டபோது நான் சிறையில் இருந்தேன். அப்போதுதான் நான் அழுதேன்’. இப்படி ஒரு பயங்கரமான கடிதத்தை எழுதுபவர் தனது கையொப்பத்தையும், முகவரியையும் சேர்த்தா எழுதுவார்? இதுபோன்ற பண்டிகைகளின் போது பிரச்சனையை ஏற்படுத்தும் நோக்கில் இந்த சம்பவத்தை திட்டமிட்டு நடத்தப்படிருப்பதாக” பாதிக்கப்பட்ட புகைப்பட கலைஞர் கூறுகிறார்.

இவர் மீது 2017ல் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. குழுக்களுக்கிடையில் பகைமையை ஊக்குவிப்பதற்கான குற்றச்சாட்டுகளைத் தவிர (IPC 153 A), காவல்துறை ஒரு தேசத்துரோகக் குற்றச்சாட்டைச் சேர்த்தது. அதன் விளைவு என்னவென்றால், அந்த நகரம் அவ்வப்போது வெடிக்கும் வகுப்புவாத பதட்டங்களின் டின்டர்பாக்ஸாக (Tinderbox) உருமாறியுள்ளது. ஜாமீனில் வெளியே வருவதற்கு முன்பு இவர் 62 நாட்கள் சிறையில் இருந்தார்.

2017ம் ஆண்டில், ஐசிசி சாம்பியன்ஸ் டிராபியின் இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் இந்தியாவை வீழ்த்தியது. அந்த கடைசி போட்டி ரம்ஜான் பண்டிகையுடன் ஒத்துப்போனது. கிரிக்கெட் மைதானத்தில் பாகிஸ்தானின் வெற்றியைக்

கொண்டாடியதற்காக முஸ்லிம்களுக்கு எதிராக கர்நாடகா மாநிலம் முழுவதும் குறைந்தது நான்கு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

கர்நாடகாவின் மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ள ஒரு சிறிய கிராமத்தில், பாகிஸ்தானின் வெற்றிக்குப் பிறகு, ஒரு பிரபலமான பஞ்சாயத்து உறுப்பினரின் மகன் பட்டாசு வெடித்ததாக குற்றம் சாட்டப்பட்டது.

அப்போதுதான் 22 வயதான அவர் தனது குடும்பத்துடன் ரம்ஜான் பண்டிகையை கொண் டாட சவுதி அரேபியாவில் இருந்து திரும்பி யிருந்தார். இதுகுறித்து அவர் கூறியதாவது,

“வயல்களுக்கு வரும் யானைகளை விரட்டு வதற்காக நானும் எனது நண்பர்களும் இரவு நேரங்களில் பட்டாசுகளை வெடித்துக் கொண்டி ருந்தோம். எங்களுக்கு கிரிக்கெட் பார்க்கும் பழக்கமேயில்லை. உண்மையில் எதையாவது நாங்கள் கொண்டாட நினைத்திருந்தால், அன்றைய நாளில் ஹாக்கி போட்டியில் பாகிஸ் தானை இந்தியா தோற்கடித்தை கொண்டாடி யிருப்போம்.” என்கிறார்.

அவரும், அவரது மூன்று நண்பர்களும் பட்டாசு வெடித்த பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு, உள்ளூர் பாஜக தலைவரின் புகாரின் பேரில் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நடவடிக்கை எடுக்கக்கோரி, காவல் நிலை யத்தில், பா.ஜ.க.வினர் திரண்டனர். தொலைக் காட்சி சேனல்கள் புகாரைப் படித்தன. “பாகிஸ் தான் ஜிந்தாபாத் என்று முழக்கமிட்டு, பாகிஸ் தான் கொடியை அசைத்து நாங்கள் பட்டாசு களை வெடித்தோம் என்று புகார்தாரர் கூறியதை போலீஸ் விசாரணையின்போதுதான் தெரிந்து கொண்டோம்” என்று அந்த இளைஞர் கூறினார். ஜாமீன் பெறுவதற்கு முன்பு அவர் 26 நாட்களை சிறையில் கழித்துள்ளார்.

அவரது பாஸ்போர்ட் கைப்பற்றப்பட்டது. மூன்று ஆண்டுகளாக அவர் மத்திய கிழக்கு நாடுகளுக்கு திரும்ப போகமுடியவில்லை. “எனது தந்தையும் புகார்தாரரும் அரசியல் எதிரிகள். இதனால் நாங்கள் பாதிக்கப்பட்டோம்,'' என்கிறார் அந்த இளைஞர்.

அதே நாளில், கிட்டத்தட்ட 300 கிமீ தொலை வில் உள்ள மற்றொரு நகரத்தில், பாகிஸ்தானின்




கிரிக்கெட் வெற்றியைக் கொண்டாட யாரோ பட்டாசுகளை வெடித்ததாக வதந்தி பரவியது.

இந்து வலதுசாரி குழுக்களைச் சேர்ந்த ஆண்கள், ரம்ஜான் விடுமுறைக்கான சந்தையை மூடக்கோரி முன்கூட்டியே ஊர்வலம் நடத்தினர். கடைகளை மூடுவது பிரச்சனைக்கு வழிவகுக்கும் என்று 19 வயது இளைஞர் ஒருவர் கூறியதாக கூறப்படுகிறது. பாஜகவின் யுவ மோர்ச்சா உடனடியாக புகார் அளித்தது. 19 வயதான அவர் தேசத்துரோக குற்றச்சாட்டில் 45 நாட்கள் சிறையில் இருந்தார்.

அருகில், மத்திய கர்நாடகாவில் உள்ள ஒரு நகரத்தில், பஜ்ரங் தளத்தைச் சேர்ந்த ஒருவர், பரபரப்பான பகுதியில் ரம்ஜானை முன்னிட்டு கடை விரித்திருந்த ஆயிரக்கணக்கான கடைகளுக்கு மத்தியில் நிறுத்தப்பட்டிருந்த ஒரு ஆட்டோவில் அமர்ந்திருந்த ஐந்து அல்லது ஆறு பேரிடமிருந்து ‘பாகிஸ்தான் ஜிந்தாபாத்’ கோஷங்களைக் கேட்டதாகக் காவல் துறையில் புகார் அளித்த அவர், அருகில் இருந்தவர்களிடம் விசாரித்து ஆட்டோவில் இருந்த 14 முதல் 16 வயதுக்குட்பட்ட மூன்று சிறார்கள் உட்பட ஐந்து பேரின் பட்டியலை கொடுத்தார்.

இந்த வழக்கில் முதன்மைக் குற்றம் சாட்டப் பட்டவர் அன்றைய தினம் தனது நண்பரிடம் இருந்து ஆட்டோவை கடனாக வாங்கியுள்ளார். வழக்கில் குற்றவாளியாக குற்றம் சாட்டப்பட்ட அவரது நண்பர் அப்போது சந்தையில் கூட இல்லை. “நான் அந்த மூன்று குழந்தைகளையும் சந்தைக்கு அருகில் பார்த்தேன், ஆனால் அவர்கள் நிச்சயமாக ஆட்டோவில் வரவில்லை. ரம்ஜானின் போது பதற்றத்தை உருவாக்க யாரையாவது குறிவைக்க அவர்கள் நினைத்ததாக நான் உணர் கிறேன். உள்ளூர் மஸ்ஜித் கமிட்டியுடன் பணி புரிவதால் நானும் குறிவைக்கப்பட்டிருக்கிறேன்” என்கிறார் அவர்.

- தொடர்ச்சி 27-ம் பார்க்க




# குஜராத் மோடி கேள்வி? BBC என்ற ஆவணப்படம் சாதித்தது...

### ஏன் இப்போது?

கால் நூற்றாண்டு கடந்து வெளிவந்த ஆவணப்படம், என்ன சாதித்திட இயலும். இங்கே இந்தியாவில் உள்ள முஸ்லிம்கள் அல்லாத மனித உரிமை ஆர்வலர்கள், இதுபோன்ற இனப் படுகொலைகளுக்கு முன்பும் பின்பும் ஆற்றிவரும் தொண்டுகள் எதிர்கொண்ட வழக்குகள், சித்திர வதைகளும், சிறைச்சாலைகள் இவையெல்லாம், மடிந்துவிட்டபோது, நீங்கள் வெளியிடும் ஆவணப்படம் சாதித்ததென்ன?

*எங்களுடைய பேச்சுரிமையை முடக்கும் சில அவசர சட்டங்கள் வெளியே வந்தன.*

*ஆங்கில வானொலி மற்றும் தகவல் தொடர்பு சாதனம் சொல்லும் பதில்!*

இந்த ஆவணங்கள், குஜராத் இனப்படு கொலைகள் நடந்து கொண்டிருக்கும் போதே திரட்டப்பட்டுவிட்டன. அதன்பிறகு அவை இரகசிய காப்பு சட்டங்களின் கீழ் வைக்கப்பட்டு விட்டன. Classified Documents ன் கீழ் வந்துவிட்டன. இப்போதுதான் அவை (Declassified பொது வெளிக்கு Public Domain-க்கு வந்தது. அதனால் தான் இப்போது வெளியிட்டோம்.

*ஊரறிந்த படுகொலைகள் 2002 குஜராத் படுகொலைகள். பட்டப்பகலில் நடந்தவை. அவை நடந்துகொண்டிருக்கும்போதே, எங்கள் தொலைக்காட்சிகள் நேரலையாகக் காட்டிக் கொண்டிருந்தன.*

*இப்படியொரு இனப்படுகொலைக்கு குஜராத் தயாராகிக் கொண்டிருக்கின்றது, என்ற உண்மையை கள ஆய்வுகள் வழி வெளியிட்டுக்கொண்டே இருந்தார் வீரமங்கை டீஸ்டா செட்டல்வாட்.*

*பின்னர் அதை ஆதாரங்களை (பாசிஸ்ட் டுகள்) உள்துறை அமைச்சகத்திடம் தந்தார்.*

*நான் இத்தனை ஆதாரங்களைத் தந்தபோதும், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று நொந்து நூலாகி ஒர் தலையங்கத்தை தன்னுடைய CC, என்ற Communalism Combact என்ற பத்திரிகையில் எழுதினார். அப்போதும் எதுவும் நடக்கவில்லை. இனப்படுகொலைகள் நடந்த போது களம் சென்று ஆதாரங்களைத் திரட்டினார். பலநூறு சங்கிகளை, சிறையிலடைத்தார்.*

### டீஸ்டாவின் பெரும்பணி

*இந்த இடைவெளியில் அவர் பலமுறை தாக்கப்பட்டார். எதையும் பொருட்படுத்திட வில்லை. இனப்படுகொலைகளை நடத்தியவர் களை இனங்கண்டு, அவர்களுக்கெதிராக சாட்சி யங்களையும், தடயங்களையும் திரட்டுவதையே அவர்மிகவும் குறியாக இருந்தார்கள்.*

*ஏறத்தாழ 500 சங்கிகள் தண்டனைப் பெற்றார்கள். இதில் பாரதீய ஜனதா கட்சி குஜராத்தில் மாநில அரசின், பெண்கள் மற்றும் குழந்தைகள் வளர்ச்சித் துறை அமைச்சர் மாயா கொடானி அவர்களும் உண்டு.*

*சங்கப்பரிவார தீவிரவாதிகளின் கோட்டை என அறியப்பட்ட, குஜராத் கலவரத்தின் சாட்சியங்களை அழிப்பதில், மிகவும் கவனமாக இருந்தது. மோடி தலைமையிலான மாநில அரசு. அதனுள் புகுந்து, இத்தனை ஆதாரங்களை அவர்களுக்கெதிராக திரட்டுவது, எத்துணைப் பெரிய பணி. அவர்கள், அதாவது மோடியின் தலைமையில் குஜராத் இனப்படுகொலைகளைச் செய்தவர்கள், எப்படிப்பட்டவர்கள். அவர்களின் உள்துறை அமைச்சர் கிரன்பாண்டியா அவர் களையே கொலை செய்தவர்கள் ஆவணங்களை அழிக்க.*


vaigarai velicham official

## குஜராத் நீதிமன்றங்கள்

இப்படி எத்தனையோ இடர்களைக் கடந்து நீதிமன்றங்கள் சென்றால், நீதிமன்றங்கள் குஜராத்தில் ஆளும் கட்சியின் இன்னொரு கிளையாகவே செயல்பட்டது. எந்த நிலையிலும் நீதி கிடைக்கும் என்ற நிலை இல்லை.

ஆகவே குஜராத் இனப்படுகொலை 2002 வழக்குகளை குஜராத் நீதிமன்றங்களில் நடத்திடுவதில் அர்த்தமில்லை. அங்கே கொலைகளையும் கற்பழிப்புகளையும் செய்தவர்கள் செல்லப் பிள்ளைகளாக நடத்தப்படுகிறார்கள்.

(கருவிலே இருக்கும்) குழந்தைகளை ஏன் கொலை செய்தீர்கள்? எனக் கேட்டபோது, அந்தக் குழந்தை வளர்ந்தாலும், நாங்கள்தானே கொலை செய்ய வேண்டும் எனப் பதில் சொன்னார்கள். இவர்களெல்லாம் விடுதலை செய்யப்பட்டார்கள்.

கற்பழித்தார்கள், எனச் சொன்ன பெண்களை எப்படி கற்பழித்தார்கள், என விவரிக்கச் சொல்லி வேடிக்கைப் பார்த்தார்கள்.

பின்னர் குறுக்கு விசாரணை என்ற பெயரில் மேலும் விவரிக்கச் சொல்லி, அந்தப் பெண்ணை அவமானப்படுத்தினார்கள்.

அத்தனை கொடுமைகளையும் உச்ச நீதிமன்றம் கொண்டு சேர்த்தார் டீஸ்டா செட்டல்வாட்.

குஜராத் நீதிமன்றங்களில் நீதிக்கு என் மூக்கின் அளவுகூட நீதிக்கு வாய்ப்பில்லை. அதனால் வழக்குகள், வேறு மாநிலத்திற்கு மாற்றிட வேண்டும் என வாதாடினார், போராடினார் 1800 வழக்குகளை மும்பை நீதிமன்றத்திற்கு மாற்றினார். நீதியைப் பெற்றார்.

## பெஸ்ட் பேக்கரி வழக்கு

இந்நிலையில் பெஸ்ட் பேக்கரி வழக்கு என்ற வழக்கில் 14 பேர் கொலை செய்யப்பட்டார்கள். ஜாஹிரா ஷாஹ் என்ற பெண்மணி மட்டும் உயிர் பிழைத்தார். அந்தப் பெண்மணி கோரமான வாக்குமூலங்களை வழங்கினார். அவரை வழி மறித்தார்கள். பணத்தைக் அள்ளிக் கொட்டுகின்றோம், ஆகப்பட்டதை பெற்றுக் கொண்டு அகன்றுவிடு அல்லது உயிர் பிழைத்த உன்னையும் கொன்று விடுவோம் என மிரட்டினார்கள். தடம்பிரண்டது அந்தப் பெண். இறுதியில் பிறழ்



சாட்சியம் என ஒருவருடம் சிறையிலிருந்து, கண்ணெதிரே தன் குடும்பத்தைச் சார்ந்த 14 பேரை இழந்த பெண்ணுக்கு கிடைத்த நீதி. அதில் டீஸ்டாவையும் போலி சாட்சியத்தைத் தயார் செய்தார் என வழக்குத் தொடர்ந்தார்கள்.

டீஸ்டாவுக்காகப் போராடிட ஒரு பெருங் கூட்டம் வழக்கறிஞர், மூத்த வழக்கறிஞர்கள் களமிறங்கி வாதிட்டு டீஸ்டாவை சிறை செல்லாமல் காப்பாற்றினார்கள்.

## முதல்வர் மோடிக்கு உச்சநீதிமன்றம் உதவி

அத்தனையையும் கடந்து (2002 அப்போதைய முதல்வர்) இப்போது பிரதமர் மோடியை 2002 குஜராத் இனப்படுகொலைகளைச் செய்வதற்கு அவர் கொடுத்த உத்தரவு, உதவி,அனைத்தையும், மெத்த சிரமத்தோடு தேடி எடுத்தார். ஆவணப் படுத்தினார். அத்தாட்சிகளாக, சிறந்த சாட்சியங்களாக மாற்றினார். வழக்கைத் தொடர்ந்தார். மோடியைத் தொட்டுப்பார்த்திட நீதித்துறைக்கு தெம்போ, தைரியமோ இல்லை. தனது ஆவணங்களோடு தலைசிறந்த வழக்கறிஞர்களோடு உச்சநீதிமன்றம் சென்றார். நீதி கிடைக்கவில்லை. உலக நீதிமன்றத்தை அணுகினார். வழி மறித்தது நமது நீதிமன்றம். நாங்களே நீதி செலுத்துகின்றோம் என வழக்கை கையிலெடுத்து, வழி மறித்தது.

ஒரு சிறப்புப் புலனாய்வு குழுவை ஏற்பாடு செய்தது. அதற்கு R.K. இராகவன் அவர்களைத் தலைவராக நியமித்தது.

## R.K. இராகவன் / SIT

வழக்கம்போல் உலகையே எழுதித் தருகின்றோம். விடுவித்துவிடு மோடியை, இல்லையேல் உனக்கு...? என்பன போன்ற ஆசை வார்த்தைகள் / மிரட்டல்கள்.

இதில் உலகில் முதலில் உள்ளதையே மனிதர்கள் நாடுவார்கள். நாடினார் மோடியைக் காப்பாற்றினார்.

ஆர்.கே.ராவகன், எங்கெல்லாம் தவறு செய்தார், அவர் எப்படியெல்லாம் அன்றைய குஜராத் முதல்வர், இன்றைய பிரதமர் மோடியை காப்பாற்றிடும் வகையில் சாட்சியங்களை திரட்டினார். திருத்தினார். இன்னும் என்னென்ன தகிடு தத்தங்களையெல்லாம் செய்தார் என்பதை யெல்லாம் இன்னும் தேடினார், தொடுத்தார். இதுவே இந்தப் பணிகள் எத்துணை பாராதூர மானது என்பதைச் சொல்லும். அதுவும் பாசிசம், தொடர்ந்து முப்பது ஆண்டுகள் ஆட்சி செய்யும், ஒரு மாநிலத்தை மையமாகக் கொண்டு, இந்த ஆய்வுகளை நடத்திட வேண்டும். அத்தாட்சிகளைத் திரட்டிடவேண்டும். இவ்வளவு சிரமங்களையும் சங்கப்பரிவாரக் குண்டர்களைத் தாண்டிச் செய்திட வேண்டும். எனினும் மெத்த சிரமத்தோடு அவற்றை செய்தார் வீரமங்கை டீஸ்டா செட்டல்வாட். அத்தோடு அவருக்குத் துணையாக நின்ற சமூக ஆர்வலர்களும்.

### குல்பர்க் சொசைட்டி கொலைகள்



“பின்னர் குல்பர்க் சொசைட்டி” கொலைகள் இந்த அடுக்குமாடிக் குடியிருப்பில்தான், இஃஷான் ஜாபரி என்ற முன்னாள் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் இன்னும் பலரும் கொலை செய்யப்பட்டார்கள்.

இந்த கொலை வழக்கில் மோடியும், இன்னும் 62 பேரும் எல்லாவகையிலும் சிக்கிக்கொள்ளும் வாய்ப்பிருந்தது. அதில் அவருடைய மனைவி ஷபியா ஜாபரி அவர்கள்தாம் வழக்குத் தொடர்ந் திருந்தார் டீஸ்டா உட்பட பலவழக்கறிஞர்களும், சமூக ஆர்வலர்களும் துணை நின்றார்கள்.

உச்ச நீதிமன்றத்தால் அனைத்திலும் மோடி விடுவிக்கப்பட்டார். அத்தோடு அவரோடு துணை நின்ற 62 பேரும், விடுதலை செய்யப் பட்டார்கள். அத்தோடு அதே உச்ச நீதிமன்றம் ஆதாரங்களை மூச்சுவிடாமல், முயற்சி செய்து, சேகரித்தவரை சிறையிலடைக்க ஆணை யிட்டது.

அதே உச்சநீதிமன்றம், பில்கிஸ் பானு என்றப் பெண்ணை கற்பழித்தவர்களையும், அவருடைய 3 வயதுக் குழந்தையையும் இன்னும் 14 பேரையும் கொலை செய்தவர்களை விடுதலை செய்திட வேண்டும் என குஜராத் நீதிமன்றத்திற்கு ஆணையிட்டது.

பில்கிஸ் பானு விஷயத்தல், நீதி வழங்கிய தெகல்காளி என்ற நீதிபதி நீதித்துறையை விட்டே விரட்டப்பட்டார். மத்திய புலனாய்வுத் துறையின், ரெய்டு, ஊழல் குற்றச்சாட்டு, அவர் இந்த வழக்குகளிலிருந்து அவர்தன் அறிவுத் திறனை கொண்டு வெளியே வந்துள்ளார்.

### இப்போது விடுதலை செய்யப்பட்டவர்கள்

BBC இன் முதல் காட்சி வெளியே வந்தபோது, கோத்ராவில் அப்பாவி முஸ்லிம்கள் 4 பேரைக் கொலை செய்த 17 சங்கிகள், ஆதாரமில்லை என விடுதலை செய்யப்பட்டார்கள். இரண்டாவது எப்பிசோட் வெளியே வந்தபோது, 12 அப்பாவி முஸ்லிம்களைக் கொலை செய்த 14 பேர் விடுதலை செய்யப்பட்டார்கள். அதாவது என்ன தான் சர்வதேச சக்தி சிந்தித்தாலும் நாங்கள், எங்கள் பாதையிலிருந்து.

ஆங்கிலேயர்கள் எந்த ஆவணப்படம் ஆதாரபூர்வமானது என்றால், அவற்றை நீதிமன் றத்தில் சமர்ப்பித்து, குற்றம் செய்தவர்களுக்குத் தண்டனையைப் பெற்றுத் தாருங்கள், இஸ்லா மோஃபோபியா அதிகமாக உள்ள ஐரோப்பா செய்யாது என்பதை நாமறிவோம்.

### குஜராத்தோடு முடிந்ததா?

அதன்பின்னர் ஆயிரமாயிரம் படுகொலைகள் நடந்திருக்கின்றன. பெரிய அளவில் முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

அனேக கிராமங்களிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டுள்ளார்கள். முற்றாகத் துடைத் தெறியப்பட்டுள்ளார்கள். அவற்றைப் பற்றி, ஏதாவது ஆவணப்படங்கள் இருக்கின்ற னவா? இல்லை. அவற்றை உங்களுக்குச்சவ்கரியப் படும்போது அவற்றை வெளியிடுவீர்களா?


vaigarai velicham official

**உத்திரப் பிரதேசத்தில் முஸாப்பர் நகர் படுகொலைகள்**

*2013 செப்டம்பர் திங்களில் நடந்த கலவரங் களில் நூற்றுக்கணக்கானவர்கள் கொலை செய்யப் பட்டார்கள். லட்சக்கணக்கானோர் தங்கள் வீடுகளை இழந்து அகதிகள் முகாமில் தஞ்சம் புகுந்தார்கள். அவர்களின் வீடுகளும், பூர்வீக விவசாய நிலங்களும் பிடுங்கிக் கொள்ளப் பட்டன. வன்முறையாளர்களால்.*

*அதேபோல், டெல்லி 2020 கலவரங்கள், அங்கே கொலை செய்யப்பட்டவர்கள், குற்று யிரும், குலை உயிருமாக உயர் பிழைத்தவர்கள், அவர்களுக்கு உதவி செய்த பொது அமைப்புகள், இவர்களெல்லாம் குற்றவாளிகளாக ஆக்கப் பட்டார்கள்.*

*கஷ்மீரில் நடப்பவை எழுதிமாளாது. இங்கே கொலை செய்யப்பட்ட முஸ்லிம்களுக்கு நீதி கிடைப்பதில்லை. தற்காலிக நிவாரணங்களை வழங்கிடும் நீதிபதிகளும், தண்டிக்கப்பட்டு விடுகின்றார்கள். நீதிபதி தகல்யானி, நீதிபதி முரளீதர், இவர்களெல்லாம் சில எடுத்துக் காட்டுகள். ஆக குஜராத் இனப்படு கொலைகளை நடத்தியவர்கள், தண்டிக்கப் படாதவரை வரும் ஆவணப்படங்களும், நிவாரணங்களும் வெந்தப் புண்ணிலே வேலை பாய்ச்சுவதாகும். விளையும் பயன் எதுவுமில்லை.*

*இங்கே இந்தியாவில் அவர்கள் தண்டிக்கப்பட மாட்டார்கள் என்பது மட்டுமல்ல. அவர்களுக்கு ஆட்சியே கிடைத்து விடுகின்றது. அவர்கள், பாலிசி* Riots for Votes : *வகுப்புக் கலவரங்கள் வாக்குகளுக்கு* Riots our Routes *வகுப்புக் கலவரங்களே எங்கள் பாதை.*

**இவை அல்லாமல், ஏராளமான பொன்னும், பொருளும் கொள்ளையில் கிடைத்து விடுகின்றது. இங்கே இனப்படுகொலைகள் இலாபகரமான தொழில்**

**- MGM**

23-ம் பக்கம் தொடர்ச்சி...

*நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளித்தபோது, வழக்கின் " நேரில் கண்ட சாட்சி" ஒருவர், இந்த வழக்கில் சாட்சியமளித்தவர்கள் அனைவரும் பஜ்ரங்தள் ஆட்கள் என்றும், அந்த அமைப்பு முஸ்லீம் சமூகத்தை விரோதத்துடன் பார்த்த தாகவும் ஒப்புக்கொண்டார். இந்த வழக்கு விசாரணையில் உள்ளது.*

**தேசத்துரோகத்தின் வடுக்கள்**

*பெரும்பாலும், கிரிமினல் வழக்குகளை விட தேசத்துரோகத்தின் வடுக்கள் நீண்ட காலம் நீடிக்கின்றன. குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஜாமீனுக்காக நீண்ட காலம் காத்திருத்தல் நிதி நெருக்கடிக்கு மத்தியில் வழக்கறிஞர்களை நியமிக்கும் போராட்டம் என அவர்களின் வேதனை நீளுகின்றது.*

*இந்த ஆய்வுக்கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிட்டிருந்த தேச துரோகக் குற்றம் சாட்டப் பட்ட ஆறு பேரும் மூன்று மாதங்களுக்குப் பிறகு ஜாமீனில் விடுவிக்கப்பட்டனர். அவர்கள் திரும்பியபோது அந்த கிராமம் அவர்களின் இருப்பை ஒப்புக்கொள்ளவில்லை. குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவரின் மனைவி தன்னுடைய தொழிலான சமையல் செய்யும் வேலையில் இருந்து நீக்கப்பட்டார். அவர்களின் குடும்பங்கள் துரோகிகள் என்று அழைக்கப் பட்டனர்.*

*"நாங்கள் பயப்படுகிறோம், ஆனால் எங்களுக்கு செல்ல வேறுஇடம் இல்லை. எங்கள் நிலத்தை விட்டு வெளியேற முடியாது. வயல்களுக்குஇடையில்மற்றும்எங்கள்வீடுகளில் நேரத்தை செலவிடுகிறோம். எங்களது வயல்கள் மட்டும் எங்களுக்கு போதிய வருமானத்தை வழங்குவதில்லை. விவசாயம் அல்லாத காலங் களில் நாங்கள் தினசரி கூலிகளாக வேலை செய் வதையே சார்ந்துள்ளோம். பலர் இங்குள்ள முஸ்லிம்களுக்கு வேலைகளை வழங்குவதை நிறுத்திவிட்டனர்" என்று குற்றம் சாட்டப்பட்ட வர்களில் ஒருவர் கூறுகிறார்.*

*இந்த கிராமத்தில் 2020ல், பாஜகவுடன் இணைந்த புகார்தாரர், உள்ளூர் கிராம பஞ்சா யத்து தேர்தலில் வெற்றி பெற்றார். கிராமத்தில் பிரிவினைவாதம் விரிவடைந்தது. அதே நேரத்தில் நூற்றுக்கணக்கான காவி கொடிகள் அந்த கிராமத்தில் உள்ள வீடுகளின் கூரைகளில் பறந்து கொண்டிருக்கின்றன.*

*இன்ஷா அல்லாஹ் தொடரும்.*

Source : Article 14.com

*அஷ்ரப் அலீ.,*



- அல்லாமா அபுல் ஹசன் அலி நத்வி (ரஹ்)

- தமிழில் மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி

# இந்திய மார்க்க மேதைகளின் பரிசுத்த வாழ்க்கை..!

**ஆட்சியாளர்களும், அதிகாரிகளும் மார்க்க அறிஞர்களுக்கு புரிந்த பேருபகாரங்கள்:**

இந்தியாவின் பழமையான இஸ்லாமிய பாடத்திட்டத்தின் மற்றுமொரு சிறப்பம்சம், ஆட்சியாளர்கள், அதிகாரிகள் அனைவரும் மார்க்க அறிஞர்களுக்கு, மதரஸாவின் ஆசிரியர்களுக்கு, தேவையான உதவிகள் புரிவதை, அவர்களது தேவைகளை நிவர்த்தி செய்வதை தங்களுக்கு கிடைத்த பேருபகாரமாக, பெரும் பாக்கியமாக கருதினார்கள். மறுமையில் தங்களது வெற்றிக்கான துணைசாதனமாக அவற்றை கருதினார்கள். மன்னர்கள், அரசு அதிகாரிகள் மார்க்க அறிஞர்களுக்கு புரிந்த பேருபகாரங்களை குறித்து இந்திய இஸ்லாமிய வரலாற்றில் பல்வேறு உதாரணங்களை நம்மால் பார்க்க இயலும். உலமாக்களுக்கும் ஆசிரியர்களுக்குமான சௌகரியங்களை நிறைவேற்றுவதில் பேராசை கொண்டிருந்தனர்.

முஹம்மத் காஸிம் பீஜாப்பூரி (ரஹ்) தனது நூலான "தாரிக்கே ஃபரிஷ்தா" என்ற நூலில் கூறுகிறார்:

ஒரு முறை, "மார்க்க அறிஞர்களின் மன்னர்" என்று சிறப்பு பெயரால் அழைக்கப்படும் காஜி ஷிஹாபுத்தீன் தவ்லதாபாதி (ரஹ்) கடுமையாக நோய்வாய்ப்பட்டார். அப்போது சுல்தான் இப்ராஹிம் ஷர்கி அவரை நலம் விசாரிக்க சென்றார். நலம் விசாரித்த பிறகு அவரது சிகிச்சைக்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்யுமாறு பணியாட்களுக்கு கட்டளையிட்ட பிறகு, ஒரு சிறிய குவளையில் தண்ணீர் எடுத்து வருமாறு கூறினார். பின்பு தண்ணீர் குவளையை கொண்டு ஷைகு அவர்களது தலையை சுற்றிய பிறகு அதனை பருகினார். பிறகு இவ்வாறு பிரார்த்தனை புரிந்தார் "யா அல்லாஹ் காஜி அவர்களை வாட்டி வதைக்கும் நோயை என் மீது இறக்கி விடுவாயாக ஷைகு அவர்களுக்கு பரிபூரண ஆரோக்கியத்தை வழங்குவாயாக"

அல்லாமா ஃபத்ஹுல்லாஹ் ஷீராஸி (ரஹ்) அவர்கள் இறந்தபோது அதன் ஆழமான வேதனையை வெளிப்படுத்தும் விதமாக மன்னர் அக்பர் கூறினார்:

"ஒரு வேளை பிரெஞ்சு அரசு இந்த மார்க்க மேதையை கைது செய்து. அதற்கு நஷ்ட ஈடாக

எனது ஆளுகையின் கீழ் உள்ள அனைத்து நிலப்பரப்பை கேட்டிருந்தாலும் நான் வழங்கி யிருப்பேன். அது ஒரு இலாபகரமான பேரமாக நிறைவடையும் என்றிருந்தாலும் அன்னாரது கண்ணியத்திற்கு முன்னால் அவையனைத்தும் அற்பமே".

மன்னர் ஷாஜஹான் அவர்கள் அல்லாமா முல்லா அப்துல் ஹகீம் சியால்கோட்டி (ரஹ்) அவர்களது எடைக்கு ஈடாக இரண்டு முறை வெள்ளியை வழங்கினார். அதேபோல காஜி முஹம்மது அஸ்லம் ஹரவி (அல்லாமா மீர் ஸாஹித் அவர்களது தந்தை) இவரது எடைக்கு ஈடாக தங்கம் வழங்கினார். இதுபோல மார்க்க அறிஞர்களை சங்கைப்படுத்துவது இந்திய முஸ்லிம் மன்னர்களது வழக்கமாக இருந்தது.

அஷ்ஷைகு வலியுல்லாஹ் அல்லக்னவி (ரஹ்) அவர்கள் தனது நூலான அல்அக்ஸானுல் அர்பஆ என்ற நூலில் அல்லாமா அப்துல் அலி பஹ்ருல் உலூம் (ரஹ்) மத்ராஸ் மாகாணத்திற்கு வருகை புரிந்துபோது வரவேற்கப்பட்ட ரம்மியமான காட்சியை பதிவு செய்கிறார்.

அவரது பல்லக்கு வாலாஜா நவாப் அவர்களின் அரண்மனைக்கு வந்ததும் ஷேக் அவர்கள் இறங்க தயாரானார்கள். வாலாஜா நவாப் இறங்க வேண்டாம் அமருங்கள் என்று செய்கை செய்தார். பின்பு வாலாஜா நவாப் அவர்களே பல்லக்கை தனது தோளில் அரசவை யின் சிம்மாசனம் வரை சுமந்து சென்று, அன்னாரை தனது சிம்மாசனத்தில் அமர வைத்து, அவரது காலை முத்தமிட்டு பிறகு கூறினார்,: "எனக்கு கிடைத்த பெரும் பாக்கியம்! தாங்கள் அமர்ந்து எமது சிம்மாசனத்தை பேரொளி வீசச் செய்து விட்டீர்கள்."

ஆட்சியாளர்கள் அரசு அதிகாரிகளை விட செல்வந்தர்கள், முஸ்லிம் ஜமீன்தார்கள் மதர ஸாவை மதரஸாவின் ஆசிரியர்களை தத்தெடுப் பதில் தங்களுக்கிடையே போட்டி போட்டு கொண்டார்கள். இவ்வாறு இஸ்லாமிய கல்வி நிறுவனங்களுக்கு உதவிகள் புரிவதை பெரும் பாக்கியமாக கருதினார்கள். இவர்கள் மதரஸா வின் மீத காட்டிய அதீத ஆர்வம், ஆழ்ந்த கவனம் ஆகியவைகளே இன்று நம் வாழும் காலம் வரை அந்த மதரஸாக்கள் வேரூன்றி நிலைபெற்று பல்கி பெருகியதற்கான முக்கிய காரணம்.

மௌலானா குலாம் அலி ஆஸாத் அல்பில் கிராமி (ரஹ்) தனது மாகாணமான ஔத்தின் (லக்னோவை சுற்றியுள்ள பகுதிகள்)நிலையை குறித்து கூறுகிறார். இதனை வைத்து மற்ற மாகாணங்களிலும் மதரஸாக்களின் நிலை எப்படி இருந்தது என்பதை நாம் ஒப்பீடு செய்ய இயலும்.

ஔத் மற்றும் அலஹாபாத் மாகாணம் முழுக்க ஒவ்வொரு ஐந்து மைல்களுக்கு செல்வத்திலும் செல்வாக்கிலும் உயர்ந்த முஸ்லிம்களது இல்லங்கள் இருக்கும்.

அரசாங்கத்தினால் இவர்களுக்கு வழங்கப் பட்ட நிலங்கள், செல்வங்களை பராமரிப்ப தற்கான ஊதியத்தை மன்னர்களும் ஆட்சி அதிகாரிகளும் வழங்குவார்கள். எந்தெந்த இடங்களில் ஆசிரியர்கள் முழு அர்ப்பணிப்போடு சன்மார்க்க கல்வியை கற்றுகொடுக்கிறார்களோ அந்த அந்த இடங்களில் அவர்களுக்கு தேவையான மஸ்ஜிதுகள், மதரஸாக்கள், ஹான்காக்களை கட்டி கொடுக்கப்பதில் இந்த முஸ்லிம் செல்வந்தர்கள் தங்களது செல்வத்தை வாரி இறைத்தார்கள்.

இதன்மூலம் மக்களுக்கு மத்தியில் கல்வியை தேடுவதின் மீது மிகப்பெரிய வேட்கையை ஏற்படுத்தினார்கள். ஒரு நகரத்திலிருந்து மற்றொரு நகரத்திற்கு சென்று எங்கே அறிவின் மதுரமான ஊற்று பொங்கி எழுந்ததோ அங்கே மாணவர்கள் கூட்டம் கூட்டமாக தங்களது தாகத்தை தீர்த்து கொண்டார்கள். அவர்களுக்கு தேவையான சகல வசதிகள், தங்குவதற்கான விடுதிகள் என அனைத்தையும் இந்த செல்வந் தர்கள் இறைவன் அவர்களுக்கு வழங்கிய செல்வங் களின் மூலம் ஏற்பாடு செய்து கொடுத்தார்கள். இப்படி மாணவர்களுக்கு தேவையான உதவி களை புரிவது தங்களுக்கு கிடைத்த பெரும் பாக்கியமாக கருதினார்கள்.

இதனாலேயே மன்னர் ஷாஜஹான் கூறுவார்:

நிச்சயமாக எனது பேரரசின் கீழ் உள்ள நகரங்கள் அனைத்தும் இந்தியாவின் ஷீராஸ் (ஷீராஸ், பக்தாதை போன்று ஈராக்கில் உள்ள மிகப்பெரிய இஸ்லாமிய கல்வி கேந்திரமாக விளங்கியது)

**உள சீர்திருத்தம் மற்றும் ஆன்மீகவாதிகளோடு கொண்டிருந்த தொடர்பு:**

இந்தியாவின் தொன்மையான இஸ்லாமிய பாடத்திட்டத்தில் குறிப்பிட்டே ஆக வேண்டிய மிக முக்கியமான அம்சம் ஒன்று, இந்தப் பாடத்திட்டத்தின் ஆசிரியர்கள், மார்க்க அறிஞர்கள் அறிவில் ஆழம் கண்டவர்களாக, இஸ்லாமிய கலைகளில் நன்கு தேர்ச்சி பெற்றவர்களாக இருந்தும், அவர்களது திறமை மற்றும் ஆளுமை திறன் அனைத்து தரப்பினராலும் ஒத்துக்கொள்ளப்பட்டிருந்தும் கூட இவை அனைத்தும் தங்களது அகத்தை தூய்மை படுத்துவதை விட்டும் இறைவனோடு தாங்கள் கொண்டிருக்க வேண்டிய ஆழமான தொடர்பை விட்டும் தடுக்கவில்லை.

அறிவை ஆழமாக,முழுமையாக கற்றுக் கொள்வதற்கு தங்களது முழு முயற்சியை செலுத்திய அதே நேரத்தில் தங்களது அகத்தை, உள்ளத்தை பரிசுத்தபடுத்துவதற்கான

ஷைகுமார்களை தேடி கொண்டிருந்தார்கள். அந்த மகான்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு பணிவிடை செய்தார்கள். அவர்களது தோழமையின் நிழலில் இளைப்பாறினார்கள். அவர்களது நேசத்தை பொருத்தத்தை பெற்றாலே தங்களது முயற்சிகள் அனைத்தும் முழுமை பெற்றதாக கருதினார்கள். தாங்கள் கற்ற கல்வியின் மூலம் பெற்ற கண்ணியமோ இஸ்லாமிய கலைகளில் அவர்கள் பெற்றிருந்த பாண்டித்தியமோ சமூகத்தில் பெற்ற அங்கீகாரமோ இவர்களது ஆன்மீக பயணத்தை மேற்கொள்ள தடையாக இருக்கவில்லை.

நாட்டை ஆளும் சுல்தான்கள் இந்த ஏழை மஷாயிகுமார்களுக்கு முன்னால் மிகவும் பணிவோடு நடந்து கொள்வார்கள். அவர்களுக்கு முன்னால் தன்னிலையை மறந்தார்கள். இப்படியான பணிவும் பேரார்வமும் அவர்களது இயல்பிலேயே கலந்து, அவர்களது வாழ்க்கை வரலாற்றின் அச்சாணியாக இவையே விளங்கின.

இந்திய இஸ்லாமிய கல்வி வரலாற்றில் வினோதமான விஷயத்தை பதிவு செய்யாமல் கடந்து செல்ல இயலாது. அல்லாஹ்வின் அருளால் ஆழமான மார்க்க அறிவை பெற்று இந்திய இஸ்லாமிய அறிவுலகில் நிரந்திரமான இடத்தை பிடித்து பல நூற்றாண்டுகளாக கோலோச்சி கொண்டிருந்த மார்க்க மேதைகள் நிச்சயமாக தங்களது அகத்தை பரிசுத்தபடுத்த அவரவர் காலத்தில் வாழ்ந்த இறையச்சமுள்ள பேணுதலோடு வாழும் ஏதேனும் ஆன்மீக மகான்களோடு தொடர்பு வைத்திருந்தார்கள். இந்திய இஸ்லாமிய அறிவுலகில் முதலில் அறிவு ஜோதியை ஏற்றி வைத்த மூன்று ஆளுமைகள் இவர்களும் இவர்களது மாணவர்களும் இவர்களது மாணவர்களின் மாணவர்களுமே பல நூற்றாண்டுகளாக இந்தியா எங்கும் அறிவு ஜோதியை பரப்பினார்கள்.அல்லாமா அப்துல் முக்ததிர் அல்கிந்தி (ரஹ்) (ஹி 791) இவரது மாணவர் மௌலானா கவாஜி தெஹ்லவி (ரஹ்) (ஹி809) மற்றும் அஷ்ஷைகு அஹ்மத் தானேஸ்ரி (ரஹ்) (ஹி801). இந்த மூன்று ஜாம்பவான்களுமே அஷ்ஷைகு நஸீருத்தீன் ஜிராகி தெஹ்லவி (ரஹ்) அவர்களின் முரீதுகள்.

இஸ்லாமிய கல்வி பாரம்பரியத்தின் மற்ற ஆளுமைகளில் அல்லாமா வஜீஹுத் தீன் நஸ்ருல்லாஹ் அல்குஜராத்தி (ரஹ்) (ஹி998). அஹ்மதாபாத்தில் சுமார் 60 வருடங்கள் இஸ்லாமிய கலைகளை பாடம் நடத்துவதில் தனது வாழ்க்கையை கழித்த மார்க்க மேதை. இவரது மாணவர்கள் அஹமதாபாத்திலிருந்து லாஹூர் வரை உள்ள அனைத்து இடங்களிலும்

இஸ்லாமிய அறிவை பரப்பினார்கள். இஸ்லாமிய சன்மார்க்க கல்வியை கற்பதிலும் கற்பித்தலிலுமே வாழ்க்கையை கழித்தார்கள்.

கோராஜஹான்பாத், அமீத்தி, ஜோன்பூர், லக்னோ ஆகிய நகரங்களில் இருந்த எல்லா கல்வி நிறுவனங்களிலும் இந்த மார்க்க அறிஞர்களின் அறிவின் பேரொளியே படர்ந்திருந்தது. இத்தகைய மாணவர்களை செதுக்கிய அல்லாமா வஜீஹுத் தீன் நஸ்ருல்லாஹ் அல்குஜராத்தி (ரஹ்) அவர்கள் அஷ்ஷைகு முஹம்மத் கவ்ஸ் அல் குவாலியர் (ரஹ்) அவர்களுடைய கலீஃபாவும் முரீதுமாவார்.ஷைகு நாயகத்தின் துஆவையும் ஆசியையும் பெற்றவர். இதே காலத்தில் வாழ்ந்த இருபெரும் மார்க்க அறிஞர்கள் அஷ்ஷைகு பீர் முஹம்மது அல்லக்னவி (ரஹ்) மற்றும் அஷ்ஷைகு குலாம் நக்ஷபந்தி (ரஹ்) இவர்களும் சிஷ்தியா தரீக்காவின் முரீதுகளாக விளங்கினார்கள்.

இந்திய இஸ்லாமிய அறிவுத்தொடரில் கடைசியாக மிகப்பெரிய பேரும் புகழையும்

பெற்று அறிவுலகில் மிகப்பெரிய அங்கீகாரத்தையும் நீங்கா இடத்தையும் பிடித்து இந்தியா, ஆப்கானிஸ்தான், ஈரான் ஆகிய நாடுகளை தனது அறிவால் ஆண்டு தனது அளப்பரிய திறமையால் அனைத்து பாடத்திட்டங்களையும் மிகைக்கும் ஒரு பாடத்திட்டத்தையும் நிறுவிய அஷ்ஷைகு நிஜாமுதீன் அஸ்ஸஹாலவி (ரஹ்) (ஹி1161). இவர் காதிரிய்யா தரீகத்தின் ஷைகு அப்துர் ரஸ்ஸாக் அல்பான்ஸவி (ரஹ்) அவர்களது முரீதாக மட்டும் இல்லாமல் தனது ஷைகின் நேசத்தின்மூலம் கவரப்பட்டவராகவும் இருந்தார். "மனாகிபு ரஸ்ஸாகிய்யா" என்ற தனது நூலில் பக்கத்திற்கு பக்கம் தனது ஷைகு அவர்களுக்கும் தனக்கும் மத்தியில் நிலவிய மானசீகமாக பிரியத்தை உறவை மிக அற்புதமாக வர்ணிக்கிறார்.

மக்களிடம் மாபெரும் சீர்திருத்த பணியை மேற்கொண்ட கல்வி நிறுவனமான தியோபந்த் கல்வி நிறுவனத்தை நிறுவிய அஷ்ஷைகு முஹம்மத் காஸிம் நானூதவி (ரஹ்) (ஹி1298) மற்றும் இந்த மகத்தான நிறுவனத்தை உருவாக்கியதில் பெரும் பங்களிப்பை ஆற்றிய அல்லாமா ரஷீத் அஹ்மத் கங்கோஹி (ரஹ்) இவர்களிருவருமே அல்ஹாஜ் இம்தாதுல்லாஹ் அல்முஹாஜிர் (ரஹ்) அவர்களது முர்ஷிதுகளும் கலீஃபாக்களும் ஆவர். பிறருக்கு பைஅத் வழங்குவதற்கான அனுமதியையும் இவர்கள் தங்களது ஷைகிடமிருந்து பெற்றிருந்தார்கள்.

அதேபோல இந்தியாவின் மற்றொரு புகழ்மிக்க கல்வி கேந்திரமான நத்வதுல் உலமாவின் நிறுவனர் அஷ்ஷைகு முஹம்மத் அலீ மோன்கிரீ (ரஹ்) அவர்கள் அஷ்ஷைகு ஃபஜ்லுர் ரஹ்மான்அல்கஞ்ச்முராதாபாதி (ரஹ்) அவர்களது ஆத்மார்த்த முரீத் ஆவார். இந்தியாவின் எல்லா காலக்கட்டங்களிலும் வாழ்ந்த இஸ்லாமிய கல்வி பாரம்பரியத்தில் வந்த எல்லா மார்க்க மேதைகளும் தங்களை பரிசுத்தபடுத்தும் ஆன்மீக மகான்களோடு தொடர்பில் இருந்தனர். அவர்களது கண்காணிப்பிலும் மேற்பார்வையிலுமே தங்களது அனைத்து காரியங்களையும் அமைத்துக் கொண்டனர். இப்படி தங்களது ஆன்மீக வழிகாட்டியோடு கொண்டிருந்த உறவே இஃக்லாஸ், இறைவனின் பக்கமே முழுமையாக மீளுதல், மக்களின் அங்கீகாரம் ஆகிய அனைத்தையும் இவர்கள் பெறுவதற்கு காரணமாக அமைந்தது.

இந்திய இஸ்லாமிய கல்வி வரலாற்றை வாசிக்க கூடியவர்களது புருவங்களை உயர்த்தவைக்கும் படிப்பினையை தரக் கூடிய மற்றுமொரு செய்தி. இவையனைத்தும் சாதாரணமாக நிகழ்ந்துவிடும் என்று கூற இயலாது. பெரும்பாலான மார்க்க அறிஞர்கள், ஆசிரியர்கள் தங்களது அகத்தை பரிசுத்தபடுத்துவதற்காக சார்ந்திருந்த ஆன்மீக ஷைகுகள் பிரபல்யமடையாதவர்களாக, சரியாக கல்வி நிறுவனத்தில் இணைந்து கல்வி கற்காதவர்களாக, மக்களினால் ஆலிம் என்று அங்கீகரிக்கப்படாத, ஸனதை பெறாதவர்களாக இருந்தார்கள். மக்கள் அவர்களை மார்க்க அறிஞர்களாக கருதமாட்டார்கள்.

இந்தியாவின் மூத்த மார்க்க மேதைகள் இப்படிப்பட்ட சாதாரணமான நபர்களை தங்களது ஆன்மீக வழிகாட்டியாக கொண்டிருந்தார்கள்.இப்படியான விசித்திரமான உறவுக்கு உதாரணம்,

அஷ்ஷைகு முஹம்மத் இஸ்மாயில் ஷஹீத் (ரஹ்) மற்றும் அஷ்ஷைகு அப்துல் ஹை அல்புர்ஹானவி (ரஹ்) இவர்களது காலத்தில் இவர்களே மிக மூத்த மார்க்க மேதைகள்.தங்களது அறிவால் அறிவுலகத்தையே கட்டி ஆண்டவர்கள்.ஆனால் இவர்களிருவரது ஆன்மீக குரு இந்தியாவில் ஹிஜ்ரி பதிமூன்றாம் நூற்றாண்டின் மிகப்பெரிய அறப்போராட்டம் மற்றும் சீர்திருத்தத்தை மேற்கொண்ட மாபெரும் இஸ்லாமிய இயக்கத்தின் தலைவரான அஸ்ஸய்யித் அஹ்மத் இப்னு இர்ஃபான் அஷ்ஷஹீத் (ரஹ்).

அதேபோல அஷ்ஷைகு நிஜாமுதீன் (ரஹ்) அவர்களது ஆன்மீக குரு ஸய்யித் அப்துர் ரஸ்ஸாக் அல்பான்ஸவி (ரஹ்)

அதேபோல அஷ்ஷைகு முஹம்மத் காஸிம் நானூதவி (ரஹ்) அவர்களது ஆன்மீக குரு அல்ஹாஜ் இம்தாதுல்லாஹ் அல்முஹாஜிர் (ரஹ்). இவ்வாறு இந்தியாவின் மிகப்பெரிய மார்க்க மேதைகள் தங்களது அகத்தை பரிசுத்தப்படுத்துவதற்காக இப்படியான சாதாரண மனிதர்களையே சார்ந்திருந்தார்கள். இதுவே இப்படியான மகான்களை தேடியதன் உண்மை நிலையை அவர்களது பணிவை எடுத்துகாட்டுகிறது. இத்தகைய இவர்களது களப்பற்ற எண்ணமும், இறையச்சம் மிகுந்த வாழ்வுமே இந்தியாவின்

தொன்மையான இஸ்லாமிய பாடத்திட்டத்தின் வர்ணமாக திகழ்ந்தது.

இந்தியாவின் தொன்மையான பாடத்திட்டத்தின் தனித்துவம் வாய்ந்த அடையாளங்களாக நம்மால் கூற முடிபவை: ஆழமான அறிவு, பரந்த வாசிப்பு, ஆழ்ந்த ஆய்வு, அகத்தை பரிசுத்தபடுத்துவது, ஆன்மாவை தூய்மைப் படுத்துவது, இறைவனோடு கொண்டிருந்த வலுவான தொடர்பு, உளத்தூய்மையோடு அமல்கள் புரிவது, படைப்புகளுக்கு உபகாரம் புரிவது. இத்தகைய அனைத்து பண்புகளையும் கொண்டிருந்தமையால் மார்க்க அறிஞர்களும் ஆசிரியர்களும் மக்களோடு பலமான தொடர்பில் இருந்தனர். இதனால் இந்த மார்க்க அறிஞர்களினால் மக்களின் சிந்தனையில், கலாச்சாரத்தில், சமூக வாழ்க்கையில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்த முடிந்தது.

இரண்டாவதாக உலக அலங்காரத்தின் மோகத்திலிருந்து அதன்மூலம் ஏமாறுவதிலிருந்து மன்னர்களுக்கு ஆட்சி அதிகாரிகளுக்கு அடிபணிவதிலிருந்து ஒழுக்க வீழ்ச்சியிலிருந்து அரசு ஒடுக்குமுறையிலிருந்து தங்களை தற்காத்துக் கொள்ள முடிந்தது. களப்பற்ற எண்ணம், அதீத ஆர்வம், தன்னடக்கம் ஆகியவை இந்தியாவின் பழமையான இஸ்லாமிய கல்வி நிறுவனங்களில் உள்ள ஆசிரியர்களது பிரதான குணங்களாக விளங்கியது.

அறிவின் நெற்றி முடியை பிடித்தவர்களாக இந்த சமூகத்தில் மகத்தான சீர்திருத்த பணியை மேற்கொண்டார்கள். திசையெங்கும் தங்களது அறிவொளியால் வெளிச்சத்தை பரப்பினார்கள். இவையனைத்திலும் பெரியளவில் அவர்கள் பெற்ற ஆன்மீக பயிற்சியே பிரதிபலித்தது.

இந்த சிறப்பியல்பு கடைசி காலகட்டம் வரை தொடர்ந்தது. சாதாரணமாக ஒரு மதரஸாவில் ஒரு மாணவன் தனது படிப்பை நிறைவு செய்தவுடன் அவனது அடுத்த பணி தனது உள்ளத்தை பரிசுத்தபடுத்த, ஒளிமயமாக்க, பண்படுத்த, சரியான ஷைகை கண்டறிவதே. எனவே அவனது இயல்புக்கு ஏற்ப அல்லது அவனது ஆசிரியரது இயல்புக்கு ஏற்ப ஆன்மீக மையங்களை எதிர்நோக்குவான். அங்கே சென்று தனது வாழ்க்கையின் சில காலங்களை அங்கேயே கழிப்பான். கல்வியை மட்டுமே கற்றுக்கொள்ளும் இடத்தில் இதயத்தை பரிசுத்தபடுவது எளிமையான காரியம் இல்லை என்பதால் இங்கே அதன்மீது மட்டுமே கவனம் செலுத்தி அதனையும் முழுமைபடுத்துவர். மதரஸதுல் அஷ்ஷைகு லுத்ஃபுல்லாஹ் (கடைசி காலகட்டத்தில் இருந்த மதரஸா) என்ற கல்வி நிறுவனத்திலிருந்து வெளியேறும் மாணவர்கள் அனைவரும் இந்தியாவின் கிழக்கு பகுதியில் இருக்கும் அஷ்ஷைகு ஃபஜ்லுர் ரஹ்மான் அல்கஞ்ச் முராதாபாதி (ரஹ்) அவர்களது ஹான்காவுக்கு செல்வார்கள்.

இந்தியாவின் வடமேற்கு பகுதியில் இருக்கும் தியோபந்த் மற்றும் சாஹரான்பூர் ஆகிய கல்வி நிறுவனங்களில் தங்களது படிப்பை நிறைவு செய்யும் மாணவர்கள் தானாபவன், கங்கோ, ராய்பூர் ஆகிய ஆன்மீக நகரங்களுக்கு படையெடுப்பார்கள் ஏனென்றால் அங்கே தான் அல்ஹாஜ் இம்தாதுல்லாஹ் அல்முஹாஜிர் மக்கி (ரஹ்) அவர்களது கலீஃபாக்களும் அஷ்ஷைகு ரஷீத் அஹ்மத் கங்கோஹி (ரஹ்) அவர்களது கலீஃபாக்களும் அங்கே பண்படுத்தி கொண்டும் மனித உள்ளங்களை பரிசுத்தபடுத்தி கொண்டும் இருந்தார்கள்.

தொடரும்.......



# வரலாற்றில் இந்த நாள் 21-02-1965

# மால்கம்-X (எ) மாலிக் அல் ஷாபாஸ் ஷஹீத் நாள்



ஆப்ரிக்காவின் காடுகளிலிருந்து கடத்தி வரப்பட்டு, அமெரிக்காவின் "அடிமைச் சந்தைகளில்" விற்பனை செய்யப்பட்டவர்களே அமெரிக்காவில் வாழும் கறுப்பர்கள். இவர்களை ஆப்பிரிக்கன் - அமெரிக்கன் - என்றும் அழைப்பார்கள். இந்தக் கறுப்பு நிறத்தைக் கொண்டவர்களை அமெரிக்காவின் வெள்ளை நிறத்தவர்கள் தீண்டத்தகாதவர்களாக அநீதிகளுக்கும் கொடுமைகளுக்கும் ஆட்படுத்தி வருகின்றார்கள். அமெரிக்காவின் சேரிகள்தாம் இவர்கள் வாழ்ந்திட ஒதுக்கப்பட்ட இடம். இந்த சேரி வாழ்க்கையில் பிறந்தவர்தான் மால்கம்-X

வெள்ளை நிறத்தவர்கள் தினம், தினம் கட்டவிழ்த்துவிடும் கொடுமைகள், அநீதிகள் இவற்றிலிருந்து விடுபட்டிட கிருஸ்தவத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, அல்லும் பகலும் அயராது உழைத்தார் மால்கம்-X-ன் தந்தை ஏர்ள்லிட்டில். பின்னர் வெள்ளைக் கிறிஸ்தவர்களின் நிறவெறிக் கொலை அமைப்பாகிய Klu Klak Klan-ஆல் கொலை செய்யப்பட்டார்.

தந்தையை இழந்து இளம் வயதிலேயே அநாதையானார் மால்கம்-X. தந்தையின் மரணத்திற்குப் பின் வறுமையின் கோரப்பிடியில் சிக்கியது அந்தக் குடும்பம்.

உழைத்தாள் தாயார் லைவ்சிலிட்டில் வீட்டு வேலைக்காரியாய்! வறுமையிலிருந்து தப்பித்திட வேலைக்குச் சென்றால் தாங்கொண்ணா அவமானங்கள். அதனால் எந்த வேலையிலும் நிலைத்திட இயலவில்லை. கறுப்பு நிறத்தவர் என்பதால் அவமானப்படுத்தப்பட்டார். மனநிலை பாதிக்கப்பட்டாள். மனநல நோயாளியாக மனநலக் காப்பகத்தில் நிரந்தரமாக ஒப்படைக்கப்பட்டார். அங்கேதான் மரணம்.

முழு அநாதையானார்கள் மால்கம்-X-சும் உடன் பிறந்தவர்களும். அனைவருக்கும் அநாதைகள் இல்லம், வசிப்பிடமானது. அதன் வழியே கல்வியையும் கற்றார் மால்கம்-X பள்ளியில் முதல் மாணவராகத் தேறினார்.

"நீ படித்து என்னவாகப் போகின்றாய்?" எனக் கேட்டார் ஆல்ட்ரோ என்ற வெள்ளைநிற ஆசிரியர் "வழக்கறிஞராக ஆகப்போகின்றேன்" என்றார் மால்கம்-X அதிர்ந்துபோனார் ஆசிரியர் "அடாத செயல்" கறுப்பர்களுக்கு அது! ஒரு கொத்தனாகவோ, தச்சனாகவோ ஆகிக்கொள் என்றார்.

நல்ல இலட்சியங்களும், நல்ல வாழ்க்கையும் நிறத்தால் கறுப்பானவர்களுக்குக் கூடாது என்றால், படிப்பு எதற்கு? என படிப்பிலும் விரக்தி ! விட்டொழிந்தார் படிப்பை.

சாதாரணமாக ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஓர் அடிமை வாழ்க்கைதான். அதற்கென சிலவகை தொழில்களை திறந்தே வைத்திருப்பார்கள். அவற்றில்தான் மால்கம்-Xசும் பிடித்துத் தள்ளப்பட்டார்.

திருட்டு, போதைப் பொருள் கடத்தல், போன்ற தொழிலுக்கு வந்தார். இந்தத் திருட்டுத் தொழிலில் வெள்ளைநிறப் பெண்களையும் கூட்டுச் சேர்த்துக்கொண்டு கொள்ளையை பெரிய அளவில் வளர்த்தார், சிக்கிக்கொண்டார். வெள்ளை நிறப் பெண்களோடு கூட்டுச் சேர்ந்ததற்கு 8 ஆண்டுகளும், திருட்டுக்கு 2 ஆண்டுகளும் எனப் பத்தாண்டுகள் சிறை. நீதிமன்றத் தீர்ப்பிலும் நிறவெறி நிறைந்து நின்றது. அமெரிக்காவின் சிறைச்சாலைகள்தாம் கறுப்பர்கள் அடிக்கடி தரிசிக்கும் புண்ணியஸ்தலம். அங்கே 1952ஆம் ஆண்டு வரை வாழ்ந்தார்.

சிறையிலிருந்த நூல்களைக் கற்றார். அத்தோடு இஸ்லாத்தோடு தொடர்புகொண்டார். இஸ்லாத்தை ஏற்றார். நிறவெறிக் கொடுமைகளிலிருந்து விடுதலை அடைந்தார். இனி அவருக்கு நிறத்தின் பெயரால் இழிவு இல்லை. இஸ்லாமே தீர்வு என சூறாவளியாய் சுழன்று சுழன்று பிரச்சாரம் செய்தார். தனது வேகமான இஸ்லாமியப் பிரச்சாரத்தின் ஒரு கட்டத்தில் கேசியஸ்கிளே என்ற குத்துச் சண்டை வீரரை

## ஒடுக்க மக்களின் விடுதலை நாள் 21-02-1965

> மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள், அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான்; பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான்; ஆகவே, அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள்; அவனைக்கொண்டே நீங்கள் ஒருவருக்கொருவர் (தமக்குரிய உரிமைகளைக்) கேட்டுக் கொள்கிறீர்கள்; மேலும் (உங்கள்) இரத்தக் கலப்புடைய உறவினர்களையும் (ஆதரியுங்கள்) - நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது கண்காணிப்பவனாகவே இருக்கின்றான். (4:1)

முஹம்மது அலீ என்ற பெயரோடு இஸ்லாத்தில் இறுகப் பிணைந்தார். ஆற்றொழுக்காய் பிரவாக மெடுத்து ஓடிய ஆயிரமாயிரம் அறிவார்ந்த உரைகள் வழி ஆயிரமாயிரம் கறுப்பர்களை இஸ்லாத்தில் இணைத்தார், பிணைத்தார்.

அமெரிக்க அரசும், வெள்ளை நிற வெறி பிடித்தவர்களும் "அந்த முஸ்லிம்கள்" களைக் கண்டால் அலறும் அளவிற்கு முஸ்லிம்களை ஒன்றிணைத்தார்.

இஸ்லாமிய அறிஞர்களின் அறிவுரையின் கீழ் தன் பெயரைமாலிக் அல்ஷாபாஸ் என மாற்றிக் கொண்டார். இறைவனின் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் வாழ்ந்த மண்ணில் "ஹஜ்" இன் போது என்னதான் நடக்கின்றது? என்பதைக் கண்டிடவும், ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றிடவும், அரேபியா சென்றார். சாதாரண ஹஜ் பயணியாக சென்ற அவர், சவூதி ஆட்சியாளர் மன்னர் ஃபசல் அவர்களின் விருந்தினராக ஹஜ் கடமையை நிறைவேற்றினார்.


ஹஜ்ஜின் போது மக்காவில் கூடிய மக்கள் கொட்டிய சகோதரத்துவம் அமைதியாக ஆரவாரமில்லாமல் ஒவ்வொரு அசைவிலும் வெளிப்பட்ட இவற்றால் நெஞ்சம் நிறைந்தார். எல்லா நிறத்தவர்களும், ஒரு தாய் தந்தையரின் பிள்ளைகளாய் ஒட்டி வாழ்வதைக் கண்டார், கழிப்புற்றார். வெள்ளையர்களை வெறுக்க வேண்டும், எதிர்க்க வேண்டும் என்பதும் தவறு என உணர்ந்தார். வெறுப்புகளிலிருந்து வெளிப் போந்து முழு இஸ்லாமிய பிரச்சாரகர்ஆனார். தொடர்ந்து 16 நாடுகளுக்குச் சென்று இஸ்லாத் தைப் பரப்பினார். அவர் ஆற்றிய உரைகளில் அள்ளிச் சொரிந்த கருத்துகளால் அமெரிக்காவின் புகழ்பெற்ற ஹாவார்டு பல்கலைக் கழகம், ஆங்கில நாட்டின், ஆக்ஸ்போர்டுபல்கலைக் கழகம் இவையெல்லாம் அவரை அழைத்து உரையாற்ற வைத்தன.

பொறுக்க முடியவில்லை அவருடைய பிரச் சாரத்தின் வேகத்தை வெள்ளைநிற வெறியர் களாலும், அவர்களால் இயக்கப்பட்ட அமெரிக்க அரசாலும், அவரைபூமியிலிருந்து அகற்றிட திட்டம் போட்டார்கள். 1965-ஆம் ஆண்டு பிப்ரவரி 21-ஆம் நாள் சில கறுப்பர்களை ஏவி விட்டே அவரைக் கொலை செய்தார்கள். மாலிக் அல்ஷாபாஸ் ஷஹீதானார். அப்போது அவருக்கு அகவை 39. இவரைப் போன்றோரைப் பற்றித் தான் இறைவன் இப்படிக் கூறுகின்றான்.

"இன்னும், அல்லாஹ்வின் பாதையில் கொல்லப் பட்டோரை இறந்துவிட்டவர்கள் என்று கூறாதீர்கள். அப்படியல்ல! அவர்கள் உயிருள்ளவர்கள் ;எனினும் நீங்கள் உணர்ந்து கொள்ள மாட்டீர்கள்" (அல்குர்ஆன் 2:154)

ஆமாம்! இன்று ஆயிரமாயிரம் ஆவணப் படைப்புகளிலும் ஆவணங்களிலும் ஆராய்ச்சி களிலும் நூல்களிலும் மால்கம்-X என்ற மாலிக் அல்ஷாபாஸ் நின்று வீழ்ந்து வாழ்ந்துக் கொண்டி ருக்கின்றார். இன்றைக்கும் 2023களிலும் அமெரிக்காவில் கறுப்பு நிறத்தவர்கள் தினம் தினம் அமெரிக்காவின் வீதிகளில் கொலை செய்யப்படுகின்றார்கள். வெள்ளை நிற வெறியர் களால். அவர்களுக்கும் இஸ்லாம் ஒன்றேதான் வழி! என்று அன்றே பிரகடனப்படுத்தினார் மாலிக் அல் ஷபாஸ். அமெரிக்காவின் மிகப் பெரிய ஆபத்து நிறவெறி. அதனை ஒழிக்காத வரை அமெரிக்கா வெல்ல முடியாது என அறிவுரை சொன்னார். இவற்றிற்கெல்லாம் முத்தாய்ப்பாக 1992-ல் ஸ்பைக்லீ என்ற அமெரிக்க பட தயாரிப் பாளர் எடுத்த திரைப்படத்தின் வழி இன்னும் அதிகமாக உலக மக்கள் மனதில் இடம் பிடித்தார். இந்த படம் ஆஸ்கார் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டது.

இந்த படம் ஆங்கில உலகிலும், ஐரோப்பா விலும் அறிந்த அளவுக்கும், ஏற்படுத்திய தாக்கத் தின் அளவுக்கும், மால்கம்-X-ன் வாழ்வும், வழியும் இந்தியாவுக்குள் தாக்கங்களை ஏற்படுத் திடவில்லை. இங்கேதான் அது அதிகமாக தேவைப்படுகிறது. இதற்கு ஒப்பற்ற சாட்சியம் தந்தை பெரியார் அவர்களின் வாழ்நாள் பிரச் சாரம். இந்தப் பிரச்சாரங்களின் வழி அவர் ஆயிரமாயிரம் அமுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களை இன இழிவிலிருந்து விடுதலையடைந் திட செய்தார். இஸ்லாத்தில் இணைத்தது.




ரூபாய் 120 விலையுள்ள மால்கம்-X நூல் இந்த மாதம் முழுவதும் ரூ.80-க்கு விற்பனை செய்யப்படுகின்றது. இதை பரவலாக்குவதன் மூலம் அவரது வாழ்வையும், இன, நிற, நில இழிவுகளுக்கும், அநீதிகளுக்கும் இஸ்லாம் தரும் தீர்வை ஒடுக்கப்பட்டவர்கள் அறிந்திடச் செய்யலாம்.

- இஸ்லாத்தையும் பரவலாக்கிடலாம்.

**குறிப்பு : "இந்நாளில் நாம் செய்யும் மிகச் சிறந்த தொண்டு இஸ்லாத்தை நம்மோடு வாழ்பவர்களுக்கு எடுத்துச் சொல்வதுதான்"**

இவண்,


**தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட்,**
**நீதிஅமைதிக்கான மக்கள் இயக்கம்,**
**வைகறை வாசகர் வட்டம்,**
52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001.

**செய்திகளின் உண்மையான மறுபக்கங்களை அறிந்திட, படியுங்கள், பரப்புங்கள் : "வைகறை வெளிச்சம்" மாதஇதழ், ஆண்டு சந்தா ரூ. 480/- தனிஇதழ் ரூ. 40/-**

**தொடர்புக்கு : 81481 29887**


# ஒயிட் ஹவுஸ் அப்துல் பாரி - அவர்களை அல்லாஹ் அழைத்துக் கொண்டான்

**இறைவனிடமிருந்தோ வந்தோம், அவனிடமே மீளுகிறோம்**



சென்னையிலிருந்து குமரி முனைவரை பயணம் செய்திடும் போதெல்லாம், பல இடங்களில் இங்கே ஒரு மஸ்ஜித் இருந்தால், தொழுகைக்கு வசதியாக இருக்குமே என எண்ணுவதுண்டு, ஒரு காலத்தில்.

காலப்போக்கில் எல்லா வசதிகளுடனும், ஒரு மஸ்ஜித் இருக்கும். பெண்களுக்கான எல்லா வசதிகளும் அங்கே இருக்கும். அந்த மஸ்ஜித்களில் தொழும்போதெல்லாம், இத்துணை வசதிகள் ஏற்பாடு செய்து தந்தவர்களுக்கு அல்லாஹ் அருளைப் பொழி வானாக! என துஆ செய்வதுண்டு. இந்த இடங்களில் தொழும்போது மட்டுமல்ல, அந்த இடத்தை தொழுகை அல்லாத மற்ற நேரங்களில் கடந்துசெல்லும்போதும் துஆ செய்வதுண்டு.

இப்படி பல அல்லாஹ்வின் அடியார்கள், பயணிகளின் துஆக்களைப் பெறுவதுண்டு. அதில் மிகவும் அதிகமாக பயணிகளின் துஆவையும், அல்லாஹ்வின் அருளையும் அள்ளிச் சென்றவர் ஒயிட் ஹவுஸ் "அப்துல் பாரி" அவர்கள்.


குறிப்பாக, சென்னை, விழுப்புரம் பாதையில், விக்கிரவாண்டியில் கம்பீரமாய் வீற்றிருக்கும் ஒயிட் ஹவுஸ் மஸ்ஜித், வெள்ளை நிறத்திலும், விரிந்து பரந்து தோட்டத்துடனும், தோற்றத்துடனும் அனைத்து வசதிகளு டனும் தொழுகையாளிகளுக்காக இருக்கின்றது. அளப்பறிய நன்மைகளை ஒயிட் ஹவுஸ், அப்துல் பாரி அவர்களுக்கு அள்ளித்தருவானாக! அதன் வானளாவ உயர்ந்து நிற்கும் மினாரா ஒயிட் ஹவுஸ் அப்துல் பாரி அவர்களின் வள்ளல் குணத்தை வல்லோன் அல்லாஹ்விடம் சாட்சியம் சொல்லுகின்றது. அவர் ஓர் இறைநேசர் அல்ஹம்துலில்லாஹ். அவர்களுக்கு சொர்க்கத்தில் உயர்ந்த இடத்தைத் தருவானாக.

அதேபோல், ஆலிம்கள், மஸ்ஜித்களில் பணிபுரிவோர் இவர்களின் நல்வாழ்வில் ஒயிட் ஹவுஸ் அப்துல் பாரி அவர்கள், அதிக அக்கறை கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு பல உதவிகளைத் தொடர்ந்து தொய்வின்றி செய்து வந்தார்கள். அதனால் அவர்கள் ஆலீம்களின் நேசர் எனவும் பாராட்டப்பட்டார்கள். ஏனைய மத நம்பிக்கையாளர் பல உதவிகளை வழங்கி வந்தவர்.

அவர்களை 28-01-2023 அன்று அல்லாஹ் அழைத்துக் கொண்டான். அல்லாஹ் அவர்களைப் பொருந்திக் கொள்வானாக! இறைவனிடமிருந்தோ வந்தோம், அவனிடமே மீளுகிறோம்.

இவண், **வைகறை வெளிச்சம் வாசகர் வட்டம்.**

ஆங்கிலம் : JOHN FEFFER
தமிழ் வடிவம் : மு. குலாம் முஹம்மத்




## புகுமுன்

இந்தத் தொடரில், இடம்பெறும் தகவல்கள் மிகவும் அரிதானவை. இன்று முஸ்லிம்கள் உலகெங்கிலும் தங்களுக்கு எதிராக எழுந்து நிற்கும், எதிர்ப்பை கண்டு அங்காலாயித்து நிற்கின்றார்கள்.

இந்த எதிர்ப்புகள் ஊடகங்களில் அதிகமாகக் காட்டப்படுவதால், அது மக்களின் பொது புத்தியை வெகுவாக ஆக்கிரமித்து வருகின்றது. அதனால் இஸ்லாத்தையும், தங்களையும், பாதுகாத்திட இயலாதோ என அங்கலாயித்து நிற்கின்றார்கள், முஸ்லிம்கள்.

ஆனால், இந்த எதிர்ப்புகளும் கண்மூடித்தனமாக ஊடகங்களிலும் எதிர்படும் செய்திகளும் திடுதிப்யென எழுந்தவை அல்ல. மாறாக, ஒரு நீண்ட காலத் திட்டங்களின் கீழ் மூச்சுவிடாமல் செய்யப்படும் பிரச்சாரங்களின் விளைவே!

இதில் மேலை நாட்டவர்கள் மிகவும் அதிகமாகவே மனித ஆற்றல் பணம், நேரம் இவற்றை செலவிட்டுள்ளார்கள்.

அந்த சதித் திட்டங்களை முழுமையாக அறிந்திடவும், எதிர்கொள்ளவும், முறியடித்திடவும் இந்த கட்டுரைத் தொடர் பெருமளவில் உதவி செய்யும். இன்ஷா அல்லாஹ். தொடர்ந்து படித்து வாருங்கள்.

## வெள்ளை கிருஸ்தவ உலகின் வெறுப்பின் ஆழம்

**ஜான் பெஃபர் கூறுகின்றார்,**

*“முதல் சிலுவைப் போரின்போது (1095-1252) போர் செய்திட வந்த முஸ்லிம்களை நோக்கி அல் அக்ஸா மஸ்ஜித்துக்குள் தஞ்சம் புகுந்திடுங்கள். உங்கள் ஆயுதங்களைக் கீழே போட்டுவிடுங்கள். உங்களை எதுவும் செய்ய மாட்டோம்” என வாக்களித்தார்கள் சிலுவைப்போர் தளபதிகள். (வெள்ளைக்கிருஸ்தவர்கள்) அவ்வாறு ஆயுதங்களை கீழேப் போட்டுவிட்டு நிராயுத பாணிகளாக “அல் அக்ஸா” மஸ்ஜித்-குள் தஞ்சம் புகுந்த முஸ்லிம்கள் அனைவரையும் வெட்டிச் சாய்த்தார்கள். தந்த வாக்குறுதிகளை தவறாமல் மீறினார்கள்.*

*இதனை* The Kingdom of Heaven *“சுவர்க்கத்தின் சாம்ராஜ்யம்” என்ற 2005 திரைப்படத்தில் ரிட்லிஸ்காட் என்பவர் எடுத்துக்காட்டியுள்ளார்.*

*சிலுவைப் போர் வீரர்களில் ஒருவர் ரினால்டு சட்லியன்* (Reynauld Chattilion) *(முதல்) சிலுவைப் போரின் ஒரு கட்டத்தில், வெற்றி வீரர் சலாஹுத்தின் அய்யூபியுடன், ஓர் ஒப்பந்தம் செய்து கொள்கின்றார்.*

*அந்த ஒப்பந்தத்தில் “நான், எந்த நிலையிலும் ஹஜ்ஜுக்கு செல்லும் முஸ்லிம்களை தாக்க மாட்டேன் என்றொரு நிபந்தனையை ஒத்துக் கொள்கின்றார். ஆனால் பின்னர் அந்த ஒப்பந்தத்தை மீறுகின்றார். ஹஜ்ஜுக்குச் செல்லும் (புனித பயணிகளைத் தாக்குகின்றார். ஒரு முறையல்ல, இருமுறை தாக்குகின்றார். இதுதான் ஒப்பந்தங்களை கிருஸ்தவ உலகம் மதித்த அழகு.*

பின்னர் அப்போரில் முஸ்லிம்கள் வென்றார்கள். ஆனால் முஸ்லிம், சிலுவைப்போர் வீரர்கள், கிருஸ்தவ சிலுவைப் போர் வீரர்களை எப்படி நடத்தினார்கள்? என்பது வரலாற்றில் பெருந் தன்மையின் மகுடமாக நின்று பேசுகிறது.

வெற்றியின் உச்சத்தில் நின்ற முஸ்லிம்கள் பெருந்தன்மையால் தோல்வியில் துவண்டு நின்ற கிருஸ்தவர்களை கண்ணியத்தோடு நடத்தினார்கள்.

தனிப்பட்ட முஸ்லிம்கள் (முதல் சிலுவைப் போரில்) எழுச்சியின் ஏற்றத்தில் நின்று சாகசங் களை நிகழ்த்திக்காட்டினார்கள். அவர்களின் உணர்ச்சியும், உற்சாகமும் வரலாறாய் இன்றளவும் வாழ்கின்றன. இனியும் இலங்கும்.

சலாஹுத்தின், ஒரு குர்திஷ் (குருது) தலைவர். அவர் முஸ்லிம் உலகை ஒன்றிணைத்தார். ஜெரு சலத்தை மீண்டும், கைப்பற்றினார். ஆனால், எந்தக் கூட்டுக் கொலையுமில்லை. அப்பாவிகளின் இரத்தம் சொட்டும் சிந்திடவில்லை.

போரின் முடிவில் எதிரிகள் உட்பட எல்லா ராலும் போற்றப்படக்கூடிய ஓர் மாவீரனாக சலாஹுத்தின் எழுந்தார். வரலாற்றிலும் அப்படியே வாழ்ந்தார். வாழ்ந்து கொண்டிருக் கிறார். மாவீரர்களின் மனங்களிலும், மக்கள் நெஞ்சங்களிலும்! அவர் அரிதான மாவீரர்களின் ஆத்மாக்களில் வலம் வரும் கதாநாயகன். (அல்ஹம்துலில்லாஹ்)

டாண்டே (Dante) என்பவரின் இன்பெர்னோ (Inferno) நகரம் என்ற காவியத்தில் (Limbo) லிம்போ என்ற சுவனச் சோலையில் சலாஹுத்தின் இடம் பெறுகின்றார்.

(ஆனால் இந்தக் காவியத்தில் முஹம்மத் (ஸல்) குழப்பங்களைப் பரப்பியதால் அந்த காவி யத்தில் நரகத்தல் முடிகின்றார்) (நவூதுபில்லாஹ்) விரிவான தகவல்களுக்குப் பார்க்க அடிக்குறிப்பு.

மாவீரன் சலாஹுத்தின் அய்யூபி அவர்களுக்கு இத்துணை பெருமை இருந்தாலும், அவரைப் பற்றி மேலை நாடுகளில் புழக்கத்தில் இருக்கும் கருத்துக்கள், அவர்கள் ஏமாற்றுபவர்கள், பதவி மோகம் பிடித்தவர்கள் ஆட்சிகளைப் பிடிக்க வேண்டும் என்ற பேராசைகளைக் கொண்டவர் என்ற இட்டுக்கட்டுகள்தாம். இதைப்போல்தான் முஸ்லிம்களையும் நாடு பிடிக்கும் ஆசை கொண்டவர்கள், சிற்றின்ப ஆசை கொண்ட வர்கள் என்றெல்லாம் பழித்தார்கள். ஏனெனில் இப்படித்தான் சிலுவைப்போர் வீரர்களுக்குச் சொல்லித் தரப்பட்டிருந்தது.

உதுமானிய கிலாபத் நிலைநிறுத்தப்பட்ட போது, ஐரோப்பியர்கள், சலாஹுத்தின் அய்யூபி போன்றவர்கள் மீது கொண்டிருந்த எல்லா நல்ல எண்ணங்களையும் தூக்கிவீசினோம். முஸ்லிம்கள் மீதும், இஸ்லாத்தின் மீதும் கொண்டிருந்த வெறுப்புப் பிரச்சாரத்தை நிரந்தரமாக்கினோம். “சாராசன்ஸ்” அதாவது அரபுக்கள் என்ற சொல் லாட்சியை “துருக்கி” துருக்கியர்கள் என்ற சொல் லாட்சியைக் கொண்டு மாற்றி அமைத்தோம்.

இந்த “துருக்கி” என்ற சொல்லும், “துருக்கி யர்கள்” என்ற சொல்லுந்தான் இனி, கிருஸ்தவம், ஐரோப்பா என்ற சொற்களுக்கு எதிரான சொற்கள் என்றாக்கினோம்.

1453இல் கான்ஸ்டாண்டி நோபிள்-ஐ முஸ்லிம்கள் கைப்பற்றியதால் கிருஸ்தவ உலகிற்கு ஏற்பட்ட இழப்புகள் கொஞ்ச நஞ்சமல்ல. அது, பைசாந்திய (கிருஸ்தவ) சாம்ராஜ்யத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்தது. கிருஸ்தவத்தின் மார்பிடம் ஒன்று வரலாற்றிலிருந்து மாய்ந்து போனது. இது ஐரோப்பிய கிருஸ்தவர்களை வெகுவாகப் பாதித்தது. 400 வருடங்களுக்கு முன் ஜொக்லூக்கள் என்ற முஸ்லிம்கள் தலையெடுத் தார்கள். சிலுவைப்போர் வீரர்களை எதிர்கொண் டார்கள். ஒருநூறு ஆண்டுகளுக்குள் ஜெரு சலத்தை மீண்டும் கைப்பற்றினார்கள்.

1187இல் ஜெருசலத்தைக் கைப்பற்றினார்கள் கிருஸ்தவத்தின் முதல் இடம் பறிபோனது. 1453இல் கான்ஸ்டாண்டி நோபிளைக் கைப்பற்றி னார்கள். கிருஸ்தவத்தின் இரண்டாவது தடமும் பறிபோனது. இதனால் துருக்கியர்கள் ஐரோப்பிய கிருஸ்தவர்களுக்கு “Moral Enemies” ஒழுக்கம் சார்ந்த எதிரிகள், தாமஸ் மூர் - Thomas More என்பவர் இப்படித்தான் எழுதினார். மார்ட்டின் லூதர் கிங் என்பவரும் அப்படியே கருதினார். தோமஸ் மாஸ்னோக் என்பவர் இந்த துருக்கியர் களுக்கு எதிரான உணவுகளும், முஸ்லிம்களுக்கு எதிரான உணர்வுகளுந்தான், ஐரோப்பிய ஒன்றியம் European Union உருவாக முதல் எண்ணத்தை விதைத்தது. (44) வில்லியம் பென்-William Penn என்பவர், 17ஆம் நூற்றாண்டின் ஐரோப்பாவை ஒன்றிணைந்து செயல்பட வைத்தது. ஐரோப்பிய

கிருஸ்தவர்களுக்கு ஏற்பட்ட அடுத்தடுத்த பெறும் தோல்விகள்தான் இந்தத் தோல்வி. ஓர் பாதுகாப்பற்ற பதற்றத்தை ஏற்படுத்திவிட்டது என்றார்.

இனி இந்தப் போர் துருக்கியர்கள் - கிருஸ்தவ ஐரோப்பா என்றே அமையும். ஆக, எங்களது எதிர்ப்பும் முஸ்லிம்கள் "மீதான வெறுப்பும்" இனி இப்படித்தான் அமையும்.

- இன்ஷா அல்லாஹ் தொடரும்.

## அடிக்குறிப்பு

Kingdom of Heaven - "சுவர்கத்தின் சாம் ராஜ்யம்" என்ற திரைப்படம். இந்தத் திரைப் படம் வாழ்க்கை துணையை (மனைவியை) இழந்த ஒரு தையல்காரன் எப்படி சிலுவைப் போரில் கலந்துகொண்டு வெற்றிகளை ஈட்டினான் என்பதைச் சொல்லும் (கதை) கற்பனை. உண்மை யல்ல. ஆனால், சிறந்த பொழுதுபோக்கு! என்பது திரைப்பட விமர்சகர்களின் கருத்து.

நம்மைப் பொறுத்தவரை சிலுவைப்போரில் ஐரோப்பியர்கள் அடைந்த தோல்வியை அப்படியே மறைத்து, அவர்கள் வென்றார்கள் என்ற கருத்தை கிருஸ்தவ உலகில் நிலை நாட்டிடத் தயாரிக்கப்பட்ட திரைப்படம். அதன்மூலம் மேலை நாட்டவர்களை ஒருவித மத மதப்பில் வைத்துக்கொள்ளும் முயற்சி.

**அன்பார்ந்த வாசகர்களே!**

Crusade 2.0 - சிலுவைப் போர் 2.0. என்ற இந்த நூலில், நூலாசிரியர் ஜான் பெஃபர் பல




கட்டுரைகளையும், நூல்களையும் மேற்கோள் காட்டுகின்றார்கள். அவற்றையெல்லாம் படிக்கும் போது, ஐரோப்பிய நாடுகளில் தினமும் ஒருநூல் இஸ்லாத்திற்கு எதிராக வெளியே வந்து கொண்டி ருக்கின்றதோ என்று எண்ணத்தோன்றுகிறது. அதேபோல் பத்திரிகைகளில் இஸ்லாத்திற்கும், முஸ்லிம்களுக்கும் எதிராக கட்டுரைகள் வந்த வண்ணமிருக்கின்றன.

குறிப்பாக, எவரேனும், இஸ்லாத்தையோ, சிலுவைப் போர்களின்போது முஸ்லிம்கள் காட்டிய பெருந்தன்மையையோ சிலாகித்துப் பேசிவிட்டால் அல்லது எழுதிவிட்டால். உடனேயே மறுப்பும், எதிர்ப்புப் பிரவாகமெடுக் கின்றன. ஆனால் அதில் அவர்கள் பெரிதாக வெற்றிப் பெற்றிடவில்லை.

மாவீரன் சலாஹுத்தின் அய்யூபியைப் பொறுத்தவரை, சிலுவைப்போரில் கலந்து கொண்ட கிருஸ்தவப் படை தளபதிகளும், படை வீரர்களும் பாராட்டும் ஓர் ஒப்பற்ற போர் வீரர்.

ஐரோப்பாவைச் சார்ந்த எழுத்தாளர்களே அவர்களைப் பாராட்டி இருக்கின்றார்கள். அத்தனை இருட்டடிப்புகளையும் கடந்து உண்மை வெளிவரவே செய்கின்றது. ஆனால், இன்றைக்கு இஸ்லாமோஃபோபியா என்ற இஸ்லாமிய வெறுப்பில் வார்த்தெடுக்கப்பட்ட, ஐரோப்பிய கத்துக் குட்டிகளால் அவரையும், அவரது பெருந்தன்மைகளையும் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. தங்கள் ஆற்றாமையை அள்ளிக்கொட்டும் அவதூறுகளை ஊடகங்கள் வழி வெளிப்படுத்திக் கொண்டே இருக்கின் றார்கள்.

யதார்த்த வாழ்க்கையிலும், வரலாற்றிலும் சலாஹுத்தின் அவர்கள் (அல்லாஹ் அவர்களைப் பொருந்திக் கொள்வானாக) இன்றைய முஸ்லிம் உலகிற்கோர் முன்மாதிரி.

சலாஹுத்தின் அய்யூபி அவர்களின் பெருந் தன்மைகளையும், அதற்கான இஸ்லாமிய அடிப்படைகளையும், விரிவாகத் தெரிந்து கொள்ள படியுங்கள். (இஸ்லாமிய நாகரிகம்) வெளியீடு "வேர்கள் பதிப்பகம்"

Limbo - லிம்போ என்பது கிருஸ்தவ நம்பிக்கை யின்படி, சுவர்க்கத்தில் ஓரிடம். இதில்தான் ஏசு கிருஸ்துவின் வருகைக்கு முன் வாழ்ந்து, இறந்த


vaigarai velicham official

நல்லவர்களும், கிருஸ்தவ மத சடங்களுக்கு உட்படுத்தப்படாத (Unbaptized) குழந்தைகளும் இருப்பார்கள்.

Inferinno - “இன்பெர்னோ” பொருள் நரகம். இது டாண்டோ அலிகிரீர் என்பவர் இத்தாலி மொழியில் எழுதிய பாடல் திரட்டு அல்லது காவியம். இது 14ஆம் நூற்றாண்டில், அதாவது 1300களில்எழுதப்பட்டது. இந்தப்பாடல்திரட்டு மூன்று பாகங்களைக் கொண்டது. பாகம்-1, நரகம் (Hell), பாகம்-2 “Purgatorio” பர்காரிடோரியா. அதாவது, சொர்க்கத்திற்கும், நரகத்திற்கும் ஓர் இடம். கிருஸ்தவ மத நம்பிக்கைகளின், அடிப் படையில் கடவுளுக்கு பிரியமான முறையில் இறப்பவர்கள், கடவுளுக்கு நண்பராக இறப்பவர்கள் இவர்களில் தூய்மை இல்லாமலிருப்பவர்களை தூய்மைப்படுத்தும் இடம், சுத்திகரிக்குமிடம். பாகம்-3 சொர்க்கம் - இன்பெர்னோ உலகில் மிகவும் பிரசித்திப் பெற்ற ஒரு பாடல் திரட்டு, இது பின்னர் பல்வேறு மொழிகளிலும், மொழி பெயர்க்கப்பட்டது.

பின்னர் நாடகமாகவும், திரைப்படமாகவும் வந்தது. இதில்தான் வன்நெஞ்சர்கள் இறைவனின் இறுதித் தூதர் (ஸல்) அவர்கள் நரகவாசி எனக் காட்டினார்கள். ஏனெனில் அவர் கலகம் செய்து விட்டாராம் மத தம்பிக்கையல் அவ்வளவு விஷம் இஸ்லாத்திற்கெதிராக அன்றே பரப்பப்பட்டுள்ளது.

பாடல் திரட்டை எழுதிய டாண்டே இந்த மூன்று இடங்களுக்கும் பயணிப்பதாக பாடல்கள் நல்ல இலக்கியத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக இந்த பாடல் திரட்டைக் காட்டுகின்றார்கள்.

இத்தாலி மொழி பாடல் திரட்டு பல்வேற மொழிகளிலும், மொழி பெயர்க்கப்பட்டு, ஐரோப்பாவின் எல்லாப் பாடசாலைகளிலும் குழந்தைகளுக்குப் புகட்டப்படுகின்றது. இப்படி பொய்களையும் அவற்றை அடிப்படைகளாகக் கொண்டு வெறுப்பையும் பிஞ்சு நெஞ்சங்களில் பலநூறு ஆண்டுகளாகப் பாய்ச்சி வருகின்றார்கள். இப்படி வளர்க்கப்படுபவர்கள்தாம் ஐரோப் பாவை பிற்றை நாட்களில் ஆட்சி செய்ய வருகின்றார்கள். ஐ.நா.வில் வீற்றிருப்பவர்கள், சர்வதேச நீதிமன்றங்களில் அமர்ந்து நீதி செலுத்துபவர்களாக மாறுகின்றார்கள்.

இந்தக் கேடுகெட்ட இலக்கியங்களில்கூட சலாஹுத்தின் அய்யூபிக்கு சொர்க்கத்தில் இடந்தந்திருக்கின்றார்கள். 600/700 ஆண்டு களுக்கு முன்னால் வந்தப் பாடல் திரட்டில் இந்த நிலை. அவர்களால் கூட சலாஹுத்தின் அவர்களின் பெருந்தன்மைகளைப் புறந்தள்ளிட இயலவில்லை. ஆனால் இன்றைக்கு அவரை பேராசைக்காரர், நாடு பிடிப்பவர் என்றெல்லாம் சித்தரித்து வருகின்றார்கள்.

ஜான் பெஃபர் அவர்கள் இப்படித்தான், ஐரோப்பா இஸ்லாத்தின் மீதும், முஸ்லிம்கள் மீதும் வெறுப்பை வளர்க்கின்றது எனக் குறிப்பிடு கின்றார்.

கான்ஸ்டாண்டி நோபிள் (இப்போது இஸ்தான்புல்) தோல்வியை கிருஸ்தவ உலகம் அவ்வளவு எளிதாக எடுத்துக்கொள்ளவில்லை. அதற்குப் பழிவாங்கிடும் படலம் ஒன்றைத் தொடங்கினார்கள். இதனை தேசப் பிரிவினைக்கு யார்? காரணம் என்ற நூலில் விரிவாகத் தந்துள்ளோம். அந்த நூலைப் படிக்கவும். வெளியீடு “வேர்கள் பதிப்பகம்”



# மசூதிக்குள் குடிபோதையில் அத்துமீறி நுழைந்து இமாமை தாக்கிய இராணுவ வீரர்.!



நாட்டின் எல்லைகளையும் மக்களையும் அந்நியர்களின் தாக்குதல்களில் இருந்து பாதுகாக்கும் உன்னதப் பணியில் ஈடுபட்டுள்ள இராணுவ வீரர்களிடையேயும் தற்போது மதவெறி புகுந்து தலைவிரித்தாடுகிறது என்பதற்கு தஞ்சையில் அண்மையில் நடைபெற்ற இச் சம்பவமே மிகச் சிறந்த சான்று.

ஜனவரி 14-ம் தேதி (சனிக்கிழமை) காலை 6.30 மணி. தஞ்சாவூர் புதிய பேருந்து நிலையம் அருகேயுள்ள பாஸ்கரபுரம் பகுதியில் அமைந்துள்ள அல் அன்சார் ஜும்ஆ மசூதி.

மோதினார் என அழைக்கப்படும் அதன் ஊழியர் ஃபஜ்ர் தொழுகைக்கான பாங்கு (அழைப்பு) சொல்லிக் கொண்டிருக்கிறார்.

அப்போது மசூதிக்குள் அத்துமீறி நுழைந்த இளைஞர் ஒருவர் அங்கே காலை தொழுகைக்கான 'பாங்கு' சொல்லிக் கொண்டிருந்த ஊழியரின் முதுகில் தனது கைகளால் தொடர்ந்து தட்டி இடையூறு செய்துள்ளார். ஆனால் அந்த இடையூறுகளைப் பொருட்படுத்தாமல் அந்த ஊழியர் பாங்கு சொல்வதிலேயே கவனம் செலுத்தியுள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த அந்த இளைஞர், "ஏய் நிறுத்து இதெல்லாம் சொல்லக் கூடாது," எனக் கூறியவாறு பாங்கு சொல்லிக் கொண்டிருந்த ஊழியரை அவரது பின்னந்தலையில் ஓங்கி அடித்துள்ளார்.

அப்போது மசூதியில் தொழுகைக்காக தயாராகிக் கொண்டிருந்து அம்மசூதியின் இமாம் (ஹஜ்ரத்) ஜெயினுல் ஆபிதீன் மற்றும் சிலர் இதைக் கண்டு அதிர்ச்சியடைந்து, குடிபோதையில் இருந்த அந்த இளைஞரை மசூதியை விட்டு வெளியேறுமாறு கூறியுள்ளனர்.

இதனால் ஆத்திரமடைந்த அந்த இளைஞர், பாங்கு சொல்லக்கூடாது என்றும் தனது மொபைலில் உள்ள 'ஹரே ராமா ஹரே கிருஷ்ணா' என்ற பாடலை ஒலிபரப்புமாறும் கூறி, மசூதி இமாம் ஜெயினுல் ஆபிதீனையும் தாக்கியுள்ளார். இதனால் அங்கே பதற்றம் ஏற்பட்டது.

இதுபற்றிய தகவலின் பேரில், புதிய பேருந்து நிலையத்தில் உள்ள 'காவல் உதவி மைய'த்தில் அப்போது பணியில் இருந்த சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் மசூதிக்கு விரைந்து வந்து குடிபோதையில் இருந்த அந்த இளைஞரிடம் விசாரணை நடத்த முயன்றார். அவரால் அந்த இளைஞரை கட்டுப்படுத்த முடியாததால் அவரது அழைப்பின்பேரில் மேலும் இரண்டு காவலர்கள் அங்கே விரைந்து வந்தனர்.

போலீஸாரின் விசாரணையில், அந்த இளைஞர் தஞ்சாவூர் ரஹ்மான் நகரைச் சேர்ந்த ராஜேந்திரன் என்பவரது மகன் தேசிங்கு ராஜா (35) என்பதும், அந்த இளைஞர் ஒரு இராணுவ வீரர் என்பதும், அசாம் மாநிலத்தில் பணிபுரிந்துவரும் தேசிங்கு ராஜா தற்போது விடுப்பில் சொந்த ஊருக்கு வந்துள்ளார் என்பதும் தெரிய வந்தது.

முஸ்லிம்களின் வழிபாட்டு தலமான மசூதிக்குள் அதன் புனிதத் தன்மையை கெடுக்கும் வகையில் காலணிகள் அணிந்தவாறு குடிபோதையில் அத்துமீறி நுழைந்து அங்கிருந்த இமாம் உள்ளிட்ட ஊழியர்களைத் தாக்கிய நபர் ஒரு இராணுவ வீரர் என்பது தெரிய வந்ததும் அவரை


vaigarai velicham official

கைது செய்து காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்வதற்கு பதிலாக 'அவர் மனநலம் பாதிக்கப் பட்டவர்' எனக் கூறி அங்கிருந்து தப்பிச்செல்ல அனுமதித்தனர் போலீஸார்.

இராணுவ வீரர் தேசிங்கு ராஜா மசூதியில் இருந்து வேகவேமாக வெளியேறி தனது மோட் டார் சைக்கிளில் ஏறி அங்கிருந்து புறப்பட்டுச் சென்றுவிட்டார்.

இதைத் தொடர்ந்து, பள்ளிவாசல் நிர்வாகம் சார்பில் அதன் செயலாளர் முகம்மது ரஃபீக் அளித்த புகாரின்பேரில், தஞ்சை நகர டிஎஸ்பி ராஜா மற்றும் போலீஸார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணை மேற்கொண்டனர்.

தேசிங்கு ராஜா இராணுவ வீரர் என்பதால் அவரை கைது செய்யாமல் காப்பாற்றும் முயற்சிகளிலும் காவல்துறையினர் ஈடுபட்டனர்.

இதுபற்றி அங்குசம் ஆன்லைன் இதழில் விரிவான செய்தி வெளியானதைத் தொடர்ந்து, பாபநாசம் எம்.எல்.ஏ.வும் மனிதநேய மக்கள் கட்சியின் தலைவருமான பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லாவின் உத்தரவின்பேரில் அக்கட்சி யின் மாநில துணைப் பொதுச் செயலாளர் தஞ்சை பாதுஷா என்பவர் காவல் துறை அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு இராணுவ வீரர் தேசிங்கு ராஜா மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தினார். ஆனால் தேசிங்கு ராஜா மன நலம் பாதிக்கப்பட்டவர் என்ற அதே பல்லவியைப் பாடி அவரையும் ஏமாற்றினர் நமது போலீஸார்.

இதுபற்றி தொடர்பு கொண்டு கேட்டபோது, இராணுவ வீரர் தேசிங்கு ராஜா சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அசாம் மாநிலத்தில் ஒரு உயரமான கோபுரத்தில் இருந்து கீழே விழுந்து விட்டதாகவும், அதனால் அவருக்கு அவ்வப் போது இதுபோல மனநலக் கோளாறு ஏற்பட்டு வருவதாகவும் தேசிங்கு ராஜாவின் மனைவி மற்றும் அக்கம் பக்கத்தினர் தெவித்ததாக தஞ்சை நகர டிஎஸ்பி ராஜா நமது செய்தியாளரிடம் கூறினார்.

மனநலம் பாதிக்கப்பட்ட நபர் எப்படி இராணுவத்தில் இன்னும் பணிபுரிய முடியும் எனக் கேட்டதற்கு, விசாரணை முடிவில்தான் அதுபற்றி தெரிய வரும் என்றார் டிஎஸ்பி ராஜா.

இராணுவ வீரர் தேசிங்கு ராஜாவை கைது செய்யுமாறு பல்வேறு தரப்பில் இருந்து அழுத்தம் வரவே வேறு வழியின்றி அவர் மீது எப்ஐஆர் பதிவு செய்தனர் தஞ்சை மருத்துவக் கல்லூரி காவல் நிலைய போலீஸார்.

இதற்கிடையே தேசிங்கு ராஜாவை கைது செய்யாமல் இருக்க இன்னுமொரு நாடகமும் அரங்கேறியது. இராணுவ வீரர் தேசிங்கு ராஜா திடீரென தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் மனக்கோளாறு நோயாளிகளுக்கான சிறப்பு வார்டில் அனுமதிக்கப்பட்டார்.

இதுபற்றி தகவலறிந்த அல் அன்சார் ஜும்ஆ பள்ளிவாசலின் நிர்வாகிகள் மற்றும் அப்பகுதி முஸ்லிம்கள் சுமார் இருநூறு பேர் திரண்டு வந்து இராணுவ வீரர் தேசிங்கு ராஜாவை கைது செய்யு மாறு வலியுறுத்தி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை காவல் நிலையத்தை முற்றுகையிட்டனர்.

"இதுவே முஸ்லிம் இளைஞராக இருந்து, அவர் கோயிலுக்குள் அத்துமீறி நுழைந்து இவ்வாறு முறைகேடாக நடந்து கொண்டிருந்தால் அவரை போலீஸார் இப்படிதான் காப்பாற்றுவார்களா? இந்நேரம் அவரை 'முஸ்லிம் தீவிரவாதி' என முத்திரை குத்தி போலீஸார் கைது செய்திருப் பாங்க. அதுவே அகில இந்திய அளவில் அனைத்து ஊடகங்களிலும் தலைப்புச் செய்தியாக ஆகியி ருக்கும்," என பள்ளிவாசல் நிர்வாகிகள் மற்றும் அப்பகுதி முஸ்லிம்கள் வாதிட்டனர்.

இதனால் வேறு வழியின்றி, தேசிங்கு ராஜாவை இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் ஏழு பிரிவு களில் வழக்குப் பதிவு செய்து கைது செய்தனர் போலீஸார். பின்னர் அவர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு தஞ்சாவூர் கிளைச் சிறையில் அடைக்கப்பட்டார்.






# முஸ்லிம் மன்னரிடம் உதவி தேடிவந்த கிறிஸ்துவ கூட்டம்

உஸ்மானிய்யா பேரரசின் சுல்தான் இரண்டாம் முராத், தெஸாலோனிக்கி (கிரேக்க நாட்டின் இரண்டாவது பெரிய நகரம்) என்ற நகரத்தை வெற்றி கொண்டார்.

சுல்தான் இரண்டாம் முராத் தெஸாலோனிக்கி அருகில் உள்ளார் என்பதை அறிந்து, யான்யா பகுதியை சேர்ந்த ஒரு சிறிய கூட்டம் மன்னரை சந்திக்க வந்துள்ளார்கள் என்பதை வாயிற்காவலன் சுல்தானிடம் தெரிவித்தான். செய்தியை கேட்டதும் இத்தாலியின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியில் வாழும் மக்கள் தன்னை ஏன் சந்திக்க வேண்டும் என்று சுல்தான் ஆச்சிரியமடைந்தார்.

“சரி, அவர்களை வரச் சொல்லுங்கள்” என்று வாயிற்காவலனிடம் கூறினார். பிறகு வருகை புரிந்தோரை சுல்தான் வரவேற்றார். “உங்களுக்கு என்ன தேவை என்று கேட்டார்?

அதற்கு அந்த மக்கள் “கண்ணியத்திற்குரிய சுல்தான் அவர்களே! உங்களிடம் ஒரு உதவியை நாடி வந்துள்ளோம். தயவு கூர்ந்து அதனை உதாசீனப்படுத்தி விடாதீர்கள்!”.

உங்களுக்கு நான் எவ்வாறு உதவி செய்ய இயலும் ? என்று சுல்தான் கேட்டார்.

“மரியாதைக்குரிய சுல்தான் அவர்களே!

எங்களது ஆட்சியாளர்கள் எங்களுக்கு அநீதி இழைக்கிறார்கள். எங்களை கொத்தடிமை போல நடத்துகிறார்கள். உழைத்து கஷ்டப்பட்டு சம்பாதித்த செல்வங்களை அபகரிக்கிறார்கள். இவை அனைத்திற்கும் மேலாக பிற நாடுகளின் மீது அநியாயமாக தொடுக்கப்படும் போர்களில் எங்களை கட்டாயப்படுத்தி பங்கேற்க செய்கிறார்கள்.”

இது உங்களுக்கும் உங்கள் ஆட்சியாளர்களுக்கும் மத்தியிலான பிரச்சினை இதற்கு நான் என்ன செய்ய இயலும் என்றார் சுல்தான்.

“பெரும் கண்ணியத்திற்குரிய சுல்தான் அவர்களே! நாங்கள் முஸ்லிம்கள் அல்ல கிறிஸ்துவர்கள், இருந்தாலும் முஸ்லிம்களின் நீதி செலுத்தும் ஆட்சிமுறையை பற்றி நிறைய அறிந்துள்ளோம். அவர்களது ஆட்சியின் கீழ் வாழும் மக்களுக்கு அநீதி இழைக்கமாட்டார்கள். பிற மதத்தவரை தங்களது மார்க்கத்தை ஏற்க வேண்டும் என்று நிர்பந்திக்க மாட்டார்கள். அவரவர்களது உரிமை அவர்களுக்கு தாராளமாக வழங்கப்படும். உங்களது நாடுகளுக்கு வரும் சுற்றுலா பயணிகள், வியாபாரிகள் மூலமாக இவற்றையெல்லாம் நாங்கள் அறிந்து கொண்டோம்.

“உங்களது ஆட்சியின் கீழ் வாழ ஆசைப்படுகிறோம். எங்களை ஆண்டு கொண்டிருக்கும் அநீதியிழைக்கும் ஆட்சியாளர்களிடமிருந்து எங்களை மீட்டு உங்களது ஆட்சியின் கீழ் இளைப்பாற வேண்டும் என்று ஆசைப்படுகிறோம்.”

இவ்வாறு கூறி முடித்தவுடன் தங்களது நகரத்தின் தங்கச் சாவி கொத்தை சுல்தானுக்கு முன்னால் நீட்டினார்கள். அவர்களது வேண்டுதலை சுல்தான் ஏற்றுக் கொண்டார்.

உடனே ஒரு படையை அனுப்பி அந்த நகரத்தை வெற்றி கொண்டு நீதம் என்னும் நறுமணத்தை நகரமெங்கும் பரப்பினார்.

**மூலம்:ரவாயிஃ மின் தாரிள் உஸ்மானி**
**தமிழில் : மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி**



vaigarai velicham official





# காவி மயமாகும் நீதித்துறை

நீதிபதிகளை நியமிப்பதில் “கொலிஜியம்” என்ற உச்ச நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட முறையே சிறந்தது என அண்மையில் உச்ச நீதிமன்றம் உறுதி செய்தது. இந்த கொலிஜியத்தில் ஐந்து உச்ச நீதிமன்ற நீதிபதிகள் இருப்பார்கள். இந்தியாவின் தலைமை நீதிபதி அவர்களும் இன்னும் நான்கு மூத்த நீதிபதிகளுமிருப்பார்கள்.

இந்த கொலிஜியம் முறையை அகற்றிவிட்டு, அந்த இடத்தில், தங்கள் கைப்பிடிக்குள் உள்ள ஒரு அமைப்புக் கொண்டு வந்திட வேண்டும். அதன்மூலம் தாங்கள் விரும்புபவர்களையெல்லாம் நீதிபதிகளாக ஆக்கிட வேண்டும். அதன்மூலம் நீதிமன்றங்களைத் தங்களுடைய பாசிசத்தின் கிளைகளாக மாற்றிட வேண்டும் என அடாவடித்தனங்களைச் செய்து வருகின்றது இன்றைய ஒன்றிய அரசு.

நீதிபதிகள் நியமனத்தில் அது கொண்டு வந்திட விளையும் அமைப்பு, தேசிய நீதிமன்ற நியமனங்களின் ஆணையம் National Judicial Appintment Commission (NJAC).

இந்த அமைப்பு நடப்பில் வந்தால், உச்ச நீதிமன்றத்திற்கு நீதிபதிகளை நியமிப்பதில் ஒன்றிய அரசின் “ஆட்களும்” உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமிப்பதில், மாநில அரசின் ஆட்களுமிருப்பார்கள். இதன்மூலம் நீதிபதிகளின் நியமனத்தை அரசியல்வாதிகளின் கைகளிலேயே வைத்துக்கொள்ள துடிக்கின்றது மத்திய அரசு.

இதனை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில், வந்த வாதப் பிரதிவாதங்களில், நமது மத்திய அரசு அக்டோபர் திங்கள் 2015ஆம் ஆண்டு இப்படி வாதிட்டது.

அரசியல் நிர்ணயச் சட்டத்தை வைத்து நிருவாகத்தை நடத்திடும் ஒரு நாட்டில் நீதிமன்ற நியமனங்களில் வெளிப்படைத் தன்மை என்பது மிகவும் அவசியமான ஒன்று. ஆனால், கொலிஜியம் முறை வெளிப்படைத் தன்மை அறவே இல்லை. மாறாக, அது மிக,மிக இரகசியமாக இருக்கின்றது. இது கூடாது என கொலிஜியம் உறுப்பினர்களைத் தவிர யாருக்கும், யாருடைய பெயர்கள் நீதிபதிகள் நியமனத்திற்குப் பரிந்துரைக்கப்படுகின்றன என்பது தெரிந்திடுவதே இல்லை.

(2015 October, Arguments in the Supreme Court. As Reported by the Hindu on January 25,2023)

இந்நிலையில் இப்போது நமது நீதிபதிகள் இந்த வெளிப்படைத் தன்மையை வெளிச்சம் போட்டுக் காட்டிடும் வகையில், அண்மையில் சில நீதிபதிகளை உயர்நீதிமன்றங்களுக்கு நியமித்தார்கள். அவர்களில் சிலரைப் பற்றி, நமது உள்நாட்டு மத்திய உளவுத்துறை Intelligence Bureau ‘IB’ மற்றும் Raw - ‘Research and Analysis Wing’ என்ற வெளிநாட்டு விவகாரங்களை உளவு பார்க்கும் உளவுத்துறை ஆகியவை, சில தவகல்களைத் தந்திருந்தது. இந்த நீதிபதிகளை அவர்கள் நியமித்தது ஏன்? எதற்கு என்ற கேள்விக்கு, பதிலாக அவர்கள் குறித்து மத்திய உளவுத்

துறையும், வெளிநாட்டு உளவுத்துறையும் தந்த தகவல்களையும் இணைத்தே வெளியிட்டது.

அரசு வேண்டாம் எனச் சொன்ன நீதிபதிகள் இவர்கள். இவர்கள் பிரதமர் மோடிக்கு எதிராக சமூக தளங்களில் பதிவு போட்டவர்கள். இப்போது நமது மத்திய சட்ட அமைச்சர் கிரன் ரிஜ்ஜிஜூ, வானத்திற்கும் பூமிக்கும் குதிக்கின்றார். மத்திய உளவுத்துறை தந்த தகவல்களையும், வெளிவிவகாரத்துறை உளவுத்துறை தந்த தகவல் களையும் வெளியிட்டது இமாலயத்தவறு எனச் சாடுகின்றார். இதில் சவ்ராத் கிர்பால் என்ற நீதிபதி மீதுள்ள குற்றச்சாட்டுகள் வைகறையில் (எழுதும் தரத்ததாய் இல்லை) எனையோர் சோமசேகர் சுந்தரேஷன், ஜான் சத்தியம்.

நமது சட்ட அமைச்சர் கிரன் ரிஜ்ஜிஜூ உளவுத் துறைகள், இனி தகவல்களைத் தர இரண்டுமுறை ஆலோசிப்பார்கள். (ThinkTwice) என தன் ஆதங்கத்தை வெளியிட்டுள்ளார். உளவுத்துறை யினர் தரும் தகவல்கள் உண்மையாக இருக்கும் பட்சத்தில் அவர்கள் பதட்டப்பட வேண்டிய தில்லை.

நம் நாட்டில் இயங்கும் IB என்ற மத்திய உளவுத்துறைகளையும் தாராளமாக மூட்டை முட்டையாகக் கட்டித்தரும் (இதில் இந்தக் கட்டுரையாளருக்கு நேரடி அனுபவம் உண்டு) அவற்றையெல்லாம், யாரும் மறுக்க முடியாது.

காரணம், மூட்டைக்குள் கட்டி சீல் வைத்து விடுவார்கள். அதனால் அவர்களின் பொய்களே வாழும்.

இதைத்தான் அண்மையில் பத்திரியாளர்கள் (Sealed Cover Juris Prudence) மூடிய மூட்டை நீதிபரிபாலனம் என்றார்கள். இதனால் இவர்கள் யாரையும் அழிக்கலாம், எந்தக் கேள்வி கணக்குமில்லை.

தங்களுக்குத் தரப்பட்டிருக்கும் இந்த “Immunity” என்ற யாருக்கும் பதில் சொல்லிட வேண்டாம் என்ற நிலையை எந்த அளவுக்கு முஸ்லிம்களுக்கெதிராக பயன்படுத்தியவர்கள்.

இன்னும் ஒருபடி மேலேபோய் குண்டு வெடிப்புகளை சங்கப்பரிவானத்தினரோடு நடத்தி அப்பாவி மக்களைக் கொலை செய்திருக் கின்றார்கள்.

டாக்டர் மன்மோகன் சிங், பிரதமராக இருந்தபோது, அவர் வெளிநாட்டுப் பயணமாக கேனடா நாட்டுக்குச் சென்றிட இருந்தார். இவர்கள், மத்திய உளவுத்துறையினர் அவருடைய பாதுகாப்புகளைக் கவனிக்க நாங்கள் வருகின் றோம் எனச் சொன்னபோது, நீங்கள் வர வேண்டாம், நீங்கள் முஸ்லிம்களின் பெயரால் குண்டு வைக்கின்றீர்கள் எனச் சொன்னார்கள். உலகமே நமக்கோர் இந்திய குடிமக்களுக்கோர் அவமானமாக அமைந்தது. அதுதான் நமது உளவுத்துறை. ஆக உளவுத்துறை சில சக்திகளின் கைகளில் சிக்கிக்கொண்டது.

இந்தியாவில் ஓர் இந்துராஷ்டிரா உருவாக்கு வதில் இந்துத்துவ வாதிகளோடு கோர்த்து நின்றதும், இந்த மத்திய உளவுத்துறைதான். அதனைக் கண்டுகொண்ட ஹேமந்த் கர்கரேயைக் கொலை செய்ய அபிநவ்பாரத் உடன் கை கோர்த்து நின்றதும் இதே உளவுத்துறைதான்.

ஆக நமது உளவுத்துறை அதன் தலையாயப் பணியாகிய மக்கள் குறைகளையும் மக்களின் குமுறல்களையும் அறிந்து, தகவல்களை அரசுக்கு விபரமாகத் தெரிவித்து உரிய நிவாரணங்களைப் பெற்றுத் தரும் பணியை செய்வதில்லை. அதுதன் தலையாயப் பணியாகிய இதனை மறந்தே போய்விட்டது எனலாம்.

மாறாக, தான் விரும்பும் “ஆசாமி”களை அரலாக்குவதம், தான் விரும்பாதவர்களை பெரும்பாலும் முஸ்லிம்களை அழிப்பதையும் செய்துகொண்டிருக்கின்றது. இப்போது நமது உளவுத்துறைகள் அப்படி ஒன்றும் அபாரத் தகவல்களைத் தந்திடவில்லை என நமது ‘தி இந்து’ ***26-01-2023*** தலையங்கம் சுட்டிக்காட்டுகின்றது.

நம் நாட்டில் பல அடிப்படை வழக்குகளில் இன்னும் தீர்ப்புகளை நீதிமன்றங்கள் வழங்கிட வில்லை. அவற்றுள் ஒன்று ‘IB’ என்ற மத்திய உளவுத்துறையைப் பற்றியது.

மத்திய உளவுத்துறை சட்டப்படி செயலில் வந்த ஓர் அமைப்பல்ல. அல்லது நமது அரசியல் சாசனம் தோற்றுவித்து, அதனால் செயலில் வந்த அமைப்பு அல்ல. மாறாக, கர்னாடக நீதிமன்றம் குறிப்பிட்டதுபோலஒரு “பேய்” அமைப்பு. “Ghost organization” ஆனால், அதே நீதிபதி குறிப்பிட்டது போல, ”நீங்கள் அடிப்படை இல்லாத ஓர் அமைப்பு” ஆனால், ஆழமான அடிப்படைகளைக் கொண்ட அரசு அமைப்புகளை ஆட்டிப்

படைத்துக் கொண்டிருப்பவர்கள். குல்கர்னி என்பவர் கர்நாடக உயர்நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கில் நீதிபதி கூறியது.

ஆனாலும் கர்நாடக நீதிமன்றம் வழங்கிட வில்லை. அந்த வழக்கில் இறுதித் தீர்ப்பை இந்த அமைப்பு உண்மையில் ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட ஓர் அமைப்பு. அப்போது அதன் வேலை, இந்தியாவின் விடுதலைக்காகப் போராடும் மாவீரர்களை அரசுக்கு ஆட்காட்டும் எட்டப்பன் வேலையை செய்து கொண்டிருந்தது. இப்போதும் அதே எட்டப்பன் சிந்தனைகளிலேயே செயல் பட்டுக் கொண்டிருக்கின்றது.

பாசிசம் பேயாட்டமாக இன்றைய நாட்களில் முற்றாக முஸ்லிம்களுக்கெதிராக திரும்பி அவர் களைப் பூண்டோடு ஒழிப்பதில் முக்கியப் பங்காற்றிக் கொண்டிருக்கிறது.

ஆக, உச்ச நீதிமன்ற கொலிஜியம் நீதிபதிகள் வெளியிட்டதுபோல், உளவுத்துறையின் அறிக்கை களை அடிக்கடி வெளியிட்டால், அதன் உண்மை முகம், உளவுத்துறையின் உண்மை முகம் வெளிச் சத்திற்கு வரும்.

**கொலிஜியம் செய்தது சரியா?**

இப்போது நீதிபதிகளின் நியமனங்கள் தங்கள் பிடிக்குள் இல்லை என பா.ஜ.க.வினர் துடியாய்த் துடித்தாலும், கொலிஜியம் பா.ஜ.க.வின் தேவைகளைக் கண்டுகொள்ளாமல் இல்லை.

எடுத்துக்காட்டாக பச்சையான பா.ஜ.க. மகளிர் அணி செயலாளர் உறுப்பினர் ஒருவரை மதுரை உயர்நீதிமன்றத்திற்கு நியமித்துள்ளது. அதன்மூலம் சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையிலிருந்து இன்னும் இந்துத்துவ தீர்ப்புகள் தாரளமாக வெளிவிரும் என எதிர்ப்பார்க்கலாம்.

சட்ட அமைச்சர் கிரன் ரிஜ்ஜிஜூ அவர்களைக் கண்டித்து "தி இந்து" ஆங்கில நாளிதழ் 26-01-2023இல் தலையங்கம் ஒன்றை தீட்டியுள் ளது. அதில் இப்போதும் உங்கள் கட்சியைச் சார்ந் தவர்கள், எந்தத் தடையுமின்றி உயர் நீதிபதியாகி இருக்கின்றார்கள் என இடித்துகாட்டி இருக்கின்றது.

**மாரிதாஸ் தீர்ப்புகள்**

மாரிதாஸ் என்பவரின் அவதூறு பேச்சுகளுக் காக அவர்மீது முதல் தகவல் அறிக்கைகளைத் FIR தாக்கல் செய்தது தமிழக காவல்துறை 9ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்ட, முதல் தகவல் அறிக்கைகளை 14ஆம் தேதியே ரத்து செய்தது சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை. இப்போது உச்சநீதிமன்றம் அதனை ரத்து செய்துள்ளது.

**நீதிபதிகள் வைத்த ஆப்பு**

இப்போது நீதிபதிகள், நாங்கள் நீதிபதிகள் நியமனத்தில் உண்மையை வெளிப்படைத் தன்மையோடு வெளியிட்டபோது, நீங்கள் ஏன் இத்தனை தூரம் கூப்பாடு போடுகின்றீர்கள். 2015இல் உச்ச நீதிமன்றத்தில் வெளிப்படைத் தன்மைக்கு வானளாவ வாதிட்டவர்கள் நீங்கள்தாம் ; எனச்சொல்லி அன்று நீதிமன்றத்தில் இவர்கள் போட்டக் கூப்பாடுகளைச் சுட்டிக் காட்டி உள்ளனர். ஆப்படித்ததுபோல் அமர்ந் திருக்கின்றார் சட்ட அமைச்சர் கிரன் ரிஜ்ஜிஜூ,

கொலிஜியம் முறையும் முழுமையானதல்ல. இருக்கின்ற கொள்ளிக்கு இந்தக் கொள்ளிப் பரவாயில்லை என்பதே உண்மை.

இங்கேதான் மறுமை என்ற மரணத்திற்குப் பின்னால் வரும் வாழ்க்கை, அதில் நீதி அரசன் அல்லாஹ்வின், தீர்ப்பு அதனை மனதில் கொண்டு வாழ்ந்திடும் மனிதர்கள் அவர்களிடையே நியமிக் கப்படும் நீதிபதிகள். அவர்கள் அந்த அல்லாஹ்வை அஞ்சி நீதியின் பக்கம் நிலைத்து நிற்கும் மாண்பு இவையெல்லாம் முக்கியத்துவம் பெறுகின்றது.

அவ்வாறு இறைவனையும் அவன் மறுமை நாளில் வழங்கும் நீதியையும் அஞ்சி அமைந்திடும் இஸ்லாமிய நீதிபரிபாலனத்திற்கு அல்லாஹ் இப்படி வழிகாட்டினான்.

"நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் அல்லாஹ் வுக்காக, நீதியில் உறுதியாக இருங்கள். நீதியின் பக்கம் நிலைத்தவர்களாக ஆகிவிடுங்கள். ஒரு கூட்டத்தார் மீது நீங்கள் கொண்டுள்ள பகைமை, நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்டிட வேண்டாம். நீதி செலுத்துங்கள். இதுவே இறை யச்சத்திற்கு மிக நெருக்கமாகும். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றையெல்லாம் நன்கு அறிந்தவனாக இருக்கின்றான்" (அல்குர்ஆன் - 5:8)

- MGM

தொடர்

# பிராமினிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்



## ஜெர்மன் பேக்கரி (புனே) குண்டுவெடிப்பு 2010

### வேண்டுமென்றே சரியான பாதையை விட்டுவிட்டு முஸ்லிம்களுக்கு எதிராக சூனிய வேட்டை சமத் பட்கலின் தொடர்பு குறித்து கூறப்பட்ட கருத்து தோற்றுப்போனது

*13 பிப்ரவரி 2010 அன்று புனேவில் உள்ள பிரசித்திப் பெற்ற ஜெர்மன் பேக்கரியில் வெடி குண்டுவெடித்ததில் 17 பேர் கொல்லப்பட்டனர். 56 பேர் படுகாயமடைந்தனர். வழக்கம் போல் முஸ்லிம்களுக்கு எதிராக குற்றம் சுமத்தும் விளையாட்டு இதிலும் தொடங்கி விசாரணையும் அதேபோக்கில் நடந்தது. ஐ.பி.யின் இந்த தவறான வழிமுறையில் அதன் கைப்பாவையான மஹாராஷ்டிரா தீவிரவாதத் தடுப்புப்படையும் செயல்பட்டு ஏற்கனவே தாங்கள் எழுதி வைத்திருந்த கதைக்கு தேவையான கதாபாத்திரத்திற்கு சில முஸ்லிம் இளைஞர்களை பொருத்திக் கொண்டார்கள்.*

*ஒரு கண்காணிப்பு கேமராவில் பதிவான தெளிவற்ற காட்சியொன்றை அடிப்படையாகக் கொண்டு சமத் பட்கல் என்பவர் தான் ஜெர்மன் பேக்கரியில் குண்டு வைத்தார் என்று தீவிரவாதத் தடுப்புப்படை முடிவுக்கு வந்தது. இந்த சமத் பட்கல் ஐ.பி. என்ற மத்திய உளவுத்துறையும் தீவிரவாதத்தடுப்புப் படையினரும் அடிக்கடி எல்லா இடத்திலும் தீவிரவாதி என காட்சிப் படுத்தும் யாசின் பட்கலின் சகோதரர்.*

*அவர்கள் சொன்ன கதையை உறுதிப்படுத்த ஐ.பி. என்ற மத்திய உளவுத்துறையும், மஹாராஷ்டிர தீவிரவாதத் தடுப்புப்படையும், புனேவில் உள்ள காவல் ஆராய்ச்சி மையத்தில் (சி.பி.ஆர்) எல்லா மாநிலத்தை சேர்ந்த தீவிரவாதத் தடுப்புப்படையினருடன் நடந்த தீவிரவாதம் குறித்த கலந்தாய்வு கூட்டத்தில் சமத் பட்கலின் புகைப்படத்தையும் அவர் பற்றிய விவரங்களையும் சுற்றுக்கு விட்டது. சமத் பட்கல் நாட்டில் தேடப்படும் அதிமுக்கிய தீவிரவாதி என்ற தகவலையும் அதில் தெரிவித்தது.*

*சமத் பட்கல் வழமையான 3 மாத பார்வையாளர் விசாவில் துபாய்க்கு வேலை தேடி சென்றிருந்தார். அவர் 24 மே 2010 அன்று இந்தியா திரும்பினார். அவரைதீவிரவாததடுப்பு படையினர் மங்களூர் விமான நிலையத்தில் இறங்கும் நேரத்தில் கைது செய்தனர். அவருடைய கைதுக்கு ஏகப்பட்ட விளம்பரம் கொடுக்கப்பட்டது. எந்த அளவுக்கு விளம்பரம் கொடுக்கப்பட்டது என்றால் அன்றைக்கு உள்துறை அமைச்சராக இருந்த சிதம்பரம் அவர்கள் புனே காவல் துறையையும், மகாராஷ்டிரா தீவிரவாத தடுப்பு படையினரையும் ஜெர்மன் பேக்கரி வழக்கில் முக்கிய குற்றவாளியை கைது செய்த காரணத்திற்காக பாராட்டி பேசியிருந்தார்.*

*எனினும் தீவிரவாதத் தடுப்புப் படையினரும் மத்திய உளவுத்துறையினரும் சமத் பட்கல் அவர்களின் குடும்பத்தார் ஊடகங்களின் முன்பாக போட்டு காட்டிய ஒரு காணொளி காட்சியின் காரணமாக மிகப்பெரிய சங்கடத்திற்கு உள்ளாக நேர்ந்தது. அந்த வீடியோ காட்சியில் சமத் பட்கல் ஜெர்மன் பேக்கரி குண்டுவெடிப்பு நடந்த அதேநாளில் மங்களூரில் உள்ள அவருடைய*

குடும்பத்தாரின் திருமண நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றிருந்தது பதிவாகி இருந்தது.

மத்திய உள்துறை அமைச்சருக்கும் அது ஒரு கடினமான நேரம். அவருடைய தவறுகளுக்கு விளக்கம் சொல்லும்படியும் தலைகுனிந்து நிற்கும் படியும் ஆகிப்போனது. இப்படி திருமண நிகழ்ச்சியில் கலந்துகொண்ட ஒரு காணொளி சமத் பட்கலிடம் இல்லாமல் போயிருந்தால் அவருடைய தலையெழுத்து என்றைக்கோ முத்திரையிடப்பட்டு முடிந்து போயிருக்கும்.

### சமத் பட்கலுக்கு பதிலாக ஹிமாயத் பேக்

இப்படி மிகவும் பிரபலமாக்கப்பட்ட சமத் பட்கலின் கதை ஓட்டையாகிப் போனதால் மத்திய உளவுத்துறையும் மகாராஷ்டிர தீவிரவாதத் தடுப்புப் படையினரும் முகம் காட்ட முடியவில்லை. அவர்கள் மீதான நம்பிக்கை முற்றிலும் அற்றுப்போனது. எனவே அவர்கள் தங்கள் மீதான நம்பிக்கையை மீண்டும் கொணர முயற்சித்தனர்.


எனவே அவர்கள் புதிதாக ஒரு கதையை எழுத தயாராகினர். இதில் அவர்கள் அடிக்கடி உபயோகப்படுத்தக்கூடிய பட்கலின் சகோதரர்கள் அவர்களுடைய கைகளுக்குள் இருந்தனர். சமத் பட்கல் இவர்களுடைய விஷம முடிச்சுகளை அவிழ்த்து விட்டு தப்பித்து விட்டாலும் பட்கல்களுக்கு ஒன்றும் பஞ்சம் இல்லை. எனவே, ஐ.பி. என்ற மத்திய உளவுத்துறை மற்றும் தீவிரவாத தடுப்பு படையினர் இப்போது ஒரு பட்கலை மட்டும் சம்பந்தப் படுத்தவில்லை. மாறாக 3 பட்கல்கள் யாசின், ரியாஸ், இக்பால் ஆகிய மூவரையும் அவர்களோடு சேர்த்து மொஹ்ஸீன் சவுத்ரி, பயாஸ் கக்சி, ஸபியுத்தீன் என்கிற ஸபி அன்சாரி (பின்னர் இவர் பெயர் அபூ ஜிண்டால் என ஐ.பி. என்ற மத்திய உளவுத்துறையால் பெயரிடப்பட்டது) மற்றும் ஹிமாயத் பேக் ஆகியோரையும் இணைத்துக்கொண்டது.

உண்மையில் பட்கல் சகோதரர்களையும் இந்தியன் முஜாஹிதீன் அமைப்பையும் இந்த வழக்கில் சம்மந்தப்படுத்துவது குண்டுவெடிப்பு நிகழ்ந்த அன்றைய தினமே முடிவு செய்யப்பட்டு விட்டது. தீவிரவாதத் தடுப்புப்படையினர் மற்றும் மத்திய உளவுத்துறையினரின் தூண்டுதலின் காரணமாக குண்டுவெடிப்பிற்கு அடுத்த நாள் செய்தித் தாள்களில் வெளிவந்த அறிக்கைகளில் இருந்து இந்த உண்மைகள் வெளிப்படுகின்றன.

தீவிரவாத தடுப்பு படையினர் சந்தேகப்படும் குற்றவாளிகளை கைது செய்யும் அவசரத்தில் இருந்தனர். ஆனால் ஒரே ஒருவரை தவிர்த்து பட்கல் சகோதரர்களும் மற்றவர்களும் எங்கே இருக்கிறார்கள் என்பது குறித்த தகவல்கள் அவர்களுக்கு கிடைக்கவில்லை. தீவிரவாத தடுப்பு படையினர் அவர்களை தேடுவதில் நேரத்தை செலவளிக்க தயாராக இல்லை. தயாராக கையில் கிடைத்த ஒரே ஒரு தீவிரவாதி ஹிமாயத் பேக். அவர் ஒரு ஆசிரியராக வேலை பார்த்து வந்தார். மகாராஷ்டிராவில் உள்ள மராத்வாடா பகுதியில் உத்கிர் என்ற இடத்தில் ஒரு இன்டர்நெட் கஃபே நடத்தி வந்தார்.

ஹிமாயத் பேக் இன்டர்நெட் கஃபே நடத்தியதும் அவர் மத சார்புள்ள நபராக பல்வேறு இடங்களில் நடந்த மத நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டதும் தீவிரவாதத் தடுப்புப் படையினருக்கு இந்த வழக்கில் அவரை தொடர்புப் படுத்துவதற்கு போதுமானதாக இருந்தது. எனவே, அவுரங்காபாத்தில் மே 2006 இல் மும்பை தீவிரவாதத் தடுப்புப்படையால் பதிவு செய்யப்பட்ட மிகப்பெரிய அளவிலான ஆர்.டி.எக்ஸ்., ஆயுதங்கள், வெடிப்பொருட்கள் கைப்பற்றப்பட்ட வழக்கில் (வழக்கு எல்.ஏ.சி. எண். 3/2006) சம்பந்தப்பட்ட குற்றவாளிக்கு உதவி செய்ததாகவும் அஹ்மதாபாத், சூரத், டெல்லி, ஜெய்ப்பூர், பெங்களூர், இன்னும் பிற குண்டுவெடிப்புகளுக்கு முன்பும் பின்பும் மின்னஞ்சல்கள் அனுப்ப இந்தியன் முஜாஹிதீன் அமைப்பினருக்கு உதவி செய்ததாகவும் (வழக்கு எல்.ஏ.சி. எண்.17/2008 மும்பை தீவிரவாதத் தடுப்புப் படை) காரணம் காட்டி ஜெர்மன் பேக்கரி வழக்கில் அவரை சம்பந்தப்படுத்தி அவர் கைது செய்யப்பட்டார்.

ஐ.பி. என்ற மத்திய உளவுத்துறையும் தீவிரவாதத் தடுப்புப் படையும் முன்னர் செய்த தவறுகளை மீண்டும் செய்து இந்த மதிப்புமிக்க நபரை விட்டுவிட விரும்பவில்லை. முதலில் அவர்கள் வெகுஜன ஆதரவை பெறவேண்டும். இதனை மனதில் வைத்துக் கொண்டு அவர்கள் ஊடகங்களுக்கு ஹிமாயத் பேக்–இன் தீவிரவாத நடவடிக்கைகள் குறித்த விரிவான தகவல்களை கொடுத்




தார்கள். விளைவு, உள்ளூர் மராத்தி ஆங்கில ஊடகங்களும் இந்த தகவல்களுடன் அவர்களுக்கே உரிய பாணியில் சாகசங்கள், பரபரப்பான விஷயங்கள் போன்றவற்றை கலந்து பல நாட்களுக்கு தொடர்ந்து ஹிமாயத் பேக் குறித்த தகவல்களை அவர் கைதான நாள் முதல் பரப்பி வந்தன.

மராத்தி நாளிதழ் டெய்லி சாகால் சிறப்பு அறிக்கை தொடரையே ஏப்ரல் 2011இல் வெளியிட்டது. அது ஒரு குற்றப் பத்திரிகையை வாசிப்பது போன்றே இருந்தது. ஐ.பி என்ற மத்திய உளவுத்துறைக்கும் தீவிரவாதத் தடுப்புப் படைக்கும் மெத்த மகிழ்ச்சி. ஊடகங்கள், பொதுமக்கள், அரசாங்கம், அவ்வளவு ஏன் சிறைக் காவலுக்கு ஒப்புதல் அளித்த நீதிமன்றங்கள் என அனைவரும் இவர்களின் கதையை நம்பி விட்டனர். இதன்மூலம் மக்களின் கூட்டு மனசாட்சியை கட்டி எழுப்புவதில் அவர்கள் வெற்றியடைந்து விட்டனர்.

ஆனால் ஐ.பி என்ற மத்திய உளவுத்துறையினர் மற்றும் தீவிரவாதத் தடுப்புப் படையினரின் மகிழ்ச்சி நீண்டகாலம் நீடிக்கவில்லை. மும்பை புறநகர் இரயில் குண்டுவெடிப்பு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவரைப் போலவே ஹிமாயத் பேக்–உம் தான் குண்டுவெடிப்பு நடந்த நாளில் காவல்துறையினர் கூறியுள்ள இடத்தில் இருக்கவில்லை என்றும் வேறு இடத்தில் இருந்ததாகவும் தன்னுடைய இரண்டு கைபேசிகளில் அழைப்பு விவர அறிக்கைகளை ஆய்வு செய்து ஒப்பு நோக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்.

அறிவியல் பூர்வமான மறுக்கவியலாத ஆதாரமான கைபேசி அழைப்பு அறிக்கைகள் இரண்டு சாட்சியங்களின் வாய்மொழி சாட்சியத்தின் அடிப்படையில் நிராகரிக்கப்பட்டது.

ஹிமாயத் பேக் இரண்டு கைபேசிகளை வைத்திருந்தார். ஒன்று வோடஃபோன். அதன் எண். 9637597877. மற்றொன்று டொகோமோ. அதன் எண். 8149308626. அவர் மும்பையில் 8, பிப்ரவரி, 2010 இரவில் இருந்து 11, பிப்ரவரி, 2010 வரை இருந்தார். 12 மற்றும் 13 பிப்ரவரி 2010 இல் அவர் அவ்ரங்காபாத்தில் இருந்தார். இதையே அவருடைய கைபேசி அழைப்பு அறிக்கைகளும் காட்டின.

இந்த கைபேசி அழைப்பு அறிக்கைகள் வோடஃபோன் மற்றும் டோகோமோ நிறுவனங்களின் நோடல் அதிகாரிகளின் சாட்சியத்தை கொண்டு உறுதிப்படுத்தப்பட்டன. அந்த நோடல் அதிகாரிகள் அவர்களுடைய சாட்சியத்தில் தங்களுடைய நிறுவனங்களின் அமைப்பு கணினிமயப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தங்களுடைய வாடிக்கையாளர்களின் அழைப்பு அறிக்கைகளை பெறவும் தரவும் தாங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த அறிக்கைகளை திருத்துவதோ மாற்றுவதோ இயலாத காரியம் என்றும் சாட்சியம் அளித்தனர்.

மும்பை புறநகர் இரயில் குண்டுவெடிப்பு வழக்கை போல் அல்லாமல் இந்த வழக்கில் எந்த வித தயக்கமும் இன்றி நீதிமன்றம் அந்த கைபேசி அழைப்பு அறிக்கைகளை ஏற்றுக் கொண்டது. ஆனால் அந்த கைபேசி அழைப்பு அறிக்கைகளில் குற்றம் சாட்டப்பட்டவர் இருந்ததாகக் சுட்டிக் காண்பிக்கப்பட்ட இடம் காவல்துறையினரின் கோட்பாடுகளுக்கு மாற்றமாக இருந்தது.

ஏற்கனவே அவர்கள் பொதுமக்கள் மத்தியில் பரப்பி வைத்திருந்த கதையின்படியும்


vaigarai velicham official

நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கைது அறிக்கைகளின் படியும் குற்றம் சாட்டப்பட்டவர் 8 முதல் 11 பிப்ரவரி 2010 வரை உதாகீர் என்ற இடத்தில் இருந்தார். சதித்திட்டம் தீட்டிக் கொண்டிருந்தார். வெடிகுண்டுகளை உருவாக்கிக் கொண்டிருந்தார். 13 பிப்ரவரி 2010 இல் புனேவில் யாசின் பட்கல் குண்டுவெடிப்புகளை நிகழ்த்த உதவிக் கொண்டிருந்தார்.

தீவிரவாதத் தடுப்புப்படையினர் இப்போது குழப்பத்தில் ஆழ்ந்துவிட்டனர். அவர்களால் அவர்கள் சொன்ன கதையை மாற்றவும் முடியாது, கைபேசி அழைப்பு அறிக்கைகளை மறுக்கவும் முடியாது. ஆனால் மஹாராஷ்டிர தீவிரவாதத் தடுப்புப் படையினர் அவ்வளவு எளிதாக விட்டுக் கொடுப்பதாக இல்லை.

அவர்களுக்கு இருந்த ஐ.பி என்ற மத்திய உளவுத்துறையினரின் உதவியோடும் பிராமணிஸ்டு சக்திகளின் உதவியோடும் இந்த குழப்பமான சூழ்நிலையை விட்டு தப்பி வெளிவர அவர்கள் விரும்பிய எதையும் அவர்களால் செய்ய முடிந்தது. அவர்கள் இரண்டு சாட்சியங்களை கண்டெடுத்தார்கள்.

முஹம்மது அன்சாரி (ப்பி.டபிள்யூ97) மற்றும் ஷகீல் அஹ்மத் லெய்க் (ப்பி.டபிள்யூ.95) ஆகிய இரண்டு சாட்சிகள். முஹம்மது அன்சாரி என்பவர் பீட் என்ற இடத்தை சேர்ந்தவர். அது குற்றம் சாட்டப்பட்டவரின் சொந்த ஊர். ஆனால் அன்சாரி மும்பையில் வசித்து வந்தார். அவருக்கு குற்றம் சாட்டப்பட்டவரை நன்கு தெரியும்.

அவர் தன் சாட்சியத்தில் குற்றம் சாட்டப் பட்டவர் 8 பிப்ரவரி 2010 அன்று தன்னை ஹோட்டல் குல்ஷன் இரானிக்கு அழைத்து அவருடைய இரண்டு கைபேசிகளையும் தந்துதான் சிலரிடம் கடன் பெற்றுள்ளதாகவும் அவர்கள் தனக்கு தொந்தரவு கொடுப்பதாகவும் எனவே இரண்டு நாட்களுக்கு தன்னுடைய கைபேசிகளை உங்களிடம் (சாட்சியிடம்) வைத்துக் கொள்ளுங்கள் நான் இரண்டு நாட்களுக்கு பிறகு வந்து பெற்றுக் கொள்கிறேன் என்று கூறியதாகவும் தெரிவித்தார்.

மேலும் அந்த கைபேசிகளை அணைத்து விடாமல் (ஆஃப் செய்து விடமால்) தொடர்ந்து செயல்பாட்டிலேயே வைத் திருக்கும்படியும் யாராவது அழைத்தால் அழைத்தவர்களிடம் ஹிமாயத் பேக் வெளியில் சென்றுள்ளார் என்று கூறும்படியும் சொன்னதாக சாட்சியம் கூறினார். அதன்படியே தானும் நடந்து கொண்டதாக சாட்சியம் கூறினார்.

அதன்பிறகு 11 பிப்ரவரி 2010 அன்று இரவு குற்றம் சாட்டப் பட்டவர் சாட்சியின் அறைக்கு சென்று அவருடைய கைபேசிகளை பெற்றுக் கொண்டார். பின்னர் தான் அவுரங்காபாத்திற்கு ஒரு தனியார் சொகுசு பேருந்தில் செல்ல இருப்பதாகவும் கூறினார்.

சாட்சி அவருடன் பேருந்து நிலையம் வரை சென்றார். அவரை அங்கே பார்த்தார். குற்றம் சாட்டப்பட்டவர் 12 பிப்ரவரி 2010 அன்று அவுரங்காபாத்தை அடைந்தார்.

மற்றொரு சாட்சியான ஷகீல் அஹ்மத் லெய்க் அவுரங்காபாத்தை சேர்ந்தவர். 2007 ஜூன், ஜூலை மாதங்களில் நடந்த மத போதனை கூட்டங்களில் அவர் குற்றம் சாட்டப்பட்டவருடன் அறிமுகமாகி இருந்தார். அப்போதிலிருந்து அவருடன் தொடர்பில் இருந்தார்.

இவர் தன்னுடைய சாட்சியத்தில், 12 பிப்ரவரி 2010 அன்று குற்றம் சாட்டப்பட்டவர் அவுரங்காபாத்தில் அவரை சந்தித்தார் என்றும் தன்னுடைய இரண்டு கைபேசிகளையும் அவரிடம் கொடுத்து முதல் சாட்சி இடம் சொன்ன அதே காரணங்கள் அதே குறிப்புகளை இவரிடமும் சொல்லி தன்னுடைய கைபேசிகளை அவருடன் வைத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார் என்றும் அதன் பின்னர் 13 பிப்ரவரி 2010 அன்று இரவு பத்து முதல் பத்தரை மணிக்குள்ளாக சாட்சி இடம் சென்று தன்னுடைய கைப்பேசிகளை திரும்பப் பெற்றுக் கொண்டார் என்றும் கூறி இருந்தார்.


இந்த இரண்டு சாட்சியங்களும் சொல்லியிருப்பதன்படி குற்றம் சாட்டப்பட்டவரின் நடவடிக்கையானது வினோதமாக உள்ளது. அது எந்த தர்க்கரீதியான அனுமானங்களுடனும் ஒத்துப்போகவில்லை. ஒருவன் தன்னுடைய கடன்காரர்களிடமிருந்து தப்பிக்க வேண்டுமானால் மிகச்சுலபமாக அவனுடைய கைபேசிகளை அணைத்து வைத்துவிட்டாலே போதுமானது. அவன் அமைதியாக இருக்கலாம். எதற்காக அவன் தன் கைப்பேசிகளை மற்றவர்களிடம் கொடுக்க வேண்டும்.

– அடுத்த இதழில்..

# "ஆஸ்டிம்" குழந்தைகள்



டாக்டர் டெம்பிள் கிரேண்டியன்




*** மூளை வளர்ச்சி அற்றதுபோல் தோன்றும் குழந்தைகள் - அபார ஆற்றல் உள்ளவர்களாக இருக்கலாம்.**

*** குழந்தை ஆஸ்டிம் குழந்தை எனத் தெரிந்தால் அடுத்து...**

**- டாக்டர் டெம்பிள் கிரேண்டியன்**

அல்லாஹ்வின் அழகிய படைப்பு மனிதன். அதே நேரத்தில் பலஹீனமான படைப்பும் கூட எனினும் அவன் தன் பலத்தைக் கொண்டு வெல்லும் சுதந்திரத்தையும் இறைவன் அவனுக்கு வழங்கியுள்ளான். இஃது இறைவனின் அருட் கொடை. மனிதனுக்குள் பல திறமைகள் மண்டிக் கிடக்கின்றன. அவற்றை அகழ்ந்து வெளியே கொண்டு வந்தால் அவன் வானத்தை வில்லாக வளைத்திடும் திறமைகளை வெளிப்படுத்துவான்.

இன்றைய நாள்களில் வாழ்க்கை என்பதே ஒரு வேகம் மிகுந்த போட்டி. இந்த வாழ்க்கைப் போட்டியில் தகுதியும் திறமையுமே வெல்லும். இவை இல்லாதவர்கள் பின்னுக்குத் தள்ளப்படு வார்கள். சில நேரங்களில் சிலர் வாழ்க்கைப் போட்டியில் கலந்துகொள்ளவே இயலாத அளவுக்கு பின்னுக்குத் தள்ளப்பட்டு விடுவார்கள்.

இந்த வாழ்க்கைப் போட்டியில் கலந்து கொள்ளவும், வெல்லவும் குழந்தைப் பருவத்தே குழந்தைகளைத் தயார் செய்திட விரும்பு கின்றார்கள் பெற்றோர்கள். பெற்றோர்களின் பெரிய எதிர் பார்ப்புகள் சிறார்களின் சின்ன தகு திகள் இவற்றினிடையே அகண்ட இடைவெளி. இடைவெளி பெற்றோர்களுக்குத் தலைவலி. தங்கள் மழலைப்பரு வத்தே வதைகள்! வாட்டங்கள்! தேவையற்ற அழுத்தங்கள் அந்த மலர்களுக்கு! குழந்தைகள் போன்றவர்கள்.

ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகை! அதில் ஒரு வகையினர்தாம் "ஆஸ்டிம்" குழந்தைகள். ஆஸ்டிம் என்ற சொல்லுக்கு சரியான தமிழ்ச் சொல் இல்லை. இதனால் இந்த வகை குழந்தைகளை நாம் அவர்களின் குணங்களைக் கொண்டே அறிந்திட இயலும்.

**ஆஸ்டிம் குணங்களில் சில:**

அசாதாரணமான ஆற்றல்கள். சில நேரங்களில், வீட்டைப் பிடுங்கி வாசலில் வைத்திடும் சுட்டித்தனம்.

தனக்குப் பிடித்தவற்றைச் செய்து கொண்டே இருப்பது, இல்லையேல் உலகில், யாரோடும் ஒட்டாமல் இருப்பது - எதைப் பற்றியும் கவலைப் படாமல் இருப்பது! இயல்பான வளர்ச்சியும் இல்லாததைப் முதிர்ச்சியும் போல் இருப்பார்கள்.

அசாதாரணமான ஆற்றல் என்றால் அனை வரையும் திகைக்க வைக்கும் ஆற்றல். எடுத்துக் காட்டாக 2010 ஆகஸ்ட் மாதம் 4 ஆம் தேதி என்ன 'நாள்'? 'ஞாயிறா, திங்களா?' என்று சொல்லிடும் ஆற்றல். இப்படி ஒரு குழந்தைக்கு ஆற்றல் இருந்தால் நாம் அதுகண்டு அதிர்ந்துதானே போவோம். எடுத்துக்காட்டாக டாக்டர் டெம்பிள் கிரேண்டியன் என்றொரு பெண் டாக்டர். மழலைப் பருவத்தில், பயங்கரமான சுட்டித் தனம். சில காலங்கள் கழித்து, ஒரே மௌனம். யார் வந்தாலும் கண்டு கொள்வ தில்லை. அவள் தன் உலகில் - அதாவது கற்பனை உலகில் சஞ்சரித்துக் கொண்டிருப்பாள். அந்தக் கற்பனை உலகில் சிரித்திட வேண்டியது வந்தால் சிரிப்பாள். அந்தக் கற்பனை உலகில் பாடிட வேண்டியது வந்தால் பாடிடுவாள்.

வேகமாக ஓடிச்சென்று எதிரியைத் தாக்குவது போல் தன் கற்பனை உலகில் கண்டால் ஓடிப்போய் தாக்குவாள். ஆமாம்!

அப்போது வீட்டில் சில பாத்திரம் பண்டங்கள் உடைந்து போகும். சில கண்ணாடிகள் தூள்! தூள்!! இதனை அவள் வீட்டில்தான் செய்வாள் என்றில்லை, மாறாக அவள் எங்கே இருக்கின் றாளோ அங்கே செய்வாள். அது சில நேரங்களில்



vaigarai velicham official

உறவினர் வீடாக இருக்கலாம். அல்லது நாம் குடும்பத்தோடு உண்ணச் செல்லும் ஹோட்டலாக இருக்கலாம். நாம் இதுவரை அவளை அழைத்துச் செல்லாத நண்பர்களின் வீடு களாக இருக்கலாம். அவள் தன் உலகில் கற்பனை உலகில் செயல்பட்டுக் கொண்டிருக்கும்போது அவள் எங்கே இருக்கின்றாள் என்பதைப் பற்றி அவள் கவலைப்படுவதில்லை. அவளுடைய பெற்றோர்கள் எல்லா இடங்களிலும் இருக்கின்றன.

இந்தப் பள்ளிக் கூடங்களில் நீங்கள் இவர் களைச் சேர்த்துவிட்டால். அவர்கள் இவர்களின் திறமைகளுக்கு வடிகால்களை அமைத்துத் தருகின்றார்கள். இவர்களது திறமைகளை வளர்க்கின்றார்கள். அவர்களின் அபார ஆற்றலைக் கொண்டு அனைவரும் பயன்படும்படிச் செய்து விடுகின்றார்கள். இந்த வழிகாட்டுதலின்கீழ். டாக்டர் டெம்பிள் கிராடினின் ஆற்றல் வடிவமைக்கப்பட்டது.

அவளை (Animal Husbandry) விலங்குகளை வளர்க்கும் துறையில் கல்வி பயிலச் செய்தார்கள். அவள் அதில் டாக்டர் பட்டம் பெற்றாள். அத்தோடு, பெரிய பண்ணைகளில் மாடுகளையும் இதர மிருகங்களையும் பராமரிக்கப் பயன்படும் பல இயந்திரங்களையும் கண்டுபிடித்தாள். குறிப்பாக மிருகங்களுக்கு இதமாகத் தடவிவிடும் கருவியொன்றை அவள் கண்டுபிடித்து உலகப் பிரபல்யம் பெற்றாள்.

அதேபோல் தான் "மாஸ்டர் டிட்டோ!" 'டிட்டோ' என்பது அவனது செல்லப்பெயர். அவனது இயற்பெயர் இராஜசிரீமுக்கோபாடியாய்யா.

“டிட்டோ” ஒரு வெருட்சிக் குழந்தை. அவன் யாருடைய முகத்திலும் விழிக்கமாட்டான். அடுத்தவர்களின் முகத்துக்கு நேரே விழிப்ப தென்றால் அவனுக்கு 'அலர்ஜி' ஒவ்வாமை. அவன் மழலைப் பருவத்தில் வாய்திறந்து பேசிட வில்லை. மலைத்துப் போனார்கள் பெற்றோர்கள். மருத்துவமனைகளை நோக்கிப் பயணமானார்கள்.

அவன் 'ஆஸ்டிம் குழந்தை' என்றார்கள் மருத்துவர்கள். 'ஆஸ்டிம்' குழந்தை என்றால் இனி அடுத்த பணி, அவனது திறமைகள் என்ன அவனது அபார ஆற்றல்கள் என்ன என்பதைக் கண்டுபிடிப்பதுதான்.

அவனது தாய் அவனிடம் இலக்கிய ஆற்றல் இருப்பதைக் கண்டாள். அவனை சிறந்த எழுத் தாளனாக மிளிரச் செய்ய முடியும். என்பதையும் கண்டறிந்தாள். ஒரு நிறுவனத்தின் வேலையை ஒரு தாய் செய்தாள்; சாதித்தாள். மகனின் திறமைகளை வெளியே கொண்டுவந்திட அவனது அபார ஆற்றல்களை முறைப்படுத்திட தாய் மேற்கொண்ட முயற்சிகள் வீண்போகவில்லை. அவன் தனது எட்டாவது வயதில் தனது முதல் புத்தகத்தை எழுதினான். அதன் பெயர் 'Mind Tree' ‘மனம் ஒரு மரம்’. தொடர்ந்து இன்னொரு நூலை எழுதினான். அதன் பெயர் 'Beyond Silence" மௌனத்திற்கு அப்பால். அதன்பின் அவன் தன் வாழ்க்கை வரலாற்றையே எழுதி "மௌனத்தின் குரல்" "Voice of Silence" எனப் பெயரும் வைத்தான்.

இவனது எழுச்சிமிக்க எழுத்தாற்றலைக் கண்ட லண்டன் வானொலி "BBC' British Broadcasting Corparation அவனைப் பற்றியும் அவனை உருவாக்குவதில் அவனது தாயின் முயற்சிகளைப் பற்றியும் ஒரு ஆவணப்படம் தயார் செய்தது. அதற்கு "Inside Story" "அந்தரங்கக் கதை" எனப் பெயரிட்டது. லண்டனிலுள்ள ஆஸ்டிம் சங்கம் (Austim Societry) அவர்களை லண்டனுக்கு அழைத்து கௌரவித்தது.

இப்படி வாழ்வின் தொடக்கத்தில் தன் மகனைப் பற்றிய தீராத கவலையில் ஆழ்ந்திருந்த தாய் அவனது திறமையை அகழ்ந்தெடுத்து சாதனையாளனாய் மாற்றினாள். அவனைச் சான்றோனாக மாற்றி ஈன்ற பொழுதினும் பெரிது வந்தாள்.

சமுதாய அரங்கில் ஏழை பாளைகள் இதுபோன்ற குழந்தைகளை பராமரிக்க வகை தெரியாமல் வீட்டை விட்டு வெளியேற்றி விடுகின் றார்கள். இன்னும் சிலர் இந்த அபார ஆற்றலைக் கையெடுத்துக் கும்பிட்டு கடவுளாக்கி விடுகின் றார்கள். இதனால் இந்த அசாதாரண குழந்தை களின் ஆற்றல்களும் வாழ்வும் குப்பை மேடுகளில் தொலைந்து போகின்றது. பெருமானார் (ஸல்) அவர்கள் சொன்னார்கள், "ஒவ்வொரு மனிதனும் ஒரு சுரங்கம் போன்றவர்" இதன்பொருள் அவனிடம் அதிசய சக்திகள் பல அமிழ்ந்து கிடக்கின்றன. அவற்றை அகழ்ந்து வெளியே கொண்டு வந்தால் அவர்கள் சாதனையாளர்களாக மாறுவார்கள் என்பதே!

ஆஸ்டிம் குழந்தைகள் பற்றி இன்னும் நாம் அதிகமாக அறிந்திட வேண்டியதுண்டு. அவற்றை அடுத்த இதழில் காண்போம், இன்ஷாஅல்லாஹ்.

- MGM

**Source: We Libialus of Academy For Sevee Handicaps And Austim**

தகவல் ஆஸ்டிம் சாதனையாளர் டாக்டர் ஷோபா



# இப்படியான ஆட்சியே இந்தியாவில் மலர வேண்டும்!!!

**பஹ்லூல் ? யார் இவர்?**

இவர் அப்பாஸிய ஆட்சியில் வாழ்ந்த பஹ்லூல் அல்ல .இவர் இந்தியாவை ஆண்ட நீதமான முஸ்லிம் மன்னர் பஹ்லூல். முதலில் லாஹுரை ஆண்டு, பிறகு ஹிஜ்ரி 855-இல் டில்லியின் அதிகாரத்தை கைப்பற்றினார்.

அவரது நீதமான ஆட்சிக்கு நல்லதொரு உதாரணம், அவரது காலத்தில் ஒரு இந்து மதத்தை சேர்ந்த பெண்மணி காவல்துறை அதிகாரியின் வீட்டை கடந்து சென்று கொண்டிருந்த போது அவள் கடுமையான பசியில் இருந்ததால் வீட்டின் முன்பு இருந்த தோட்டத்தில் உள்ள தானியங் களை சாப்பிட்டாள் . இதனை பார்த்த வீட்டின் காவலாளி அந்த பெண்ணை பிடித்து வீட்டின் உரிமையாளரான காவல் துறை அதிகாரியிடம் ஒப்படைத்து விட்டார். அவர் உண்மை நிலையை விசாரிக்காமல் அவளை தனது வீட்டில் கயிற்றால் கட்டி அடைத்து விட்டார்.

நடந்த நிகழ்வை அறிந்த உடனே சுல்தான் பஹ்லூல் அவர்கள் அந்த தலைமை காவல் துறை அதிகாரியை அரண்மனையின் மைதானத்திற்கு வரவழைத்து அவர் அந்த பெண்ணை இழிவுப் படுத்தி விட்டதற்கு பகரமாக அவரையும் இழிவு படுத்துவதற்காக அவரை மரத்தில் கட்டுமாறு ஆணையிட்டார். அவரது வீட்டில் கட்டிவைத்த பெண்ணை வரவழைத்து அவள் இழந்த கண்ணி யத்தை மீட்டு கொடுத்து அவள் பசியோடு இருந்த காரணத்தால் மட்டுமே அவள் சாப்பிட்டாள் என்பதையும் தெரியப்படுத்தினார்.

பிறகு அந்த பெண்ணை காவல் துறை அதிகாரிக்கு முன்பு நிற்கவைத்து காவல் துறை அதிகாரியிடம் கூறினார்:

“வணக்கத்திற்குரிய ஏக இறைவனாகிய அல்லாஹ்வின் சத்தியமாக எனது ஆட்சியில் எந்தவொரு பெண்ணும் இழிவுப்படுத்தபட கூடாது.எனது ஆட்சியில் ஒருவர் பசியோடு இருக்கும் நிலையில் நானும் அரசு அதிகாரிகளும் நல்ல உணவை சாப்பிடுவது ஆகுமானதல்ல.”

என்று கூறிய பிறகு, “நமது ஆட்சியில் வாழும் எல்லா ஏழைகளுக்கும் போதுமான பொருளாதார உதவியும் உடைகளும் வழங்குவதற்காகவும் ஒவ்வொரு நகரத்திலும் ஏழைகளது எல்லா தேவைகளையும் நிறைவேற்றுவதற்காகவும் அலுவலகங்களை நிறுவுமாறு ஆணையிட்டார். அந்த அலுவலகங்களுக்கு “ஏழைகளின் உரிமை” என்று பெயரிடுமாறும் ஆணை பிறப்பித்தார்.

பிறகு பாதிக்கப்பட்ட அந்த பெண்ணிடம் ‘உனக்கு என்ன தேவை என்று கேட்டார்?

“நீங்கள் பிறப்பித்த ஆணைகளுக்கு பிறகு எனக்கு ஒரு தேவையும் இல்லை மன்னரே! ஆனால் ஒரு கேள்வி நீங்கள் இவற்றை அனைத்தும் செய்ததற்கான காரணம் உங்களது மதம் இவ்வாறு செய்யுமாறு கட்டளையிட்ட தனாலா அல்லது அரசியல் லாபத்திற்கா ?

சுல்தான் கூறினார்: இல்லை இது எனது மார்க்கம் போதித்தவை. எனது இறைவனின் கட்டளை.

“இப்படியான மார்க்கத்தை தவிர்ப்பவன் நிச்சயம் நஷ்டவாளியே!”

**உங்களது மார்க்கத்தில் எவ்வாறு ஏற்பது என்று கேட்டாள். உடனே சுல்தான் பஹ்லூல் இஸ்லாத்தை எடுத்துரைத்தார். திருக் கலிமாவை சுல்தான் கூற அதனை மீண்டும் அந்த பெண் கூறி இஸ்லாத்தை ஏற்றார்.**

**மூலம்: தாரிகுள் இஸ்லாம் ஃபில் ஹிந்த்**
**தமிழில்: மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி**


vaigarai velicham official

# 46வது சென்னை புத்தகக் கண்காட்சி
## 2023 ஜனவரி 6 முதல் 22 வரை
## சர்வதேச புத்தகக் கண்காட்சி - ஜனவரி 16,17,18 / 2023

நாம் முதல் புத்தகக் கண்காட்சி முதற்கொண்டே இதில் பங்கெடுத்து வருகின்றோம். அப்போது ஹிந்துஸ்தான் பப்ளிகேஷன், இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கத்தின் சார்பில் இயங்கிய வெளியீட்டு நிறுவனம். பின்னர் இலக்கியச்சோலை - இப்போது (வேர்கள் பதிப்பகம்) இவை அனைத்தும், இஸ்லாமிய இலக்கியங்களை வாசிப்பு உலகிற்கு அறிமுகப்படுத்தியது.

Publishers and Book Sellers Association / South India என்ற Pabas தென்னிந்திய புத்தக வெளியீட்டாளர்கள் மற்றும் புத்தக விற்பனையாளர்கள் குழுமம்தான் இதனை நடத்தி வருகின்றது. நாளொரு வண்ணமாக இஃது வளர்ந்து வருகின்றது.



சட்ட மன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி (வி.சி.க) அவர்களுக்கு பிராமிணிஸ்டுகள் குண்டு வைத்தார்கள், முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் என்ற நூலை தாருல் இஸ்லாம் சார்பாக சகோதரர் இக்பால் வழங்கியதுபோது, உடன் எஸ்.எஸ்.பாலாஜி அவருடைய துணைவியார் சமூக நீதிப் போராளி டாக்டர் சர்மிளா உடன் இருக்கிறார்.

தொடக்கத்தில் வெறும் 20/30 ஆக்கங்களைக் கொண்டே தொடங்கப் பெற்றது. 46வது ஆண்டில் 100 புத்தக அரங்கங்கள் இடம் பெற்றன. என்னே ஒரு மகோன்னத வளர்ச்சி.

இந்த வருடம் இன்னொரு புதுமை. அது மூன்று நாட்கள் International Book Fair. சர்வதேச புத்தகக் கண்காட்சி இடம்பெற்றது. இந்த சர்வதேச புத்தகக் கண்காட்சி

1) சாஜிதா புக் சென்டர்,

2) இஸ்லாமிய அறக்கட்டளை ஜமாஅத்தே இஸ்லாமி (IFT)

3) யூனிவேர்சல் பப்ளிஷர்ஸ்

4) நேஷனல் பப்ளிஷர்ஸ்

5) புர்கான் பப்ளிஷர்ஸ்

6) அடையாளம்

7) இலக்கியச்சோலை

8) பஷாரத்

9) சீர்மை


10) ரஹ்மத் அறக்கட்டளை

11) மக்கள் உரிமை (தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம்)

வேர்கள் பதிப்பகத்தின் நூல்கள் இவற்றில், நான்கு அரங்கில் இடம்பெற்றன. இல்லாமல், இதர 14 அரங்கங்களில் இடம்பெற்றன. அல்ஹம்துலில்லாஹ்

**நமது நூல்களில்**

பொதுசிவில் சட்டம், முழு வரலாற்றுப் பின்னணி, எது முதலில்?, முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்தது என்ன?, “பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள், முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்” “இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு”, “இஸ்லாம் உங்கள் பார்வைக்கு” “இஸ்லாமிய நகாரிகம்” என்ற நூல், அம்பேத்கர் மதமாற்றம் பின்னணி என்ன?, செந்தமிழ் நாட்டுச் சேரிகள், தாலிபான்கள் பிடியில், ஆப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு, நாடாளுமன்றத் தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள், 26/11 நீதித்துறையும் மயங்கியது




பிரபல பேச்சாளர் பழ. கருப்பையா அவர்களுக்கு அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன? என்ற நூலை தாருல் இஸ்லாம் சார்பாக மல்லிப்பட்டணம் பீர் முகம்மது வழங்கியபோது.

ஏன்?, எங்கே சமத்துவம் - இங்கே கிடைக்கும் வாரீர் முதலான நூல்கள் அதிக விற்பனையைக் கண்டன. நமது விற்பனையிலுள்ள நாடார் வரலாறு கறுப்பா? காவியா? என்ற நூலும் அதிகமாக விற்றது. அல்ஹம்துலில்லாஹ்

"பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள், முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் என்ற நூல் மிகவும் அதிகமான விற்பனையைக் கண்டது. இதுபோன்ற இலக்கியங்களின் தேட்டம் வாசகர்கள் வெளியீட்டாளர்கள், விற்பனை யாளர்கள் இவர்களிடம் அதிகமாக இருப்பதை காண முடிந்தது. புத்தகக் கண்காட்சியில் எதிர் பட்ட முக்கிய எழுத்தாளர்கள், பேச்சாளர்கள், சிந்தனையாளர்கள் இவர்களிடமும் இந்நூல் வழங்கப்பெற்றது.

**திருப்பூர்**

திருப்பூரில் நடந்த புத்தகக் கண்காட்சியிலும் வேர்கள் பதிப்பகத்தின் நூல்கள் இடம்பெற்றன.

குறிப்பாக, பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள், முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் என்ற நூல் அங்கேயும் அதிகமான மக்களிடம் சென்று சேர்ந்தது. (அல்ஹம்து லில்லாஹ்)



திசைகள் பதிப்பகத்தின் முதல்வருக்கு தாருல் இஸ்லாம் சார்பில் பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள், முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் நூலை வழங்கியபோது




ஜீவா டுடே ட்யூபர் ஜீவாவுக்கு தாருல் இஸ்லாம் சார்பில் பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள், முஸ்லிம்கள் தூக்கி லிடப்பட்டார்கள் நூலை வழங்கியபோது

**பேச்சாளர் பழ.கருப்பையாவுக்கு**

எழுத்தாளர் செ.திவான் அவர்களின் நூல்கள் அரசுடைமையாக்கப்பட்டுள்ளளது. அவர் 200க்கும் மேற்பட்ட அரிய ஆய்வு நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் பெரும்பாலானவை, பாசிஸ்ட்டுகளின் வரலாற்றுப் புரட்டுக்கு பதிலாக வந்தவை. இது அவருக்குக் கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரம். (அல்ஹம்துலில்லாஹ்)

இன்ஷாஅல்லாஹ், அவர் தொடர்ந்து எழுதிட அல்லாஹ் அருள்புரிவான். **- MGM**


vaigarai velicham official




தாவூத் மியான்கான் வரவேற்புரை வழங்கியபோது

# அரசியல், பொது வாழ்வில் நேர்மைக்கான கண்ணியமிகு காயிதே மில்லத் விருது–2022

வருடந்தோறும் இந்த விருது வழங்கப்படுகின்றது. அகில இந்திய அளவில், பொதுவாழ்வில் நேர்மையாக வாழ்ந்திடுவோருக்கு வழங்கப்படும் விருது இது.

இந்த விருது காயிதேமில்லத் கல்வி மற்றும் சமுதாய அறக்கட்டளையால் வழங்கப்படுகின்றது. ரூபாய் ஐந்து லட்சம் பணமும், விருது சான்றிதழும் இந்த விருதில் உண்டு.

இந்தப் பெருமைமிகும் சீரிய பணியை முஸ்லிம் சமுதாயத்தின் கண்ணியமிகு காயிதே மில்லத் அவர்களின் பேரன், சமூக ஆர்வலர் தாவூத் மியாகான் அவர்கள்தாம் வழங்கி வருகின்றார்கள்.

இதில் இவர்கள் தேர்வு செய்வது அனைவருமே தலை சிறந்த போராளிகளாவே இருந்து வருகின்றார்கள்.

இந்த விருது அதிகமாக இன்றைய ஒன்றிய அரசின் பிரதமர் முதல் அடித்தட்டு மக்கள் அதிசயிக்கதக்க வகையல் நடந்த 2015ஆம் ஆண்டு வீரமங்கை டீஸ்டா செட்டல்வாட் அவர்களுக்கு வழங்கிய விருது.

குஜராத் 2022ஆம் ஆண்டில் நடந்த முஸ்லிம் இனப்படுகொலைகளுக்குக் காரணம் மோடியும் இன்னும் 62 பேருந்தான் என வழக்குத் தொடர்ந்து வழக்காடிக் கொண்டிருந்த நேரம்.

வழக்கம்போல நமது பிரதமர் வகையினூடே பல்வேறு ஊழல் குற்றச் சாட்டுகள் டீஸ்டா மீது புனைந்து கைது செய்திட காவல்துறையை ஏவிய நேரத்தில்தாம், அவருடைய நேர்மையும், வீரத்தையும் பாராட்டி விருது வழங்கினார் கண்ணியமிகு காயிதே மில்லத்-இன் பேரர் தாவூத் மியாக்கான்.

அன்றிலிருந்து ஆட்சியாளர்கள், அதிகார வர்க்கம் இவர்களெல்லாம் கூர்ந்து கவனிக்கும் விருதாக இந்த விருது உலகப் பிரபல்யத்தைப் பெற்றது.

**இந்த வருடம்**

இந்த விருது, காலாகாலமாக சமூக நீதிக்காகப் போராடிடும், திராவிடர் கழகத் தலைவர், அய்யா கி.வீரமணி அவர்களுக்கும், ஆங்கில இணைய தளம் பத்திரிகை வழி நம் நாட்டைக் கவ்விக் கொண்டிருக்கும், பாசிசத்திற்கெதிராக தொடர்ந்து போராடிவரும் Wire பத்திரிகையின் ஆசிரியர் சித்தார்த் வரதராசன் அவர்களுக்கும் வழங்கப் பட்டது.

விழாவில் சிறப்பு விருந்தினராக பாசிசத்தை எதிர்த்துப் போராடிவரும் ஹர்ஷ் மந்தர் IAS அவர்கள் கலந்துகொண்டார்கள்.

இவர், குஜராத் மாநிலத்தில், ஆட்சிப் பணியில் IAS இருந்தவர். கலவரத்தில் நடந்த குரூரங்களைத் தடுக்க முயன்றார். அவரை அரசு தடுத்தது. அதனால், தன் ஆட்சிப் பணியை தூக்கி வீசிவிட்டு வந்தவர். இவர் பரிசுபெற்றவர்களைப் பாராட்டினார். அதேபோல் முன்னாள் மேற்கு வங்க அரசு ஆட்சிப் பணியிலிருந்த பாலச்சந்திரன் IAS அவர்களும் முன்னாள் நீதிபதி - மற்றொரு



சமூக நீதிப் போராளி ஹரிபரந்தாமன் அவர்களும் வாழ்த்து வழங்கினார்கள்.

**ஹர்ஷ் மந்தர்**

ஹர்ஷ் மந்தர் அவர்களைச் சந்தித்து உறவாடும் வாய்ப்புக் கிடைத்தது. ஹர்ஷ் மந்தர் அவர்களின் பொது சேவைகளை வைகறை வெளிச்சம் வாசகர்களுக்கு நிரம்பவே சொல்லி இருக்கின்றோம்.

குறிப்பாக டெல்லிக் கலவரம் 2020இல் அவர் இரவெல்லாம் விழித்து வெட்டிக் கொலை செய்யப்பட்டுக் கொண்டிருந்த முஸ்லிம்களைக் காப்பாற்றிட தன்னால் ஆனதையெல்லாம் செய்து கொண்டிருந்தார்.

ஓர் இரவில் வெட்டப்பட்டு குற்றுயிரும் குலையுருமாய்க் கிடந்த முஸ்லிம்களை ஓர் ஆம்பூலன்ஸில் ஏற்றி மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று கொண்டிருந்தார்.

இடைமறித்தார்கள் காவலர்கள், கேட்டபோது வாகன சோதனை என்றார்கள். எப்படியோ, மருத்துவமனைக்குச் சென்றுவிட்டார். இந்தக் காலத்தாமதத்தால் ஒருவர் இறந்துவிட்டார். மீதம் 21 பேரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உயிர் பிழைத்தார்கள்.

வாகன சோதனை என்ற பெயரில் அந்த ஆம்புலன்ஸ்-ஐ காவல்துறையினர் வழிமறிக்காமலிருந்தால் அவரும் உயிர் பிழைத்திருப்பார்.

இந்த வாகன சோதனைகளை தந்திரமாகவே செய்தார்கள் காவல்துறையினர். காயம்பட்டு வருபவர்கள் முஸ்லிம்கள் எனத் தெரிந்தால் இப்படி மருத்துவமனைகளுக்குச் செல்லும் ஆம்புலன்ஸ்களைக் காலதாமதப்படுத்துவார்கள்.

இதனை டெல்லி உயர்நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்றார். காயமுற்றவர்களை எடுத்துச் செல்லும் ஆம்புலஸ்களைக் காலதாமதப்படுத்திடக் கூடாது என ஆணையொன்றை நீதிபதி பிறப்பித்தார்.

இப்படியொரு ஆணையைப் பிறப்பித்தார் என்பதற்காகவே, டெல்லி உயர்நீதிமன்ற நீதிபதி முரளிதர் தடாலடியாக இடம் மாற்றம் செய்யப்பட்டார்.

இப்படி காயமடைந்த முஸ்லிம்களுக்கு நிவாரணங்களை வழங்கிக் கொண்டிருந்த ஹர்ஷ் மந்தர் அவர்கள் மீது டெல்லி கலவர வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தார்கள்.



சமூகநீதிப் போராளி ஹர்ஷ் மந்தருடன் வைகறை வெளிச்சம் ஆசிரியர்




பத்திரிகையாளர் சித்தார்த் வரதராஜன் அவர்களுடன் வைகறை வெளிச்சம் ஆசிரியர், துணை ஆசிரியர் இல்யாஸ் ரியாஜி, மௌலானா அபுதாஹீர் சிராஜ், சென்னை மாவட்ட ஜமாஅத்துல் உலமா தலைவர்



திராவிட இயக்கத் தலைவர் வீரமணி அவர்ளுடன் வைகறை வெளிச்சம் ஆசிரியர்

31-01-2023 அன்று காயிதேமில்லத் விருது வழங்கும் விழாவில், இதுபற்றி அவரிடம் விசாரித்தோம். அதற்கு இப்படிப் பதில் சென்னார்கள்

**வைகறை ஆசிரியர் –** டெல்லி கலவர வழக்கிலிருந்து உங்களை விடுவித்துக் கொண்டீர்களா?

**ஹர்ஷ் மந்தர் –** என்னை கலவரத்தை நிகழ்த்திட சதி செய்தார் என 'Conspiracy' வழக்கில் சேர்த்துள்ளார்கள்.

**கேள்வி -** நீங்கள் பிணை எடுத்திருக் கின்றீர்களா?

**பதில்-** இல்லை, நான் பிணை கேட்கவுமில்லை, எடுக்கவுமில்லை. தேவையானால் அவர்கள் கைது செய்து கொள்ளட்டும்.

இத்துணை நெஞ்சுரத்தோடு, பாசிசத்தை எதிர்த்திட வேண்டும் என நிற்பவர்தாம், ஹர்ஷ் மந்தர் அவர்கள்.

**கேள்வி -** உங்கள் நூல்களை தமிழில் மொழி பெயர்த்திட உரிமை வேண்டும், கிடைக்குமா? நான் உங்கள் வெளியிட்டாளரைச் சந்திக் கட்டுமா?

**பதில் -** என்னுடைய நூல்களை மொழிப் பெயர்க்கும் உரிமையை நான் என் வெளியிட்டா ளருக்கு கொடுக்கவில்லை. நானேதான் வைத்திருக் கின்றேன். நீங்கள் என்னையே தொடர்பு கொள்ளுங்கள்.

நன்றி!

நாம் தொடர்ந்து தொடர்பில் இருப்போம்.

அடுத்து விருதைப் பெற்ற சித்தார்த் வரதராஜன்

மிகச் சிறந்த, பத்திரிகையாளர். இந்தியாவில் பாசிசத்தின் பிடியிலிருந்து மீட்டிட வேண்டும். மீட்டே ஆக வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பவர்.

தி இந்து ஆங்கில நாளிதழின், டெல்லி ஆசிரிய ராக "Editor" ஆக இருந்தவர். பின்னர் ஏற்பட்ட சச்சரவுகளால் தி இந்து குழுமத்திலிருந்து வெளியே வந்தார்.

"The Wire" என்ற இணையதள இதழை நடத்திக் கொண்டிருப்பவர். இந்த இதழ் பாசிசத் திற்கெதிராக தொடர்ந்து போராடிக் கொண்டி ருக்கும் இதழ்.

இதனால் ஆத்திரமுற்ற நமது ஒன்றிய அரசு தனது கிளை அமைப்பான, வருமான வரித் துறை, அமலாக்கத்துறை ஆகியவற்றை ஏவி, அவர்களுடைய இணையதள அலுவலகத்தி லிருந்த, அனைத்தையும் எல்லா எலகட்ரானிக்ஸ் உபகரணங்களையும் அள்ளிச் சென்றார்கள்.

இதுதொடர்பாக மிக முக்கியமான வழக்கொன்றை தொடர்ந்தார். ஒரு (Raid) ஒரு அலுவலகத்தை ஒன்றிய அரசின் பிரிவினர் சோதனை இடும்போது என்னென்ன உபகரணங் களை எடுத்துச் செல்லலாம் என்ற ஒரு வரைவு வேண்டும். அவர்கள் அகப்பட்டதையெல்லாம் அள்ளிச்செல்ல அனுமதி இல்லை என்பதையும் குறிப்பிட்டார்கள்.

வழக்கு, வழக்கம்போல உச்சநதிமன்றம் சென்றது. இதுகுறித்து அவரிடம் உரையாடி னோம். அதற்கு அவர் தந்த பதில்

**கேள்வி -** நீங்கள் உச்ச நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கு என்ன ஆயிற்று?

**பதில் -** இதுவரைக்கும் எந்தத் தீர்ப்பும் வரவில்லை. இந்தத் தீர்ப்பு வந்தால், சோதனை களின்போது அதிகாரிகள், கண்டதையெல்லாம் மூட்டைகட்டி செல்லும் செயலுக்கு ஓர் முடிவுக்கு வரலாம்.

அடுத்து விருதைப் பெற்ற, திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி.வீரமணி அவர்கள்.

அறிமுகம் தேவையில்லை. அவருடைய 90 வயதிலும் அவர் சொல்லும் செய்திக்கு அறிமுகம் தேவை. என்னுடைய அறிவு ஆசான். தந்தை பெரியார், 95 வயது வரை தனது இறுதி மூச்சு வரை தான் ஏற்றுக்கொண்ட, கொள்கைக்காக உழைத்தவர். அதேபோல் நானும் இறுதி பேச்சு வரை நான் ஏற்றுக்கொண்ட கொள்கைக்காக உழைத்திட விரும்புகின்றேன். இது விருது வழங்கிய அரங்கத்தில் பேசியதல்ல. (மாறாக, விடுதலையில் வெளிவந்த செய்தி)

விருதில், தான் பெற்ற தொகையை, பெரியார் பெயரில் அமையவிருக்கும் விரிவான பூங்காவிற்கு தந்துவிடுவதாக அறிவித்தார்.

பேசினோம் :

கர்கரேயைக் கொலை செய்தது யார்? என்ற நூலை எழுதிய எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்களை அழைத்துவந்து, பாராட்டியதை நினைவு கூர்ந்தோம்.

அதேபோல் இப்போது எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்கள் எழுதி வெளிவந்துள்ள பிராமிணிஸ்ட் டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் என்ற நூலின் தமிழ் மொழி பெயர்ப்பை வெளியிடுவதைப் பற்றி கூறியபோது, அவசியம் செய்வோம். அலுவலகம் வாருகள் உரையாடுவோம் என்றார்கள்.

மொத்தத்தில் நிகழ்ச்சி பயன்பல விளைந்தது.

**- MGM**

*அன்பார்ந்த சகோதரிகளே!*

சென்ற இதழில் இறைவனின் கட்டளைக்கு செவிமடுத்தவுடன் கீழ்ப்படிவதில் நமது பெண்கள் ஆண்களுக்குச் சற்றும் சளைத்தவர் களாக இருக்கவில்லை என்பதைத் தெளிவு படுத்தினோம்.

பர்தா அணிவதை எப்படி அன்று நமது நபித்தோழியர்கள் இன்முகங்காட்டி வரவேற்றார் களோ அதேபோல் இன்றும் நமது பல்கலைக் கழக மாணவியர்கள் வரவேற்றார்கள். இதையும் சென்ற இதழில் நாம் சுட்டிக்காட்டியிருந்தோம் இந்தச் செய்தியைப் படித்தவுடன் மேலைநாடு களில் இந்தப் பர்தாவை நோக்கி பாய்ந்தோடி வரும் பெண்களின் எண்ணிக்கை பெருகுகின்றது என்று வாசகர்கள் தரும் செய்திகள் வந்து குவிந்து நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துகின்றன.

மேலைநாட்டு சாதாரண பெண்கள் அல்ல, சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள் இவர்களெல்லாம்கூட இந்தப் பர்தா முறையைப் போற்றிடவும், சிலாகித் துப்பேசிடவும், எழுதிடவும் முன்வந்துள்ளார்கள். அதிசயம்.. ஆனால் உண்மை! பல எழுத்தாளர்கள் அதிலும் பெண் எழுத்தாளர்கள் இந்தப் பர்தா முறைக்கு எதிராக ஒரு பெரும் எழுத்துப் போரையே தொடர்ந்தார்கள்.

பர்தா போடுவதால்தான் முஸ்லிம் பெண்கள் வாழ்க்கையில் முன்னேற முடியாதவர்களாக ஆகிவிட்டார்கள் என முழங்கினார்கள். இப்படி எழுதியவர்களில் பலர் முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள். இந்த முஸ்லிம் பெண் எழுத்தாளர். மேலைநாடுகளையும் அவை போதிக்கும் தத்துவங்களையும் உண்மை என நம்பி ஏமாந்தவர்கள். பிரிட்டன் என்ற ஆங்கிலேய நாட்டையும் இன்னுமுள்ள ஐரோப்பிய நாடு களையும்தான் நாம் மேலைநாடுகள் என்கின் றோம். அமெரிக்காவும் இப்போது பர்தாவை எதிர்ப்பவர்களின் வரிசையில் இணைந்து கொண்டது.

இந்த முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள், மேலைநாடுகள்தாம் நமக்கோர் முன்மாதிரி என்ற அளவில் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர்கள். இந்த மேலைநாடுகளோ விஞ்ஞானம், அறிவியல், நாகரிகம், முன்னேற்றம் என்ற போர்வைக்குள் நின்று கொண்டு இஸ்லாத் தையும், அதனைப் பின்பற்றும் முஸ்லிம்களையும், இஸ்லாமிய ஆடை அமைப்புகளையும் இடித்துக் கொண்டே இருப்பவைகள்.

இந்த மேலைநாட்டு மயக்கத்தில் வீழ்ந்து அரபு எழுத்துலகில் அலாதியான அதிர்வுகளை ஏற்படுத்தியவர்தான் டாக்டர் நவால் அல் சாதவி. இவர் ஒரு பெண் எழுத்தாளர்.

இவருடைய எழுத்துகளால் கவரப்பட்ட பல நாடுகளில் முஸ்லிம் பெண்கள் பர்தாவுக்கு வெளியே வந்தார்கள். நவீன ஆடைகள் என்ற பெயரில் தங்கள் உடல்களை வெளிக்காட்டி உலா வந்தார்கள் வீதிகளில்.

இவருடைய எழுத்துகளால் கவரப்பட்ட பல



# கோ எஜுகேஷனைக் கைவிட்ட பெல்ஜியம்

ஆட்சியாளர்கள் சட்டங்கள் போட்டார்கள். அந்தச் சட்டங்கள், பாட சாலைகளில், பல்கலைக் கழகங்களில், பிரதான சாலைகளில், ஆலைகளில், அரசு அலுவலகங்களில் பெண்கள் பர்தா அணியக் கூடாது. அப்படி அணிந்தால் அவற்றை அப்புறப் படுத்தும் அதிகாரம் காவல்துறைக்கு உண்டு என அறிவித்தன.

துருக்கி, துனீசியா, சிரியா, ஜோர்டான் போன்ற நாடுகள் இவற்றில் இந்தச் சட்டங்கள், வெற்றுப் பிரகடனங்களாக இருக்கவில்லை. நாட்டு நடப்பாகவும் நடத்திக் காட்டப்பட்டன. ஆனால் இந்த எழுத்தாளர் இப்போது தன்னை முழுமையாக மாற்றிக் கொண்டார். அருடைய இப்போதைய எழுத்துகள் பர்தாவை ஆதரிக்கும் பிரச்சாரங்களாகப் பிரவாகமெடுத்து வருகின்றன. அண்மையில் இவர் இப்படி எழுதியுள்ளார்:

"லண்டன் மாநகர வீதிகளில் பெண்கள் ஏறத்தாழ நிர்வாணமாகி நடமாடுவதை நான் பார்க்கின்றேன். அவர்கள் தங்கள் உடலை விற்பனைப் பொருள்களைப்போல் அடுத்தவர் களின் பார்வைக்கு வைக்கின்றார்கள். ஆடைகளுக் கென சில பணிகள் இருக்கின்றன ஆடைகள் இயற்கைச் சூழல்களினால் ஏற்படும் கேடுகளி லிருந்து நமது உடலைப் பாதுகாக்க வேண்டும். அனைவரின் பார்ப்பவர்களின் கீழான உணர்வு களை தூண்டுகின்ற கருவியாக இருக்க கூடாது. ஒரு பெண் தன்னை மனித இனத்தைச் சார்ந்தவள் எனக் கருதினால் அவள் தனது உடலை வியாபார பொருளாகக் காட்சி தருவதை நிறுத்தி கொள்ளட்டும்

**- அல் முடிக்கமா, குவைத் வெளியீட்டெண் : 932**

தனது முந்தைய எழுத்துகளால் பாழ்ப்பட் டுப்போன சமுதாயத்தைப் பற்றி கவலைப்படும் அவர், பர்தா என்ற திரை உள்ளங்களிலிருந்து அகற்றப்பட வேண்டுமே அல்லாமல் உடலை மறைத்துக் கொள்வதிலிருந்து அகற்றப்படக் கூடாது என்கின்றார்.

படித்தவர்கள், அறிவாளிகள் எனத் தங்களை அடையாளம் காட்டிக்கொள்ளும் பலர், ஆடை அணிந்திருக்கின்றோம் எனக்கூறி ஒட்டுத் துணியோடு வாழ்வதை இந்தப் பெண் எழுத்தாளர் இப்படி இடித்துக் காட்டுகிறார்:

பல பெண் பேராசிரியர்கள், மருத்துவர்கள், பொறியியல் வல்லுநர்கள் இவர்களெல்லாம் அரசியல், சமுதாயச் சீரமைப்பு, கலாச்சாரம் இவற்றில் அறிவிலிகளாக இருப்பதையே நான் பார்க்கின்றேன்.

**- அல் முஜத்தமா, வெளியீட்டெண் : 932**

இன்னொரு எழுத்தாளர். அவரது பெயர் இஹ்ஸான் அப்துல் குத்தூஸ். இவர் அரபு மக்கள் அதிகமாகப் படிக்கும் ஒரு கதாசிரியர். நவீனங்கள் என்ற கதைகளை நயம்பட எழுதுபவர். பொழுது போகவும், பொழுதைப் போக்கவும் அரபு மக்கள் இவருடைய எழுத்துகளையே அதிகமாகப் படித்தார்கள். இவருடைய கதைகள் முஸ்லிம் சமுதாயத்திற்கு உள்ளே புகுந்து பெண்களின் மனங்களில் ஒழுக்க நியதிகளை உடைத்தெறிந்து விட்டு வெளியே வர வேண்டும் என்ற எண்ணத்தை வார்த்தன. பூங்காக்கள், வீதிகள், கிளப்கள், கடற் கரைகள், சுற்றுலாவுக்குச் செல்லும் இடங்கள் இவற்றில் ஆண்களோடு ஆடிப் பாடி உல்லாசப் படுவதை 'வாழ்க்கை' என்றொரு விபரீத தத்துவத்தை வளர்த்தன இவரது கதைகள். இந்த நாவல்களால் ஒரு தலைமுறையைச் சீர்குலைத்த பின்'புத்தி' வந்தது இந்தப் புத்தக எழுத்தாளருக்கு இஸ்லாத்தின் நிழலில். இப்போதெல்லாம் இவர் இப்படிக் கூறுகின்றார்:

"எந்த ஒரு பெண்ணுக்கும் அடிப்படைப் பொறுப்பு என்பது அவரது குடும்பம், வீடு, குழந்தைகள் இவைதாம். இது எல்லாரையும் விட எனக்குத்தான் அதிகமாகப் பொருந்தும். என்னுடைய மனைவி இல்லையென்றால் நான் வாழ்க்கையில் அடைந்த மகத்தான வெற்றிகளை அடைந்திருக்க வியலாது. அன்பும் ஆதரவும் நிறைந்தவொரு குடும்ப வாழ்க்கையைச் சுவைத் திருக்க இயலாது. இவையெல்லாம் எப்படி முடிந்தது என்றால் என் மனைவி குடும்பத்தையும், குழந்தைகளையும் ஒரே மனதுடன் கவனித்துக் கொண்டாள்.

நான் என் வாழ்க்கையில் ஒருபோதும் வேலைக்குப் போகின்ற ஒரு பெண்ணை மணந்திட வேண்டும் என விரும்பியதே இல்லை. ஏனெனில் நான் நன்றாக அறிவேன், வீட்டைப் பராமரிப்பதே ஒரு பெண்ணுக்கு மிகப்பெரிய பளுவாகும்." **- அல் அன்பா 18.1.89**

இதில் பிரச்னை என்னவெனில் இந்த எழுத் தாளர்களுக்கு மேலைநாட்டு மோகம் கலைந்து, விவரம் தெரிவதற்குள் ஒரு தலைமுறையைக்



கெடுத்து பல குடும்பங்களில் நிம்மதி என்பதை நிரந்தரமாக இல்லாமல் செய்து விடுகின்றார்கள். இஸ்லாத்தின் வழிகாட்டுதல்களைப் பின்பற்று பவர்களின் வாழ்க்கையில் இதுபோன்ற குளறு படிகள் எதிர்ப்படுவதே இல்லை. அவர்கள் நல்ல தொரு குடும்ப வாழ்க்கையைச் சுவைத்திடவே செய்வார்கள்.

மேலைநாடுகளில் பல பள்ளிகளும், பல்கலைக் கழகங்களும் இப்போது ஆண்களும் பெண்களும் இணைந்து கல்வி கற்கும் முறையைப் புறக்கணித்து வருகின்றன.

அண்மையில் சிரியாவைச் சார்ந்த 'முஸ்லிம் கல்வியாளர்' ஒருவர் பெல்ஜியம் நாட்டுக்குச் சென்றாராம். அங்கே தொடக்கப் பள்ளி நிலை யிலையே ஆண்களுக்கு தனிப் பள்ளிக் கூடங் களும், பெண்களுக்கு தனிப் பள்ளிக் கூடங்களும் நிறுவப்பட்டிருந்ததைப் பார்த்தாராம். உடனே பெல்ஜியம் நாட்டுக் கல்வியியலாளர்களிடம் கேட்டாராம்.


“உங்கள் நாட்டில் ஏன் தொடக்கக் கல்வி யிலேயே இப்படித் தனிப்பிரிவு? நீங்கள் முன் பெல்லாம் ஆண்களும், பெண்களும் இணைந்து கல்வி கற்க வேண்டும் என வாதாடியவர் களாயிற்றே?”

அதற்கு அங்குள்ள பெண் கல்வியாளர் இப்படிப் பதில் சொன்னாராம்:

“தொடக்கப்பள்ளி நிலையிலேயும் ஆண்களும் பெண்களும் கூட இணைந்து கல்வி கற்பதால் ஏற்படும் கேடுகளை நாங்கள் நேரடி யாகக் கண்டோம்.

அண்மைக் காலங்களில் ரஷ்யாவிலும் இதேபோல் பல்கலைக்கழகங்களில் ஆண்களுக் கென்றும், பெண்களுக் கென்றும் தனித் தனியாக நிறுவப்பட்ட கல்வி நிறுவனங்கள் 170 உருவாகி இருக்கின்றனவாம். இவையெல்லாம் இஸ்லாத் தின் வழிகாட்டுதல்களின் பக்கம் இந்த உலகம் வந்து கொண்டிருக்கின்றது என்பதையே காட்டு கின்றன.

The Ideal Muslimah
- MGM








டாக்டர் **வி.எஸ்.நடராஜன்**
முதியோர் நல மருத்துவர்

# முதுமையில் மஞ்சள் காமாலை!

இளமைப் பருவத்தில் ஏற்படும் அளவுக்கு 'முதுமையில் மஞ்சள் காமாலை அதிகமாக ஏற்படுவதில்லை. இதன் முக்கிய அறிகுறியே பசி குறைதல், குமட்டல், வாந்தி ஏற்படுதல். இவற்றோடு உடல் வலி, காய்ச்சல் போன்றவையும் சேர்ந்து வரலாம். கண்களில் மஞ்சள் நிறம் தோன்றும், சிறுநீர் மஞ்சள் நிறமாக வரலாம்.

**காரணங்கள்**

'வைரஸ்' என்னும் நுண்கிருமியால் கல்லீரல் பாதிக்கப்பட்டு மஞ்சள் காமாலை வரலாம். சாதாரணமாக வரும் மஞ்சள் காமாலை Hepatitis A. B, C ஆகிய வைரஸ் நுண்கிருமிகளால் வரக்கூடியது. இந்த வைரஸ் தாக்குதல் குழந்தைப் பருவத்திலும், இளமைப் பருவத்திலுமே மிகுதியாக வரும். இந்த வைரஸ், முதியோர்களை அதிகம் தாக்குவதில்லை. ஏதேனும் ஒரு காரணத்திற்காக உடலில் ரத்தம் ஏற்றப்பட்டு, அந்த ரத்தத்தில் வைரஸ் கிருமி Hepatitis B கலந்திருப்பின் காமாலை வரலாம். மது அதிகமாக அருந்துவதால் கல்லீரல் பாதிக்கப்பட்டும் காமாலை வரலாம்.

சில மாத்திரைகளை உட்கொள்வதாலும் காமாலை வரலாம். காசநோய், மனநோய்க்குத் தரும்மருந்து ஆகியவையும் கல்லீரலில் பாதிப்பை ஏற்படுத்தி, காமாலையைத் தோற்றுவிக்கும். இதுபோன்ற மருந்துகளை எடுத்துக்கொள்ளும் போது கல்லீரல் செயல்பாட்டை அறியும் பரிசோதனைகளைக் குறைந்தது மூன்று அல்லது ஆறு மாதத்திற்கு ஒருமுறை (மருத்துவரின் ஆலோசனைப்படி) செய்து கல்லீரலின் செயல் திறன் பற்றி அறிந்துகொள்வது அவசியம்.

முதுமையில் ஒருவருக்கு காமாலை வந்தால், அதற்கு அநேகமாகப் பித்த நீர்ப்பாதையில் ஏற்பட்ட அடைப்பே காரணமாக இருக்கும். அதாவது பித்த நீர், கல்லீரலில் இருந்து பித்தநீர்க் குழாய் வழியாகச் சிறுகுடலுக்குச் செல்லும் வழியில் அடைப்பு ஏற்படுதல். இவ்வாறு அடைப்பு ஏற்பட காரணங்கள்: கல்லீரல் புற்று நோய், பிற உறுப்புகளில் இருந்து கல்லரலுக்குப் புற்றுநோய் பரவுதல், கணையத்தின் (சிறுகுடல்) அருகில் புற்றுநோய், பித்தப்பையில் கல் அல்லது கட்டி, பித்தக்குழாய் சுருங்கி அடைப்பு ஏற்படுதல் ஆகியவை. இவ்வாறு ஏற்படும் காமாலை மிகவும் நாள்பட்டதாகவும், தீவிரமாகவும் இருக்கும். கண்களில் தோன்றும் மஞ்சள் நிறம் மிகவும் அதிகமாக இருக்கும். சிறுநீர் மிகவும் மஞ்சளாகப் போகும். மலம் வெளுத்து சாம்பல் நிறமாக மாறும். பசி குறையும். உடல் இளைக்கும். உடலில் ஒருவித அரிப்பு ஏற்படும்.

வயிற்றின் வலப்பக்கத்தில் லேசாக வலியும் வரலாம். சில முதியோர்களுக்கு வயிற்றுவலி இல்லாமலேயே காமாலை இருக்கலாம். ரத்தப் பரிசோதனை, எக்ஸ்ரே, அல்ட்ராசோனாகிராம் மூலம் இந்தக் காமாலை வைரஸ் கிருமியால் வந்ததா? அல்லது பித்தநீர் அடைப்பால் வந்ததா? என்பதைச் சரியாகக் கண்டறிய முடியும். அடைப்பால் வரும் காமாலைக்கு நுண்குழாய் அல்லது அறுவை சிகிச்சை மூலம் குணமாக்க முடியும். புற்றுநோய் ஒரு காரணமாக இருந்தால்

அதற்கும் தகுந்த சிகிச்சை அளிக்க முடியும். ஆனால், எதிர்பார்த்த அளவுக்குப் பயன் இருக்காது. முதுமையில் மஞ்சள் காமாலை வந்தால் தீவிரமாகக் கவனித்து சிகிச்சை அளிக்க வேண்டும். இது இளமையில் வரும் சாதாரண மஞ்சள் காமாலைதான் நுண்கிருமியால் வருவது) என்று கவனிக்காமல் இருந்துவிடக்கூடாது.

**பித்தப்பையில் கற்கள்**

பித்தப்பையில் கற்கள் ஏற்படுவதற்கு இன்னமும் சரியான காரணம் கண்டறியப்படவில்லை. பித்தப்பையில் கற்கள் வர அதிக வாய்ப்பு உள்ளவர்கள்:

- வயதானவர்கள்
- பெண்கள்
- உடல் பருமன் உள்ளவர்கள்
- நீரிழிவு நோய் உள்ளவர்கள்
- கல்லீரல் பாதிக்கப்பட்டவர்கள்
- சில மருந்துகளின் பக்க விளைவுகள்

உணவு முறைகளுக்கும், பித்தப்பையில் கற்கள் உண்டாவதற்கும் தொடர்பு உள்ளதா எனப் பல ஆராய்ச்சிகள் செய்யப்பட்டன. அதிக கொழுப்புச் சத்து, மாவுச்சத்து உணவு மற்றும் குறைவான நார்ச்சத்து உணவு உண்பவர்களுக்குப் பித்தப் பையில்கற்கள்வரலாம்(இன்னமும்உறுதிசெய்யப் படவில்லை) ஆனால், மிகவும் சுத்திகரிக்கப்பட்ட சர்க்கரையை (white sugar) உண்பவர்களுக்குப் பித்தப்பையில் கற்கள் ஏற்படலாம் என்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று கூறுகிறார்கள்.

மேலும் மது (சிறிதளவு) அருந்துவதற்கும் பித்தப்பையில் கற்கள் ஏற்படுவதற்கும் சம்பந்தம் இல்லை என்றும் ஆராய்ச்சி நிரூபிக்கிறது. ஒருமுறை வயிற்று வலி ஏற்பட்டு, அதற்கு பித்தப்பை கற்களே காரணம் என்றால் அறுவை சிகிச்சையே சிறந்தது. இப்போது நுண்குழாயை வயிற்றில் சிறிய துவாரம் மூலம் செலுத்தி எளிதாகக் கற்களை அகற்றி விடலாம் (Laparo scopic cholecystectomy). இம்முறையில் ஆபத்து ஏதும் அதிகமில்லை, தைரியமாகச் செய்து கொள்ளலாம். மருந்து, மாத்திரைகளின் மூலம் எளிதில் கற்களைக் கரைக்க முடியாது. வாழ்நாள் முழுவதும் பித்தப்பையில் உண்டாகும் தொல்லைகள் ஏதுமின்றி நலமுடன் வாழலாம்.

(மகிழ்ச்சியைத் தொடர்வோம்!)

நன்றி - முதுமை எனும் பூங்காற்று

# இதய நலம் காக்க



தினமும் உடற்பயிற்சி செய்வது ஏராளமான ஆரோக்கிய நன்மைகளைத் தரும். எனினும் எப்போது உடற்பயிற்சி செய்கிறோம் என்பது முக்கியமானது. ஒவ்வோர் உடற்பயிற்சியும் ஒவ்வொருவிதமான நன்மைகளைக் கொண்டிருக்கும்.

இதய ஆரோக்கியத்திற்கு நலம் சேர்ப்பதற்கு எந்த நேரத்தில் உடற்பயற்சி செய்யலாம் என்பது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வு முடிவு, ஐரோப்பிய ஜர்னல் ஆப்பிரிவென்டிவ் கார்டியாலஜியில் வெளியிடப்பட்டுள்ளது.

அதில், காலை நேர உடல் செயல்பாடு இதயத்திற்கு இதமளிக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதிலும் காலையில், மற்ற நேரங்களை விட 8 முதல் 11 மணி வரை உடற்பயிற்சி போன்ற உடல் செயல்பாடுகளில் ஈடுபடுவது நோய்கள் மற்றும் பக்கவாதம் ஏற்படுவதற்கான அபாயத்தைக் குறைக்கும் என்பது தெரியவந்துள்ளது. இந்த ஆய்வு 86,657 பேர் உட்படுத்தப்பட்டனர். அவர்களில் பெரும்பாலானோர் 60 வயது மேற்பட்டவர்கள். சுமார் 7 நாட்கள் அவர்களின் உடல் செயல்பாடு கண்காணிக்கப்பட்டன.

காலை 8 முதல் 11 மணிக்குள் உடற்பயிற்சி செய்பவர்களுக்கு இதய நோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு குறைவாகவும், பக்கவாதம் ஏற்படுவதற்கான வாய்ப்பு குறைவாகவும் இருந்தது.

நன்றி - முதுமை எனும் பூங்காற்று



vaigarai velicham official

# கோவை மாவட்டம், ஆனைமலையில் இல்லம்தேடி தாஃவா



கோவை மாவட்டம், ஆனைமலையில் 08.01.2023 அன்று இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் பணி நடைபெற்றது. இதில் இஸ்லாம் பற்றிய அறிமுகமும், நமது வேர்கள் பதிப்பகத்தின் மூலமாக வெளியிடப்பட்ட இஸ்லாத்தை ஏற்றோர்களின் வாழ்க்கை வரலாறு புத்தகங்கள், அல்குர்ஆன் தமிழாக்கம் போன்றவற்றை அன்பளிப்பாக வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் ஆண்கள், பெண்கள் அதிகமாக கலந்துக் கொண்டார்கள்.

**இவண் : அன்பகம் தாஃவா குழு.**
**ஆனைமலை (கோவை மாவட்டம்)**





# திருவாரூர் மாவட்டத்தில் இல்லம்தேடி தாஃவா



















12.01.2023 அன்று திருவாரூர் மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களிலும் இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் பணி நடைபெற்றது. இதில் இஸ்லாம் பற்றிய அறிமுகமும், நமது வேர்கள் பதிப்பகத்தின் மூலமாக வெளியிடப்பட்ட இஸ்லாத்தை ஏற்றோர்களின் வாழ்க்கை வரலாறு புத்தகங்கள், அல்குர்ஆன் தமிழாக்கம் போன்றவற்றை அன்பளிப்பாக வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் ஆண்கள், பெண்கள் அதிகமாக கலந்துக் கொண்டார்கள்.

**இவண் : அன்பகம் தாஃவா குழு.**
**நாகை மற்றும் திருவாரூர் மாவட்டம்.**

தலையங்கம்

# நேரத்தை வீணாக்காதே!

மனிதர்களாய் பிறந்த அனைவருக்கும் நேரம் என்பது மிக முக்கியமான ஒன்று. நேரத்தை சரியாக திட்டமிடவில்லையென்றால் நம்முடைய முயற்சிகள் அனைத்தும் வீணாகிவிடும். நம் வாழ்க்கையில் எதை வேண்டுமானாலும் நீங்கள் திரும்பப் பெற்றுவிடலாம். ஆனால், இழந்த ஒரு நொடிப் பொழுதை திரும்பப் பெற முடியாது. இறைவனின் பிற படைப்புகளை சிந்தித்து பாருங்கள்... சூரியன், சந்திரன், பூமி, இவை அனைத்தும் இறைவன் அதற்கு விதித்த காலக் கணக்கில் சரியாக இயங்கி வருகின்றன.

இதன்மூலம் பலகோடி மக்கள் பயனடைந்து வருகின்றனர். உலகம் சரியாக இயங்கி வருகிறது. நம்முடைய வாழ்வில் நேரங்களை வீணடித்து விட்டு நம் வாழ்வின் கடைசி பகுதியில் திரும்பி பார்க்கும்போது நாம் கவலைப்படுவோம். இன்னின்ன நேரத்தில் இவைகளை செய்திருந்தால் நன்மையாக இருந்திருக்குமே என்று கவலைப்படுவோம். இதனால்தான் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்

“பல மக்கள் இழக்கும் இரண்டு அருட்கொடைகள் (அவை) ஆரோக்கியமும் மற்றும் நல்லதைச் செய்வதற்கான இலவச நேரம். (புகாரி)

இந்த இரண்டு விஷயங்கள் பெரும்பாலான மக்கள் பெரிதாக கண்டுகொள்வதில்லை. எதுவரையென்றால் இறைவன் இந்த அருட்கொடைகளை நம்மிடமிருந்து பறிக்கப்படும் வரை.

மேலும் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்

“ஐந்துக்கு முன் ஐந்து நன்மைகளைப் பெறுங்கள். உங்கள் முதுமைக்கு முன் உங்கள் இளமை, உங்கள் நோய்க்கு முன் ஆரோக்கியம், உங்கள் வறுமைக்கு முன் உங்கள் செல்வம், நீங்கள் ஆர்வமாக இருப்பதற்கு முன் உங்கள் ஓய்வு நேரம். உங்கள் மரணத்திற்கு முன் உங்கள் வாழ்க்கை.”

நேரம்தான் நம்முடைய வாழ்க்கை நேரத்தை வீணடித்தது என்பது நம்முடைய வாழ்க்கையை வீணடிப்பது போன்று.

இஸ்லாத்தை பொருத்தவரை அனைத்திற்கும் அல்லாஹ் ஒரு நேரத்தை விதித்திருக்கின்றான். நாம் தொழுகின்ற ஐந்து நேரத் தொழுகை ஒவ்வொன்றுக்கும் ஒரு குறிப்பிட்ட நேரத்தை வைத்திருக்கின்றான். அதை தவறினால் நாம் அந்த தொழுகையை இழந்து விடுவோம்.

ரமளான் நோன்பிற்கு என்று ஒரு குறிப்பிட்ட காலம் அந்த நோன்பை வைப்பதற்கும் திறப்பதற்கும் ஒரு குறிப்பிட்ட நேரம், ஹஜ்ஜுக்கு என்று ஒரு குறிப்பிட்ட காலம், அதில் செய்யப்படும் செய்கைகளுக்கு என்று ஒரு குறிப்பிட்ட நேரம்.

மனிதன் அஞ்சக்கூடிய அவனுடைய மரணத்திற்கும் ஒரு நேரம் உண்டு. அது முந்தவும் செய்யாது, பிந்தவும் செய்யாது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் மனிதன் இறைவனிடம் கெஞ்சுவான்.

“எங்கள் இரட்சகா! எங்களுக்கு சற்றே அவகாசமளிப்பாயாக உனது அழைப்பை ஏற்கிறோம். உனது தூதர்களையும் பின்பற்றுகிறோம் என்று கூறுவார்கள்” (சூரா-இப்ராஹிம்:44)

அல்அஸ்ர் அத்தியாயத்தின் கருத்தை உணர்ந்த இமாம் ஷாஃபி (ரஹ்) மனித சமுதாயத்திற்கு இது ஒன்றே போதுமானது என்றார்கள்.

“காலத்தின் மீது சத்தியமாக, நிச்சயமாக மனிதன் நஷ்டத்தில் இருக்கின்றான். ஆயினும் எவர்கள் நம்பிக்கை கொண்டு நற்செயல்களும் செய்து, சத்தியத்தைக் கொண்டு ஒருவருக்கொருவர் உபதேசிக்கிறார்களோ அவர்களைத் தவிர (அவர்கள் நஷ்டத்திலில்லை) (அல்அஸ்ர்-1,2,3)

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001. Editor M. Gulam Mohamed. Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,** 19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002